# தமிழர் சமயம்

372

இயற்றியவர் :

**கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்.,**

தமிழ்ப்பேராசிரியர்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

வெளியிடுவோர் :

**வெ. சண்முக முதலியார்,**

வாணியம்பாடி.

1940

ஆசிரியர்க்குப் பதிப்புரிமை

[விலை ரூ. 1-4-0.

முதற் பதிப்பு: 1000 பிரதிகள்

விக்கிரம ௵ ஆடி ௴

சக்தி பிரஸ் லிமிடெட், (சாந்தி பிரஸ்), சென்னை,

# முகவுரை

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியரா யிருப்ப வரும், தாகூர் சட்ட விரிவுரையாளரு மாகிய தமிழ்ப் பேரா சிரியர் உயர் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, M. A., M. L. அவர்களால் இயற்றப்பெற்ற "தமிழர் சமயம்" என் னும் இந்நூல் எனது பார்வைக்கு வரப்பெற்றது.

கோடையிலே இளைப்பாறிக்கொள்ள இங்கு வந்த எனக்கு இந்நூல் ஒரு குளிர்தருவா யிருந்தது. முழுதும் படித்துப் பார்த்த பிறகு நான் பெற்ற இன்பம் பிறரும் பெற வேண்டு மென வாய்விட்டுக் கூற நேர்ந்தது.

எந்த ஒரு நூல் தமிழ்நாட்டில் இன்றுவரை தோன்ரு திருந்ததோ அது தோன்றிவிட்டது. தமிழ்நாட்டு நூல் நிலயங்களில் உள்ள குறையும் இதனால் நிரப்பப் பெற்று விட்டது. ஆசிரியர் அவர்களிடத்தில் ஒருங்கே அமையப் பெற்றிருந்த நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று ஆகிய இம் மூன்றும் ஒருருவாகி வெளிவந்ததே இந்நூல் எனக் கூறுவது மிகையாகாது.

பிறமொழிப் புலமை, பழமையுள் ஆராய்ச்சி, நுண்ணிய அறிவு ஆகியவைக ளனைத்தையும் ஆசிரியர் அவர்கள் தன் னுணர்ச்சியோடு கலந்து, இந்நூலில் கொட்டிக் குவித்திருப் பது பெரிதும் பாராட்டக் கூடியதாகும்.

இந்து மதம் என்பதற்கும், தமிழர் சமயம் என்பதற்கும் எவ்வளவு வேற்றுமை யுண்டு என்பதை இந்நூல் மிகத் தெளி வாக எடுத்துக் காட்டுகிறது. தமிழர் சமயம் உலகப் பொது நெறி என்று கூறியிருப்பது சமயவாதிகளும், சீர்திருத்தவாதி களும் மறுக்க முடியாததாகும்.

தமிழர் யார்?, தமிழ் நாகரிகம், தமிழ்க்கலை, சமயக்கலை, மன இயல்பு, உயிர் இயல்பு, சமய ஒற்றுமை, தமிழர் சட்டம்,

செந்நெறி விரிவு ஆகிய பிரிவுகளோடு, தமிழ் மக்களுக்கு எதிர்காலத்தில் வேண்டிய சட்டங்களையும இந் நூலில் எடுத்துக் காட்டி யிருப்பதால் அன்பர்கள் இதனை ஊன்றிப் படிப்பது மிக்க நல்லது.

சுருங்கக் கூறுமிடத்து, இந்நூல் ஆரிய மணல் மேடுகளிற் புதையுண்டு கிடந்த தமிழர் பெருந்தனம் என்றே கூற வேண்டும். இதனைச் சுட்டிக் காட்டியதும் ஒரு தமிழ்க் காசுவேயாகும்.

'M. L. பிள்ளை' என்று நெல்லை வட்டத்தில் திரு. பிள்ளை அவர்களைக் கூறுவதுண்டு. பிற வட்டங்களில் அவர்களை 'நெல்லைத் தமிழ்ச் சைவர்' எனக் கூறுவர். பண்டிதருலகத்தில் அவர்களைத் 'தமிழ்க் கா. சு.' என மறைவாகக் கூறுவது மரபு. இந் நூலை வெளியிட்டு மூன்றுவது பெயருக்கு முற்றும் பொருத்தமானுர்கள் பேராசிரியர் திரு. பிள்ளை அவர்கள்.

இந்நூல் முற்றுப் பெற்றதொன்றன்று. ஆசிரியரும் இந்நூலை முடிக்கவில்லை. இதன் விரிவும், திருத்தமும் எதிர் காலத்தில் நிகழற்பாலன என்று ஆசிரியர் அவர்கள் கூறி விட்டிருத்தலால், தற்காலத் தமிழறிஞர்களுக்கும், எதிர்கால இளைஞர்களுக்கும், வருங்காலப் புலவர்களுக்கும் இந்நூல் "தமிழ்நாட்டுக் கருவூல வழிகாட்டும் முதல்நூல்" எனச் சிறந்து விளங்குமென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

தமிழ்நாட்டிற்கு இதுவரை எவரும் செய்திராத தொண்டு ஒன்றைச் செய்து, தந்து, உதவினமைக்காகப் பேராசிரியர் திரு. பிள்ளை அவர்கட்குத் தமிழுலகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது எனக் கூறுவதோடு அவர்கட்கு எனது அன்புகலந்த வாழ்த்தும், வந்தனமுங் கூறி இவ்வுரையை முடிக்கின்றேன்.

பெங்களூர்,
25.5.40.

கி. ஆ. பெ. விசுவநாதம்,
திருச்சிராப்பள்ளி.

# மதிப்புரைகள்

பசுமலை,
9-6-40

பெரும்புலவரும் இருமொழிப் புலமையொடு நீதிநான்வன்மையுஞ் சிறந்து, தமிழகத்தில் தகும்புகழ் பெற்றிலகும் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எழுதிய "தமிழர் சமயம்" பற்றிய நூலுக்குப் பிறர் கருத்துத்துணை வேண்டாற்பாற்றன்று. அவர்கள் எழுதுமெதுவும் அவர்களின் அகன்ற கல்வியும் மிகுந்த ஆராய்ச்சியும் விளங்க அமைந்திருக்கும். தமிழரின் சமயவரலாறும், தமிழேபோலச் சமயநூற் புலமையும் நிறைந்து சிறந்த அப்பெரியார் ஆய்ந்து கூறுவதை அவர்களிடத்தில் உரிய நன்மதிப்புடையோ ரனைவரும் படித்துப் பயனடைவது தவிர வேறு கூறத்தக்க தில்லை. தமிழர் மதம்பற்றி ஆயவிரும்புவோர் இந்நூலையும் படிப்பார்கள் என்று நம்புகிறேன். ஊக்கத்தோடு, உடல் நலமும் ஆக்கமனத்தும் பெற்று அவர்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் இன்னும் பல்லாண்டு தொண்டாற்றி வீறுபெறுவார்களாக.

**S. சோமசுந்தர பாரதி.**

---

சாத்தூர்,
2-6-40

மாட்சிமிக்க பெரியீர்!

வணக்கம். தாங்கள் தமிழுலகத்துக்குச் செய்துவரும் தொண்டு இணையற்ற பெருமையுடையது. தாங்கள் எழுதிய 'தமிழர் சமயம்' என்னும் நூலை ஆராவிருப்புடன் படித்து, மிக்க மகிழ்வெய்தினேன். அந்நூலுள் யாண்டும் தங்கள்

ஆற்றலும், அறிவும், ஆராய்ச்சித் திறனும், புலத்துறை முற்றிய கலையறிவும், ஒளி செய்து விளங்குவதைக் கண்டேன். அந் நூலில், தமிழர் தோற்றம், நாகரிகம், கலை, சமயம், வழக்கு முதலியவைகளைப் பற்றி, அறிவு சான்ற உண்மைச் செய்திகள் ஆராய்ந்து துணியப் பெற்றுள்ளன. தாங்கள் கைக் கொண்டுள்ள உரைநடையும், எளிமையும், இனிமையும், தூய் மையும், திட்டமும் விரவப்பெற்று அழகுடன் ஒழுகுகின்றது. தமிழர் எதிர்கால வாழ்வில் நலம்பெருகத் தாங்கள் சுட்டி யுள்ள வழிகள் கைக்கொள்ளற்பாலன.

தங்களை நான் வேண்டிக்கொள்வ தொன்றுண்டு. அது, தங்கள் நூலின் பிற்சேர்க்கையாகத் தமிழர் சமயக் கடன்களைத் தொகுத்தும், வகுத்தும், வரிசைப்படுத்திச் சேர்க்கவேண்டு மென்பதுதான்.

தங்கள் நண்பன்,
**T. S. கந்தசாமி.**

---

வெள்ளகால்,
6-6-40

திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, M. A., M. L. அவர்கள், 'தாகோர் லா புரொபசர்' என்ற அரிய பெரிய உயரிய கவுரவப்பட்டம் பெற்ற தனிப்பெருமை யுடையவர்கள், இயற்றி யிருக்கின்ற **தமிழர் சமயம்** என்ற நூலை மிகக் கவனமாகப் படித்தேன். அது, உண்மையும் உபயோகமுமான அறிவு களால் நிரப்பப் பெற்றுள்ளது; விரிந்த விஷயங்களைச் சுருக்க மாகவும் விளக்கமாகவும் சொல்லுகின்றது. அதனைச் சுருக்க மாக, 'அறிவுக் களஞ்சியம்' எனவும், 'ஒழுக்கக் கருவூலம்' எனவும், 'சமய நிலயம்' எனவும் சொல்லலாம்.

இந்நூலில், 'தமிழர் சமயம்' என்ற பேருக்கேற்பச் சமயம் விசேடமாக விவகரிக்கப்பட்டிருப்பதோடு, தமிழர்களின்

பூர்வ மத்திய தற்கால நிலைமைகளும் பழக்க வழக்க ஒழுக்கங் களும் ஒன்றும் விடாமல் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

அறிவு நூல்முறை (விஞ்ஞான சாஸ்திர ரீதி - Scientific methods) யாக மேனாட்டாராய்ச்சியாளரும் இந்நாட்டா ராய்ச்சியாளரும் ஆராய்ச்சி செய்து கண்ட முடிபுகளையும் பண்டைத் தமிழ்நூல் முடிபுகளையும் துணையாகக் கொண்டு எல்லாருக்கும் வேற்றுமை யுணர்ச்சி குறைந்து ஒற்றுமை அதிகப்படும் வண்ணம் விரிந்த நோக்கத்துடன் இந்நூல் எழு தப்பெற்றிருக்கின்றது. சைவ வைணவ சமயங்களில் உள்ள, உண்மையும் ஆச்சரியமுமான ஒற்றுமைப்பாடு, இந்நூலிற் போல, எங்கும் நம்பிக்கை யுண்டாகும்படி கூறப்படக் கண்ட தில்லை.

இந்நூலில், 'சீர்திருத்தங்கள்' 'தமிழர் சட்டம்' என்ற பகுதிகள், என் மனத்தை அதிகமாகக் கவர்ந்து விசேட திருப்தி அளித்தவைகளாம்.

இந்நூல், பண்டிதர்கள் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் முதலாக, பள்ளிச் சிறுவர் முடிவாக, தமிழ் படிக்கத் தெரிந்த ஆண்மக்கள் பெண்மக்களெல்லோரும் படித்துப் பயனடையத் தக்கதாக எழுதப் பெற்றிருக்கிறது.

V. P. சுப்பிரமணிய முதலியார்.

---

நடுக்காவேரி,
5-6-40

அறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் (M. A., M. L.) இயற்றிய 'தமிழர் சமயம்' என்னும் நூலினைப் படித்து இன்புற்றேன். இந் நூலின்கண் தமிழர் என்பார் யாவர் என்பதும், தமிழரின் பண்டை நாகரிக நிலையும் ஆயும்

வாயிலாக எத்தனையோ பல கலைகளைப் பற்றிய செய்திகளும், அறுசமய உண்மைகளும் ஆராயப்பட்டுள்ளன. எனவே, இதனைக் கற்றலால் பல அரிய கருத்துக்களை ஒருங்கு தெரிந்துகொள்ளுதல் சாலும். தேவாரம், திருவாய்மொழி முதலியவற்றின் சான்று கொண்டு சைவத்திற்கும், வைணவத்திற்கும் ஒற்றுமை காட்டியிருப்பது மகிழ்தற்குரியது. சிற்சில ஆராய்ச்சி பற்றிய கொள்கையில் கருத்து வேறுபாடு நிகழ்தல் இயல்பே. எனினும், இந் நூலில் சமயநெறி நின்று கடவுள் வழிபாடு செய்தல் வற்புறுத்தப்படுதலின் சமயப் பற்றுடையோரால் இது விரும்பற்பாலதே யாகும்.

'சீர்திருத்தங்கள்' என்ற பகுதியிற் கூறப்பட்டுள்ள பலவும் இக் காலத்திற்கு ஏற்றனவும் பலராலும் விரும்பத் தக்கனவும் ஆம் என்னும் கருத்துடையேன். இதன் ஆசிரியர் ஆய்ந்து காட்டிய உண்மைகளை உணர்ந்து தமிழ் மக்கள் அனைவரும் சமயநெறியில் ஒருமைபுற வேண்டும் என்னும் விருப்ப முடையேன்.

**ந. மு. வேங்கடசாமி நாட்டார்.**

---

**பல்லாவரம்,**
31-5-40

திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள் தாம் வரைந்த "தமிழர் சமயம்" என்னும் நூலை மிகவும் நன்றாக எழுதி யிருப்பதுடன், தமிழரின் பண்டை நாகரிக வரலாறுகளெல்லாங் கூடிய வரையில் நன்காராய்ந்து அடக்கி, இனி எதிர்காலத்திற்கு வேண்டுந் திருத்தங்களையுஞ் செவ்வனே எடுத்துக்காட்டி விளக்கி யிருக்கின்றார்கள். யான் சென்ற 40-ஆண்டுகளாக ஆராய்ந் தெழுதி யிருக்கும் என்னுடைய

நூற் பொருள்களை அவர்கள் தழுவியே எழுதி யிருத்தலால், அவர்கட்கும் எனக்கும் பெரும்பாலுங் கருத்து வேற்றுமையே இல்லை.

**மறைமலையடிகள்.**
(சுவாமி வேதாசலம்)

---

23-5-40

'தமிழர் சமய' நூல் எனும் ஆராய்ச்சி நூலைப் படித்து மிகவும் பயன் கொண்டேன். அதிற் காணும் முடிபுகள் பெரும்பாலன எனது உளக்கருத்துடன் இசைந்தவை. தமிழ் நாட்டில் திகழ்ந்து விளங்கும் சைவ, வைணவ நெறிகள் தமிழர் சமயம் என்பதில் சிறிதும் ஐயப்பாடு இல்லை. காலக் கோட்பாட்டினால் ஆரியக் கொள்கைகள் நமது மெய்ந் நெறியை மாசுபடச் செய்தன. இவ் வுண்மையைத் தமிழறிஞர்கள் நன்குணர்ந்து, தமதுள்ளத்தே மதித்துக்கொண்டு ஆரியக் கொள்கைகளை விரைவில் களைந்தெறிந்து, தமிழரின் சமய நெறிகளைத் தூய்மையாக்கும் கடப்பாட்டை இன்னே மேற்கொள்ளுதல் மிக மிக வேண்டப்படும்.

இக் கடமையை ஐயந்திரிபற உணர்த்துதற்குத் 'தமிழர் சமய' நூல் இன்றியமையாத கருவி நூலாகும். தமிழ் இலக்கண இலக்கிய நூற்களையும், சைவ வைணவத் திருமுறைகளையும், சைவ சித்தாந்தப் பனுவல்களையும், அயன் மொழிகளையும், கற்றுத் துறைபோகிய திரு. K. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L., அவர்கள் இயற்றி உதவிய இந் நூல் எல்லாப் படியிலும் போற்றத்தகுவதாகும்.

தமிழறிஞர்கள் இந்நூலை நுண்மாண் நுழைபுலன் கொண்டு ஆய்ந்து தெளிந்து விழுப்பயன் கொள்வாராக.

**ந. வே. உமாமகேசுவரன்.**

---

தியாகராய நகர்,
19-7-40

திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல். அட்வகேட் அவர்கள் எழுதி வெளியிட்ட தமிழர் சமயம், என்னும் பெயருள்ள நூலைப் பார்த்தேன். தமிழர் சமய மாநாடு ஒன்று கூடடப்போவதாகவும் அறிந்து மகிழ்ந்தேன்.

திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களால் வெளியான இந்நூல் காண்பதற்குச் சிறிதேயாயினும் தமிழர் தன்னை யறிவதற்கும் தமிழரை மதியாதுள்ள ஏனைய நாட்டு மக்கள் தமிழரின் பண்டைய நாட் பெருமையை அறிந்து கொள்வதற்கும் வேண்டிய எல்லா உண்மைப் பொருள்களையும் சுருக்கி நெருக்கி எழுதியுள்ளார்கள். இந்நூலை ஒவ்வொரு தமிழனும் படித்துப் பார்ப்பதோடு இதன் தொடர்பில் வெளிவரும் மற்ற நூல்களையும் படித்தறிய வேண்டுமென்பது எனது வேண்டுதலாகும்.

தமிழருடைய ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் பெருந்தடையாய் மலைபோல் தடுத்து நிற்பது சாதியும் சில்லரைச் சமயங்களுமேயாம். அவற்றை ஒழிப்பது எளிதான காரியமன்று. அதற்குப் பல அறிஞர்களும் செல்வர்களும் ஒன்றுபட்டு முன்வரவேண்டும். ஆசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எல்லா வகையிலும் தகுதியானவர்கள். ஆங்கில அறிவிலும், சட்ட நூல் அறிவிலும், தமிழ் அறிவிலும், சமயநூல் அறிவிலும், வைதிகப் பற்றிலும் தென்னாட்டில் இவர்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்றே கூறலாம். இவர்கள் முன்னின்று தமிழர் சமய மாநாட்டைக் கூட்டின் பல பெரியோர்கள் கட்டாயம் ஒன்று சேருவார்கள். அதனால் நமது சமயக் கட்டிடம் புதுப்பிக்கப்படும். தமிழர் இழந்த பெருமையை மீண்டும் அடைவார்கள் என்பதே முடிவான நம்பிக்கை யாகும்.

பண்டித எஸ். எஸ். ஆனந்தம்.

சென்னை,
30-7-40

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர், தாகூர் சட்ட விரிவுரையாளர், உயர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், எம். ஏ, எம். எல்., எழுதிய "தமிழர் சமயம்" என்னும் தமிழ்நூலைப் படிக்கும்பேறு வாய்க்கப் பெற்றமைக்கு இறைவனை வழுத்துகிறேன். அறிவிலும், ஆற்றலிலும், மொழிப் பற்றிலும் சமயப் பற்றிலும் சிறந்தொளிரும் திரு. பிள்ளையவர்களையும், அவர்களுடைய தமிழ்ப் புலமையையும் பிற மொழிப் புலமையையும் தமிழ் நாட்டார் நன்கறிவார்கள். பண்டைத் தமிழாராய்ச்சி வல்ல அவர்கள் தமிழ்மக்கள்மாட்டுள்ள அளவிலா ஆர்வத்தால் இயற்றியளித்த ஆராய்ச்சி யருங்கலப் பேட்டகம் என்றே "தமிழர் சமயம்" என்ற நூலை அறுதியிட்டுக் கூறலாம்.

கற்றோன்றி மட்டோன்றாக் காலத்தே யுடன்தோன்றி மூத்த பழங்குடியாகிய தமிழ் மக்கட்குச் சாத்திரமேது, சமயமேது, மொழியேது, நீதியேது, முறையேது, கலையேது என்று உறுக்கிக் கேட்டுத் தருக்கித் திரியும் பெருமக்கள் இன்னும் இலரோ? அதிலும் மேனாட்டு முறைப்படி ஆராய்ச்சிக் கண்ணாடி பூண்டு துருவித்துருவி யாராய்ந்து அத்துறைகளில் உண்மைகண்டவிடத்தும், தன்னலமன்றி மெய்ந்நலம் பேணப் பெற்றிமையால், அதனை ஏற்க மறுக்கும் பேரறிஞர்களும் இலரோ? இலராதல் இல்லை; உளர்; ஒரு சிலரேனும் உளர். ஐயம் நிறைந்த அத்தகைய ஐயனார்கட்கும் ஆணித்தரமான விடையளிப்பதாகும் திரு. பிள்ளை யவர்கள் எழுதியுதவிய இவ்வொப்பற்ற ஆராய்ச்சி நூல். அறிவுக்கலைகள், ஆராய்ச்சிக் கலைகள், கருவிக் கலைகள், கவின் கலைகள் எல்லாம் தமிழ்நாட்டு அறிவுக் கனிகளிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பெற்ற முழுமணிகளே என்று அழுத்தந் திருத்தமாக இனிய எளிய திருந்திய தமிழ் நடையில், இந்நூல் நிறுவிச்

செல்வது தமிழர்க்கே தனிப்பட்ட ஒரு சிறப்பையளிப்பதாகும். இந்நூலிற் கண்ட உண்மைகள் எல்லாம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுதல் வேண்டும் என்ற கட்டுப் பாடில்லை. எனினும், அவை ஆழ்ந்து கருதி யாராய்ந்து துணிவுடன் வெளியிடப்பட்ட ஆராய்ச்சிக் கருத்துக்களாதலின் அவற்றைத் தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் பரிந்தேற்றுப் படித்தல் தலையாய கடனாகும். தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும், அவ்வழி இந்தியப் பெருநாட்டிற்கும் ஒருங்கே தனிப்பெருமை யளிக்கவல்லதாய் விளங்கும் இச்சிறு ஆராய்ச்சியின் விரிவை விரைவில் திரு. பிள்ளையவர்கள் எழுதி வெளியிடுமாறு தமிழறியும் பெருமான் உண்ணின்று ஊக்குதல் வேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

**காழி. சிவ. கண்ணுசாமி, பி.ஏ.**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழர் யார்? | .... | 1 |
| 2. | தமிழர் பண்டை நாகரிக நிலை | .... | 23 |
| 3. | நாட்டியக் கலை | .... | 34 |
| 4. | இசைக் கலை | .... | 36 |
| 5. | சமயக் கலை | .... | 46 |
| 6. | இந்து மதம் ஒரு மதமன்று | .... | 72 |
| 7. | தமிழர் மெய்க்கலை | .... | 75 |
| 8. | மன இயல்புகள் | .... | 81 |
| 9. | உயிர் இயல்பு | .... | 84 |
| 10. | ஆகமம் கூறும் முதல்கள் | .... | 89 |
| 11. | சீர்திருத்தங்கள் | .... | 107 |
| 12. | கோயில் புகுதல் | .... | 117 |
| 13. | பெண்ணுரிமை | .... | 119 |
| 14. | மக்கள் முன்னேற்றம் | .... | 126 |
| 15. | சமய ஒற்றுமை | .... | 129 |
| 16. | தமிழர் சட்டம் | .... | 132 |
| 17. | செந்நெறி விரிவு | .... | 138 |



கா. சுப்பிரமணியப் பிள்ளை, எம்.ஏ., எம்.எல்.,
தமிழ்ப்பேராசிரியர், அண்ணாமலைநகர்.

ஓம்

## அகில இந்திய தமிழர் மத மகாநாடு (1940)

# வரவேற்புரை

இச் சென்னைமா நகரில் திறக்கப்பெற்று விளங்கும் இம்மா நாட்டிற் கூடியுள்ள அன்பர்கள் யாவருடைய வரவும் நல்வரவாகுக. அவர்கள் யாவருக்கும் என்னுடைய மனமார்ந்த வணக்கம் உரியதாகின்றது. வசதிக் குறைகள் ஒன்றையும் பொருட்படுத்தாது தமிழன்பர்களெல்லாரும் ஒத்துழைத்து இம் மாநாட்டைச் சிறப்புற நடத்தித் தமிழர் சமய சமுதாய முன்னேற்றத்துக்கு வெற்றி தருமாறு வேண்டிக் கொள்கிறேன்.

தற்காலத்தில் இச் சென்னைப்பதியானது தமிழர்க்குச் சென்னிப் பதியாகத் திகழ்கின்றது. ஏனெனில், அது அரசரது மாகாணத் தலை நகராய் இருப்பதுடன் இங்குள்ள பல்கலைக் கழகத்திற்கும் பிற சங்கங்களுக்கும் தமிழ் வாணர் பலரும் அடிக்கடி வந்து அறிவாராய்ச்சிப் பயன் கொண்டுங் கொடுத்தும் செல்லுகின்ற இடமாய் இருக்கிறது. இந்நேரத்தில் முதலாவது உலகப் பெரும் போரினும் கடுமையான அச்சம் நிறைந்த இரண்டாவது உலகப் போர் நிகழ்ந்து வருகின்றது. அதன் இடையூறுகளுக்கு உட்படாமல்

உலகப் பேரரசராகிய மாட்சிமை தங்கிய ஆங்கில ஆட்சியின் கீழ்ப் பெறலரும் அறிவுச் செல்வமாகிய நமது சமயத்தையும், அதன் கொள்கைகளை இணையற்ற தெளிவுடன் இனிமையாக விளக்குந் தமிழ்மொழியையும், அவற்றின் சார்பான நமது உரிமைகளையும் பேணிப் பாதுகாப்பதற்கு நாம் இவண் குழுமி யிருக்கின்றோம். நம்மைப் போற்றி ஆளும் அரசருக்கு முடிந்த நிலை வரமான வெற்றி கிடைக்கும் பொருட்டு நாம் இறைவன் திருவருளை வழுத்துவோமாக. நமது சமயக் கொள்கைகளையும், உரிமைகளையும் பற்றி நன்கு பேசவும் வழக்கிடவும் இடம் கொடுத்து நம்மை ஆதரிக்கும் ஆங்கில அரசர்க்கு நமது நன்றி உரித்தாவதுடன் நமது மொழியின் பெருமையைச் சென்ற நூற்றாண்டிலும், இந்த நூற்றாண்டிலும் உலகத்துக்கு விளக்கிய பாதிரிமார்கள் செய்த நன்றியை நாம் ஒரு நாளும் மறக்கற் பாலமல்லேம்.

ஆங்கிலம் திருந்தியநிலை அடையு முன்னரே தமிழ் மேலான செம்மொழியாய் இருந்தது. அது கிரீக் மொழியினும் மென்மையும் திட்பமும் வாய்ந்தது; லத்தீனினும் வளம் வாய்ந்தது, ஆற்றலினும் பூரணத் தன்மையினும் ஆங்கிலத்தையும் ஜெர்மன் மொழியையும் ஒத்திருப்பது என்றார் டாக்டர் வின்ஸ்லோ. வடமொழியின் உதவியின்றி இன்றும் என்றும் நிலைபெற்று தமிழ் நன்கு வழங்கக்கூடியது என்றார் டாக்டர் கால்டுவெல். தமிழைப்போல ஆற்றலும் சுருக்கமும் அமைந்த மொழி வேறில்லை; மனத்தின் தன்மையைத் தெளிவுற விளக்கும் மெய்க்

கலைமொழி தமிழையன்றி வேறில்லை என்றார் பெர்சிவல் பாதிரியார். பிற எம் மொழிக்கும் பின்னிடாத உயர்ந்த தமிழ் மொழியை இந்திய அரசாங்கத்தாரும் பல்கலைக் கழகத்தாரும் தக்கபடி மதிப்பதில்லை; உயர்ந்த தமிழ் இலக்கியங்கள் அறிவிற் சிறந்த ஒரு கோடி மக்களின் உள்ளத்தைத் திறந்து காட்டுந் திறவுகோலாய் இருந்தும் மிகச் சிலரே அவற்றைக் கற்கின்றார்கள் என்றார் டாக்டர் ஜி. யு. போப்.

இந்திய நாகரிகத்தின் அடிப்படை தமிழர் நாகரிகமும் அவர் மொழியும் சமயமும்ஆம் எனச் சின்னாட்கு முன் உறுதி கூறிய டாக்டர் சில்பர்ட் சிலேட்டரின் பெரும் நன்றியை நாம் எவ்வாறு மறத்தல் கூடும்? அவருடைய சில அருமையான மொழிகளை இங்கே கூறுதிருக்க முடியவில்லை. மிகப் பழமையான நாகரிகம் இன்றும் உயிரோடிருக்கும் திராவிட நாடே என்றும் அறிவு வணிகப் போக்கில் கீழ் நாடுகளையும், மேலை நாடுகளையும் இணைக்கத் தக்கவர் ஆங்கிலம் அறிந்த தமிழ் மாணவரென்றும் அவர் கூறினார்.

"Since Dravida is at once the part of India where the most ancient culture still survives and the part which is closest in touch with the twentieth century, in the flow of intellectual commerce between the East and the West, the English—speaking students of Tamil will supply many of the most active intermediaries."

தமிழர் சமயக் கொள்கையானது பொது முறையிற் பொது மறையாகிய திருவள்ளுவரிற் குறிக்கப் பெற்றுள்ளன. அவற்றின் சாரம் "தமிழர் சமயம்" என்னும் நூலிற் காணப்படும். சைவத்திற்கும் வைணவத்திற்கும் உள்ள ஒற்றுமை திருமுறை நூல்களையும் திருவாய் மொழியையும் ஒத்துப் பார்ப்பதால் இனிது விளங்கும். முழுமுதற் கடவுள் மூவராலும் அறிய முடியாதவர் என்னும் நம்மாழ்வார் "திருமால் நான் முகன் செஞ்சடையான் என்றிவர்கள்—பெருமான் தன்மையை யாரறிகிற் பார்பேசியென்" என்றது காண்க. "மூவரும் அறிகிலர் யாவர் மற்றறிவார்" என்றது திருவாசகம். இறைவன் அறிவு வடிவானவர் என்பார் திருவாய் மொழியுள், "உணர்வின் மூர்த்தி" என்றார். சில வைணவ நூல்கள் திருமாலுக்கு உருவ மாத்திரமே கூறவும் நம்மாழ்வார் "மூவுருவன் எம் அருவன்" என்றார். "அறிவே உன்னை யல்லால் அடையாது எனது ஆதரவே" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். "அருவமும் உருவுமாகி" என்ற சைவ நூல் அடியுங் காண்க. "மூவருமாகி இருவருமாகி முதல்வனுமாய் நின்ற மூர்த்தி" என்ற தேவார அடியையும் 'ஏகமூர்த்தி யிருமூர்த்தி மூன்றுமூர்த்தி பல மூர்த்தி' என்ற திருவாய்மொழி அடியையும் ஒப்பிட்டு நோக்குக. "என்று மோரியல் பினரென நினைவரியவர்" என்ற அடி திருஞான சம்பந்தர் தேவாரத்திலும், நம்மாழ்வார் திருவாய் மொழி முதற் பதிகத்திலும் காணப்படுகின்றது. இறைவன் உடலில் உயிர்போல எங்கும் கலந்திருக்கின்றான் என்று சைவ நூல் கூறும். "உடல் உயிர் கண்ணருக்கன் அறி

வொளிபோற் பிரியவரும் அத்துவிதமாகும்" என்றது சிவப்பிரகாசம். "உடன் மிசையுயிரெனக் கரந்தெங் கும் பரந்துளன்" என்றார் நம்மாழ்வார். பாலில் நெய்போல் என்ற உவமையும் தேவாரத்திலும் திரு வாய் மொழியிலும் காணப்படும். "பாலிற் படு நெய் போல் மறைய நின்றுளன்" என்பது அப்பர் திரு வாக்கு. நம்மாழ்வார் "கறந்த பாலுள் நெய் போலி வற்று ளெங்குங் கண்டு கொள்" என்றார். "ஆணல் லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன் காணலு மாகான்" என்ற திருவாய் மொழி அடியையும், ஆணல்லை, பெண்ணல்லை அலியுமல்லை என்ற தேவார அடியையும் ஒத்து நோக்குக. "உயிர்களெல்லா உலகமு முடையானே" என்றமையால் உயிர்களும் உலகமும் இறைவனுடைமை என்பது நம்மாழ்வார் கருத்தாகும். உலகிலும் உயிரிலும் வேறற இறைவன் கலந்திருப்பதுபற்றி "உலகும் உயிரும் தானேயாய்" என்றார் நம்மாழ்வார். இக்கருத்துக்கள் சைவத்திலும் காணப்படுதல் தெளிவு. "அவன் என்னுள் இருள் தான் அறவீற்றிருந்தான்" "சார்ந்த இரு வல்வினை களுஞ் சரிந்து மாயப் பற்றறுத்து" என்றமையால் இருள், வினை, மருள் என்ற மூவகைப் பாசம் உயிர்க் குள்ளன என்பது நம்மாழ்வார் கருத்தாகும்.

நம்மாழ்வார் திருமாலைச் சிறப்பாக வழிபட்ட காரணம் திருமாலின் வடிவில் நின்று குருவாய் இறை வன் அவருக்கு அருள்புரிந்தமையே என்க. குருவைக் கடவுளாக வழிபடுதல் மரபு. திருவாய் மொழி முதற் பாட்டில் "மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்"

என்பது காண்க. "என்னையாளுடைய கருமா மேனி யன்" என்றதும் அது. இறைவனுக்குத் திருமால் போல அயனும் அரியும் திருவடிவங்களாதலால் அவர்களையும் தான் வழிபடுதல் குறிப்பான், "அவா வறச் சூழரியை யயனை யரனை யலற்றி" என்றார் நம் மாழ்வார். பிறரும் தங்கள் மனத்துக்கு ஒத்தவடிவில் இறைவனை வழிபடலாம் என்பார் "இறைஞ்சுமின் மனப்பட்டதொன்றே" என்றார். இறைவன் ஞான சத்தியே திருமாலிலும் அவர் அவதாரங்களிலும் கலந்து அருள் செய்தது என்பார், "வருந்தாத ஞானமாய் வரம்பின்றி முழுதி யன்றாய்" என்றார். சத்தியின் வடிவே தென்னில் தடையிலா ஞான மாகும்" என்றது சிவஞான சித்தியார்.

தலைவனாகக் கடவுளையும், தலைவியாகத் தன்னையும் கூறும் மரபு தேவாரத்திலும் திருவாய் மொழியிலும் காணப்படும். திருஞான சம்பந்தர் "உள்ளங்கவர் கள்வன்" என்றது போலத் 'தாமரைக் கண்ணன் கள்வன்,' "என்னுயிரைக் கள்கின்ற வாறறியீர்" என்றார் நம்மாழ்வார். நம்மாழ்வார் காலத்தில் திரு நீறே இருசமயத்துக்கும் பொது அடையாளமாக இருந்தது. "கரிய மேனி மிசை வெளிய நீறு" "நீறு செவ்வே யிடக்காணில் நெடுமாலடியார் என்று துள்ளும்" முதலிய நம்மாழ்வார் வாக்கியங்களுள் நீறு என்பது திருநீற்றைக் குறிப்பதுபோலும். இவ்வொற் றுமைகளை விரிப்பிற் பெருகுமாதலின் விடுக்கின்றாம்.

அறுவகைச் சமயம் என்பது திருவாய்மொழி யிலும் தேவாரத்திலும் பேசப்படுகின்றது.

"பிணக்கற அறுவகைச் சமயமும் நெறியுள்ளி யுரைத்த
கணக்கறு நலத்தனன் அந்தமிலாதியம் பகவன்."
—திருவாய்மொழி.

"அறிவினால் மிக்க அறுவகைச் சமயத்து
அவ்வர்க்காங்கே ஆறருள் புரிந்து" —தேவாரம்.
ஒன்றது பேரூர்வழி யாறதற்குள. —திருமந்திரம்.

இத் திருவாக்குகளிற் குறிக்கப்பட்ட ஆறு சமயங்கள் தமிழரது தெய்வங்களாகிய சிவன், அம்மை, திருமால், பிள்ளையார், முருகன், கதிரவன் என்பவர்களது வழிபாடுகளேயாம். சிவ வழிபாடு தமிழரால் தொடங்கப் பெற்றது என்பது தற்கால ஆராய்ச்சிகளாற் புலனும். அது தமிழர் சமய நூலிற் காட்டப்பட்டது. இருக்கு வேதத்தில் சிவலிங்க வழிபாடு இகழப் படுவதால் அது ஆரியருக்கு ஆதியில் உரியதல்ல என்பது தெளிவு. உருத்திரன் என்ற ஆரியச் சொல் செம்மையன் என்று பொருள்படும். தமிழில் செம்மை என்ற சொல்லின் அடியாகச் சிவப்பு, சிவம் என்ற சொற்கள் தோன்றின். சிவனுக்குத் திருமேனி செம்மேனியே யாதலால் சிவ வழிபாடே உருத்திரவழிபாடாக ஆரியத்துள் தழுவப்பட்டது.

ஆணும் பெண்ணுமாகக் கடவுளை வழிபடும் வழக்கம் ஆதியில் தமிழர்க்கே உரியது. அச்ச வடிவாகவோ அன்பு வடிவாகவோ உள்ள அம்மன் கோயில் இல்லாத பண்டைச் சிற்றூர் தமிழ்நாட்டில் இல்லை. கொற்றவை, காடுகிழாஅள் முதலியன அச்சவடிவாய் நின்ற அம்மை பெயராகும். பழையோள், மாயோள்,

உமை முதலியன அன்பு குறிக்கும் அம்மை திருப் பெயர்களாம். காளி வணக்கம் தமிழர்க்குரிய தென்றே வடநாட்டில் கருதப்படுகின்றது.

அம்மையின் ஆண்வடிவமே திருமால் என்று சிவாகமங்கள்கூறும். மாயோள் வழிபாடே மாயோன் வழிபாடாயிற்று என்பதும் குழலூதும் கண்ணன் தமிழ்த் தெய்வமே என்பதும் தமிழ் நூலாராய்ச்சியின் முடிவாகும்.

முருகனும் பிள்ளையாரும் தமிழர் தெய்வங்களே என்பது தெளிவு. யானையில்லாத இடத்திற் பிள்ளை யார் வணக்கம் ஏற்பட்டிராது. முருகன் குறிஞ்சி நிலக் கடவுளே. ஞாயிற்றின் வழிபாடு தொல்காப் பியத்துள் கூறப்பட்டிருப்பதாதலின் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னேயே அது தமிழர்க்குள் தோன்றி யிருக்கவேண்டும். வெப்பம் மிகுந்த தென்னாட்டில் தான் ஞாயிற்றின் இயல்பு மக்கள் நினைவில் அடிக்கடி புலனாகும். ஆரிய நூலுள் கதிரவன் வழிபாடு பிற் காலத்தில்தான் பேசப்படுகின்றது.

இக் காரணங்களால் அறுவகைச் சமயம் தமிழ ருடையனவே என்பது தெளிவுபடும். இவ்வாறு சம யங்களும் கடவுளை வடிவத்தின் வழிபடும் நெறி களாகும்.

ஒரு காலத்தில் ஆறு சமயங்களுக்கும் பொது வாகக் கடவுளின் அருவுருவாகிய சிவலிங்க வழிபாடு விளங்கிற்று. தமிழர் கருத்தே தந்திரங்களிலுள்ளது.

வடநாட்டுத் தந்திரங்களில் ஒன்றாகிய லிங்கார்ச்சன தந்திரத்துள், ஒருவன் கணபதி மதத்தையாவது, கௌமார சமயத்தையாவது, சைவ சமயத்தையாவது, வைணவ சமயத்தையாவது, சாத்தேய மதத்தை யாவது, சௌர மதத்தையாவது தழுவி ஒழுகினாலும் முதலில் சிவலிங்க பூசை செய்துவிட்டுத் தன் இஷ்ட தேவதையை வழிபட வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலின் ஒரு பெருஞ் சமயத்துள் ஆறு பகுதிகளாகவே அறு சமயங்களும் விளங்கின என்பது ஊகித்தற்பாலது.

கந்தழி என்ற நெருப்பின் பெயர் ஒடுக்குங் கடவுளாகிய உருத்திரனுக்குப் பேராய் அமைந்த பின்னர் முழுமுதற் கடவுளுக்குப் பேராயிற்று. தத்துவங்கடந்த தனிப்பொருள் என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் அதனைக் கூறுவர். 'ஆக்கி அளித்தழிக்குங் கந்தழியின் பேர்உருவே' என்ற இன்னிலை வாக்கியமுங் காண்க.

முழுமுதற்கடவுளின் உண்மையும் தன்மையும் உணர்ந்து அவரை அருவமாக வழிபடக் கருதிய தமிழர் அவரது எண்குணங்களையும் நினைந்து அவரைத் தொழுதனர். அந்நெறியே, தமிழர் செந்நெறியாகும். அது திருவள்ளுவர் கடவுள் வாழ்த்திற் குறிப்பிக்கப்பட்டது. கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் முதல் எட்டுக் குறள்களில் இறைவனின் எண்குணங்களையும் முறையே கூறி ஒன்பதாவது குறளில் எண்குணங்களையும் தொகுத்துச் சுட்டிப் பத்தாவது குறளில் இறை வணக்கத்தின் இன்றியமையாமையைப் பயன்

கூறுமுகத்தால் வற்புறுத்தினர். வான்சிறப்பு என்ற இரண்டாவது அதிகாரத்தில் கடவுள் திருவருளினுல் நடைபெறும் முத்தொழில் அல்லது ஐந்தொழிலே மழை யின்வைத்துக் கூறிப் போந்தனர். இறைவனே அரு வுருவ வடிவிலோ உருவ வடிவிலோ வழிபடலாம் என்பது குறிப்பிப்பார், கடவுள் வாழ்த்து அதிகாரத் தில் ஏழு திருக்குறளில் அடி அல்லது தாள் என்ற சொல்லே வழங்கினுர்.

அருவவழிபாடு செய்ய இயலாத யாவரும் அரு வுரு வழிபாட்டை மேற்கொண்டனர். அவருள்ளும் உருவ வழிபாடு செய்ய விரும்பினவர்கள் ஆறு சம யங்களில் ஒன்றிற்குரிய முறையினைப் பின்பற்றி ஒழு கினர். அவர்கள் யாவரும் அருவுருவ வழிபாட்டை யும் கைக்கொண்டிருந்தமையால் மேற்கூறிய லிங் கார்ச்சன தந்திர விதி ஏற்பட்டதாகும்.

இப்பொழுதும் சிவன் கோயில்களில் திருமால், சத்தி, முருகன், பிள்ளையார், கதிரவன் முதலியோர் களுக்கு உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. திரு வனந்தபுரத்தில் பத்மநாபசுவாமி கோயிலில் திருமால் சயனித்திருக்கும் இடத்தில் சிவலிங்கம் காணப்படு கிறது. பிற்காலத்தில் வைணவம் தனி மதம் ஆய் விடவே, பெருமாள் கோயில்களில் சிவ வடிவங்களைக் காண்பது அரிதாயிற்று. எனினும், பிள்ளையாரை விசுவக்சேனர் என்ற பெயரால் வைணவர் வழிபடு கின்றுர்கள். கதிரவன் வழிபாட்டையும் வைணவர் கைவிடவில்லை. அம்பாளையும் முருகனையும் வைணவர் பலர் வழிபடுகின்றுர்கள்.

பிள்ளையார் கோயில்களிலும், முருகன் கோயில் களிலும் சிவலிங்கமும் அம்மை வடிவமும் பல இடங் களில் அமைக்கப்பெற்றுள்ளன. சத்திக்குத் தனிக் கோயில் கட்டி வழிபடுகின்றவர்களும் சிவலிங்கத்தை அம்மை திருமுன் அமைப்பது வழக்கம். வங்காள நாட்டில் காளி கோயில்களிலெல்லாம் சிவலிங்கம் காணப்படுகின்றது. கதிரவனுக்குத் திருவடிவம் சைவ வைணவக் கோயில்களில் அமைந்திருப்பதே யன்றித் தனிக் கோயில் கதிரவனுக்குக் காண்பதரிது. சூரிய னார் கோயில் என்னுமிடத்தில் மட்டும் சூரியனுக்குத் தனிக் கோயில் உள்ளது.

அறுசமயத் தெய்வங்களுக்குப் பூசனைபுரிவோரே தொல்காப்பியத்துள் 'அறுவகைப் பார்ப்பனர்' எனப் பட்டனர். "ஆறு சமயத்தவரவரைத் தேற்றுந் தகை யன—தேறிய அன்பரைச் செந்நெறிக்கே ஏற்றுந் தகையன" என்ற தேவார அடிகளால் ஆறு சமயத் தின் வழி ஒழுகியவர்கள் அந்நெறிகளின் முடிவாகச் செந்நெறியாகிய பெருநெறியை மேற்கொண்டனர் என்று தெரியவருகிறது.

குமரப்பெருமானையே பாடும் அருணகிரிநாதர் "ஆறுறையும் நீத்து அதன்மேல் நிலையைப் பேறு அடியேன் பெறுமாறுளதோ" என்று, செந்நெறி முடிவைக் குறிப்பித்தல் காண்க.

ஆதலால், தமிழர் சமயமானது தொல்காப்பியத் துக்கு முன்தொட்டே ஆறு சமயங்களும் அவற்றின்

மேலான செந்நெறியும் கலந்த ஒரு பெருநெறியாய்த் திகழ்ந்து வந்திருக்கின்றது என்பது போதரும். ஆறு சமயத்துள் திருமால் சமயமானது ஆரியத்தாக்கால் தனிப்பட்ட சமயமாய்ப் பிரியினும் அச் சமயப் பெருந் தலைவராகிய நம்மாழ்வாரின் உயர்ந்த கருத்துக்கள் தமிழர் செந்நெறிக்கு உரியன என்பது ஆராய்ச்சியாற் புலனாகும். சமையம் என்பது சமைக்கப்பட்டது என்ற பொருளில் ஒரு தெய்வத்தை வழிபடுதற்கு வகுக்கப்பட்ட நெறியினைக் குறிப்பதாகும். சமையம் என்ற சொல் சமயம் என்று மருவிற்று. வடமொழியில் அச்சொல் நெறி என்றும் பொழுது என்றும் பொருள்படும். சமயம் என்ற தமிழ்ச்சொல் system என்ற ஆங்கிலச் சொல்லின் கருத்தைக் குறிப்பிப்பது.

பிற்காலத்தில் வடநாட்டிலிருந்து பல சமயங்கள் வந்து கலந்தபின் அறுசமயங்கள் என்ற சொற்றொடர் பல மதத் தொகுப்புகளையும் குறிப்பதாயிற்று. உலகத்தைப் படைக்குங் கடவுள் இல்லை என்னுஞ் சமயங்களாகிய உலகாயதம், நாலு வகைப் புத்த மதம், சமணம் என்னும் ஆறும் அறுசமயம் எனப்பட்டன, அவ்வாறே வைதிக நூலார் தார்க்கீகம், மீமாம்சகம், ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்னும் ஆறினையும் அறுசமயம் என்றனர். சைவத்தின் செந்நெறிக்குக் கீழ்பட்ட வாமம், வைரவம் முதலிய பன்னிரண்டு சமயங்கள் அகச்சமயம் ஆறும், அகப்புறச்சமயம் ஆறும் என இரு பகுதிகளாகப் பகுக்கப்பட்டன. வெவ்வேறு தத்துவங்களில் முடிகின்ற ஆறு வகையான தத்துவக் கொள்கைகளைத்

திருமூலர் " ஆறு அந்தம் " என்றனர். அவை வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம் எனப்படும். இங்கே கூறிய பல தொகுப்புகளும் தமிழர் அறுசமயத்துக்கு வேறாய் ஆரியத் தொடர்பால் ஏற்பட்டன என அறிக. தமிழரது அறுசமயமும் ஒரு சமயமே. பிரிந்த மால் சமயத்தை மீட்டும் இணைத்துக்கொள்வதே நமது கடமையாகும்.

இனி கோயில் வழிபாடு என்பது தமிழர்க்கு ஆதியில் உரியது என்பதே நாம் மனதில் வைக்க வேண்டும். ஆரியருக்கு ஆதியில் நெருப்பு வழிபாடே உரியதாயிருந்தது. பின்னர் இருவகையாரும் இருவகை வழிபாட்டையுந் தழுவிக்கொண்டனர்.

தமிழ்நாட்டிலுள்ள பொதுவான சைவ, வைணவக் கோயில்களெல்லாம் தமிழருக்குரியனவே. வைதிகர்கள் கோயில் வழிபாட்டின் பகுதிகளுக்கு வைதிகத் தொடர்பும் பொருளும் கூறுதல் வழக்கம். வரலாற்றாராய்ச்சியால் தமிழர் அவற்றின் உண்மையை அறிந்து நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும். சிவன் கோயிலில் சிவலிங்கத்தை ஓமகுண்டத்தில் வளரும் சோதிக்கு அறிகுறி யெனவும், நந்தியை யாகப் பசு எனவும் பலிபீடத்தை யாகஞ்செய்யும் ஊனை வைக்குமிடமெனவும் கொடிமரத்தை வேள்வித் தூணெனவும், வைதிகர்கள் சிலர் கூறுவர். சிந்து தேசத்தில் உள்ள ஹாரப்பாமோஹஞ் சொதாரோ என்னும் இடங்களில் ஆரியர் வருவதற்குமுன் சில்லாயிரம் ஆண்டுகளாகக்

கிடந்த சிவலிங்கங்கள் கண்டெடுக்கப்படுவதாலும் நெருப்பு வழிபாட்டைப்போற்றும் இருக்கு வேதம் சிவலிங்கத்தை இகழ்வதாலும் ஆரியர் நெருப்புச் சோதியைச் சிவலிங்கம் உணர்த்தும் என்பது வரலாற்றுக்கு முற்றிலும் முரணுகும். மேற்சொன்ன இடங்களிற் காணப்படும் முத்திரைகளிலே காளை வடிவம் பொறிக்கப்பட்டிருத்தலால் அது ஆரியரது யாக பசு வருதற்குமுன்னேயே கடவுள் வாகனமாக மதிப்படைந்திருந்தது என்னலாம். திராவிடருக்குக் காளையும் ஆரியர்க்குக் குதிரையும் சிறந்தன என்பது சரித்திரக் கருத்து. வேள்விக்குப் பொதுவாக ஆட்டினையும் சிறப்பாகக் குதிரையையும் ஆரியர் கைக்கொண்டனர். காளையை அவர்கள் சிறந்த விலங்காகக் கொள்ளவில்லை. ஆதலால் அது யாக பசுவைக் குறிக்கின்றது என்பது தவறு. சிவபெருமானுக்குக் காளை வாகனம் உகந்ததாதலின் இறைவன் திருவருள் பெறக் கருதும் உயிர்க்கு அறிகுறியாக நந்தி சிவபெருமான் திருமுன் வைக்கப்பட்டதென்றறிக. அம்மை கோவிலில் சிங்க வடிவம் திருமுன் வைக்கப்பட்டிருக்கிறது. முருகன் திருமுன் மயில் இடம் பெற்றுள்ளது. அம்மைக்குச் சிங்கத்தையும் முருகனுக்கு மயிலையும் கொன்று வேள்வி செய்கின்றூர்களா? அத்தெய்வங்களுக்கு அவை ஊர்தியென்பதே தெளிவு.

இனி பலிபீடம் என்பது பிறர்க்கு அளிக்கும் அமுதுவைக்கும் இடம். பலி=பிச்சைச் சோறு. 'பலிதேர்ந்து என துள்ளங் கவர்கள்வன்' என்றவிடத்து

பலி அப்பொருளில் வந்தது காண்க. அரசர்கள் அல்லது செல்வர்கள் வீட்டு வாயிலில் ஏற்பார் எல்லார்க்கும் உணவளித்தற்குரிய கலங்கள் வைத்திருத்தல் பண்டை வழக்கம். எல்லா உயிர்களுக்கும் படியளிக்கின்றவர் கடவுள் என்று அறிவுறுத்துதற்கும் பரிவார தேவதைகளுக்குரிய உணவு வைத்தற்கும் பலிபீடம் அமைந்துள்ளது. பலி என்ற சொல்லைக் கேட்டவுடன் அது வேள்வியிற் செய்யும் ஊன் பலி என்று எண்ணிவிடுதல் தவறு. கொடிமரம், கொடி கட்டுவதற்குப் பயன்படுவதே யன்றி யாக பசுவைக் கட்டுவதற்குப் பயன்படுவதன்று. அங்ஙனமாயின் அற்குயூபம் என்ற பெயர் இருத்தல் வேண்டும். எல்லாரையும் பாதுகாப்பதில் இணையற்றவன் என்று உலகினிற்கு அறிவிப்பதற்காகக் கொடி எடுக்கப்படுகின்றது. மலை வேடரும் முருகனுக்குக் கோழிக் கொடி எடுத்து அதனைத் தூணில் உயர்த்திக் கட்டித் திருவிழாக் கொண்டாடினரென்பது திருமுருகாற்றுப் படையால் இனிது விளங்கும். அரசர் இல்லம்போல அரசர்க் கரசனாகிய கடவுளுக்குக் கோயில் தமிழரால் அமைக்கப்பட்டது என்று அறியாது வேள்விச் சாலையின்படி என்று அதனைக் கூறுவது உண்மையை மறைப்பதாகும். பெருமாள் கோயிலிலும் திருமால் வாகனமாகிய கருடனும் கொடி மரமும் பிறவும் சிவன் கோயிலில் அமைந்தவாறே அமைந்துள்ளன. இருவகைக் கோயில்களிலும் வழிபாட்டு முறைகள் தமிழர் வாழ்க்கை முறைக்கேற்ப வகுக்கப்பட்டுள்ளன என்பது தமிழர் சமயம் என்னும் நூலிற் காட்டப்பட்டது.

இக் கோயில்களிலுள்ள ஆரியச் சார்புகள் யாவையெனில், தமிழக் குருக்கள் தம்மை ஆரியராய் எண்ணிக் கொள்வதும் வருணவரம்புகள் பற்றி இன்னின்னார் இன்ன இடத்தில் நிற்கவேண்டுமென்பதும் தாழ்த்தப்பட்டவர்க்கு இடம் இல்லாமையும் பரிசாரகம் முதலிய தொண்டுகள் சுமார்த்தராற் செய்யப்படுவதும் வடமொழி வேதபாராயணம் முதலியவைகளும் வேதச்சார்பான ஓமச் சடங்கும் ஆம் என அறிக. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற நாயனார் கொள்கைப்படி வருணவரம்புகள் ஒழிய வேண்டும். நல்லொழுக்கமும் புனிதமும் உடைய யாவர்க்கும் கோயிலில் வழிபாடு செய்ய இடங் கொடுக்கவேண்டும். கருவில் என்னும் மூலத்தானத்திற் பூசனை செய்தற்கு நியமிக்கப்படுகின்றவர்கள் எக்குலத்தராயினும் தக்க சமய நூலறிவும் புனிதமும் அருள் ஒழுக்கமும் உடையராய் இருத்தல் வேண்டும். மூலத்தானத்தில் பிறர் புகுதல் புனிதத்துக்கு மாறாயின், அதனை நிறுத்திக் கொள்ளலாம். தமிழர் கோயில்களில் சமய ஆசாரியர்கள் தமிழிலேயே பாடி இறைவனை வணங்கியது போலத் தமிழிலேயே பூசனை, துதிகள் எல்லாம் நடைபெறற்பாலன. கோயிற்பணத்தைப் பிறமொழிப் பாராயணத்துக்கும் பிறமொழியிற் பூசனை முறைகள் கற்பிப்பதற்கும் செலவு செய்தல் கூடாது. எம்மொழி பேசுவோரும் அவர்கள் விரும்பிய மொழியிற் கடவுளைத் துதிப்பது பற்றி நாம் குறை கூறவில்லை. தமிழர்க்கு வழிபாட்டு முறைகள் நன்கு விளங்குவதற்குத் தமிழிலேயே பூசனை முறைகளும் துதிகளும் நிகழ வேண்டும் என்பதே நம்முடைய கொள்கை. தொண்டு

கள் யாவற்றிற்கும் பூசனை செய்வதற்கும் பிறப்புத் தடை இருத்தல் கூடாது. தமிழரது கோயில்களில் சுமார்த்த முதலிய புறச்சமயங்களின் தலைவர்களுக்குத் திருவடிவம் அமைக்காதபடி பாதுகாத்தல் தமிழ்ச் சமயத்தார் கடமை. பிற சீர்திருத்தக் குறிப்புகளைத் தமிழர் சமயம் என்னும் நூலிற் காண்க.

தமிழ் மக்களின் பெருங்குறை சமய வாழ்க்கையைச் செவ்விதின் நடாத்தாமையே ஆகும். ஒவ்வொரு தமிழனும் காலையில் எழுந்தவுடன் இயன்ற சுத்தி செய்துகொண்டு முழு முதற் கடவுளை மனதில் நினைத்து வாயினால் வாழ்த்தி மெய்யினால் தொழவேண்டும். அதற்குப் பத்து விநாடிகள் போதும். திருவள்ளுவர் நூலுக்குரிய கடவுள் இலக்கணத்தை நினைதல் நலம். அருவுருவ வழிபாடு செய்ய விரும்போர் சிவபூசை செய்யலாம். வைணவர்கள் சாலக்கிராமம் முதலியவற்றை வணங்கலாம். உருவ வழிபாடு செய்ய விரும்புகின்றவர்கள் தங்கள் மனதிற்கு இயன்ற திருவடிவத்தில் இறைவனை வழிபடலாம். நாள்தோறும் காலையிலாவது, மாலையிலாவது கோயிலுக்குப் போக வசதியுள்ளவர்கள் அவ்வாறு செய்யலாம். அல்லது வாரத்தில் ஒரு நாளிலாவது, மாதத்தில் ஒரு நாளிலாவது, விழாக்காலத்திலாவது கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடலாம்.

ஒவ்வொரு ஊரிலும் தமிழர் சமய சங்கம் ஒன்று நிலையிட்டுக் குறித்த நேரத்தில் தமிழர் சமயத்தார் எல்லாம் அங்கே கூடி இறைவனது குணங்களை ஒருங்கு

நினைத்துப் பாடல் ஓதுதல் நலம். ஒரு விளக்கையோ அல்லது பிற அருவுருவ வடிவத்தையோ, அல்லது தத் தம் மனத்துக்கிசைந்த நடேசர், முருகர், பெருமாள் முதலிய உருவத் திருவடிவங்களையோ அமைத்து ஒவ் வொருவரும் மலர் தூவிப் போற்றுதல் செய்யலாம். ஆண்பாலர், பெண்பாலர் ஆகிய இருதரத்தாரும் ஒவ் வொருநாளும் சில விநாடிகளாவது இறைவன்பால் அன்பு செலுத்தவேண்டும் என்பதே கட்டாய விதி யாய் இருத்தற் குரியது. அகவாய்மையும், தூய்மையும் இல்லாது இறைவனை வழிபடுவதால் பெரும் பயன் விளையாது. நம் முன்னோர் பயன் கருதாது வழிபடு வதிற் சிறந்து விளங்கினர். ஒழுக்கத்தோடு கூடிய வழிபாட்டினையே நம்மவர்கள் போற்றினர். "போ தும் பெறுவிடிற் பச்சிலையுண்டு புனலுண்டு மற்றெங் கும் ஏதும் பெறுவிடில் நெஞ்சம் உண்டே" என்று பட்டினத்தடிகள் அருளியவண்ணம் மலர், நீர், தேங் காய், பழம் முதலியன ஒன்றுங் கிடையாத விடத்து மனத்தினால் மட்டும் அன்பு செலுத்தினாலும் இறைவ னுக்கு அது போதுமானது என்பதே நம்மவர்கள் கொள்கை. எவ்வுயிரும் பராபரன் சந்நிதியாகும், இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில் என்ற படி உயிரின் கண்ணும் உடலின் கண்ணும் இறை வனை வழிபடுதலும் சிறந்த முறையே. அப்போது உயிர் கட்குச் செய்யும் ஊழியமே கடவுள் திருப்பணியாய் முடியும்.

சடங்குகளுள் மணச்சடங்கும், பிணச் சடங் குமே ஒருவன் செய்யவேண்டிய அவசியம் உண்டு.

ஒரு காலத்தில் தமிழர்க்குள் சடங்கில்லாமல் மண வாழ்க்கை தொடங்கி நடத்தப்பெற்றது. மண மக்களின் நிலைவரமான ஒத்த காதலே இல்லறத்துக்கு அடிப்படையாக இருந்தது. பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் மணச்சடங்கு முறைகள் சமுதாயத் தலைவர்களால் ஏற்படுத்தப்பட்டன. பிற சடங்குகளின் விவரம் சைவச்சடங்கு விளக்கம் என்னும் நூலிற் காண்க.

## சீர்திருத்தங்கள்

தமிழர் சமய சங்கம் ஒன்று தமிழ் நாடு முழுவதற்கும் பொதுவாக நிறுவப்பட வேண்டும். தமிழ் உயர்தனிச் செம்மொழி என்ற கொள்கை யுடையவராய்த் திருவள்ளுவர் நூலிற் கூறப்படும் முழு முதற் கடவுளின் உண்மையையும் தன்மையையும் ஒப்புக் கொள்பவராய் உள்ள யாவரும் அச்சங்கத்தின் அங்கத்தினராவதற்குரியர். அவர் அருளொழுக்கத்தையும், வடிவ வழிபாட்டையும், அறிவுக்குப் பொருத்தமான சடங்குகளையும் இகழ்தல் கூடாது. சைவ வைணவப் பெருந் தலைவர்களின் நூலை ஆராய்ச்சி செய்யலாமே யன்றி அப்பெரியார்களை இகழக் கூடாது. அங்கத்தினர், கடவுளன்பையும் நல்லொழுக்கத்தையும் போற்றவேண்டும். எத்தகைய சடங்குகளும்செய்ய வேண்டியதில்லை. கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் தமிழ் மொழியை உயர்மொழி யென ஒப்புக் கொள்ளுவராயின் சங்கத்தில் பற்றுளராய் (அபிமானிகளாக)ச் சேரலாம். அவர்கள் அங்கத்தினராகச்சேர இடமில்லை. தமிழர் சமய சங்கத்துக்கு ஒவ்வொரு

ஊரிலும் இளைச்சங்கம் ஒன்று நிறுவப்படவேண்டும். ஒவ்வொரு சங்கத்திலும் அது கூடுங் காலங்களிற் குறித்த முறையில் கடவுள் வழிபாடு நடைபெற வேண்டும். தொல்காப்பியர், திருவள்ளுவர், திருமூலர், சைவ சமயத் தலைவர்கள் வைணவ சமயத் தலைவர்கள் முதலிய பெரியாருடைய பெருநூல்கள் கற்று ஆராயப்பட வேண்டும். பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம், ஆழ்வார் வரலாறு முதலியவைகளிலுள்ள உயர்ந்த கருத்துக்கள் தொகுக்கப்பட்டுப் போதிக்கப் படவேண்டும்.

அறிவாராய்ச்சியில் ஏற்படும் கருத்து வேறுபாடு காரணமாகக் கலகம் விளைதலைத் தடுக்கவேண்டும். குற்றம் பொறுத்தலும் குணம் பாராட்டுதலுமே ஒரு கூட்டாத்தாருள் ஒற்றுமையை விளக்க வல்லன. கடவுளின் குணங்களை நினைத்தலாகிய அருவ வழிபாட்டினை மேற்கொள்கின்றவர்கள் ஒளிப்பிழம்பை அல்லது சிவ முதலாகிய அருவுருவத்தை வழிபடுதலை இகழ்தல் கூடாது. ஒரு சபையில் அங்கத்தினர் பலருக்கும் ஒத்த ஒரு வகை வழிபாட்டு முறையே கைக்கொள்ளற் பாலது. திருநீறு அணிகின்றவர்கள் திருநீறு அணியலாம். திருமண் தரிக்கின்றவர்கள் அதனையே தரிக்கலாம். அச்சின்னங்களுக்கு அடிப்படைக் கொள்கைக்கு ஒத்த பொருள் கொள்ளுதல் வேண்டும். திருநீறு நிலையாமையையும் தண்மையையும், தூய்மையையும், திருவருள் ஒளியையும் குறிப்பதாகும். திருமண்ணில் வெள்ளை அப்ப

னுடைய அருளேயும் செம்மை அம்மையினுடைய அருளேயும் குறிப்பதாகும். ஒரு சின்னமும் அணியாதவர்கள் கடவுட் கொள்கையும் மொழிப்பற்றும் உடையவராய் இருத்தலே போதுமானது. எச்சபையிலும் அறிவுக்கும் அன்புக்குமே முன்னிடம் கொடுக்க வேண்டும். தெய்வ வடிவங்களுக்கு மலர் தூவிப் போற்றுதலும், நறும்புகையும் விளக்கொளியும் காட்டுதலுமே போதுமானது. நிவேதன உணவுகள் சுருக்கமாக இருத்தல் நலம். ஆடம்பரங்களிலும், அலங்காரங்களிலும் அறிவு அமிழ்ந்துபோக இடம் இருத்தல் கூடாது. தமிழர் சமயத்தைச் சார்ந்தவர்கள் கலப்பு மணத்தையும் பலர் உடன் உண்ணுதலேயும் பிறப்புக் காரணமாக இகழ்தல் கூடாது. கைம்பெண் மணத்தை மறுத்தலும் தக்கதன்று.

தமிழருக்குள் சமய ஒற்றுமை ஏற்படுமாயின் அது சமுதாய ஒற்றுமைக்குக் காரணமாகும். சமுதாயச் சீர்திருத்தத்துக்குச் சமயம் தடையாகாதென்ற கருத்து நமக்குள் பரவவேண்டும். தமிழர் சமய சங்கம் கிளேகளோடு செழித்துத் தழைத்துச் சிறப்புற்றேங்கும்படி தமிழ் நன்மக்கள் யாவரும் ஒருங்கு சேர்ந்து இடைவிடாது உலேவின்றி முயலவேண்டும்.

இப்பொழுதுள்ள இந்து சட்டமானது ஆரியருக் குரியதாய்த் தமிழர்க்குப் பொருத்த மில்லாதிருப்பதாலும் ஆண் பெண்களுக்குச் சமமான சொத்துரிமை கொடாததினுலும் கலப்பு மணத்திற்கு இடங்கொடாமையாலும் தேச வளமை முதலிய இலங்கைச்

சட்ட நூல்களில் தமிழரது குடும்பச் சட்ட வழக்கங்கள் இந்து சட்டத்துக்கு வேறாகக் காணப்படுவதாலும் தமிழ் மக்களுக்குப் பொருள் வழக்குச் சட்டமாகிய சிவில் சட்டத்திலுள்ள குறைபாடுகளை ஒழித்துக் கலப்பு மணம், பெண் சொத்துரிமை முதலிய நன்மைகளைக் கைவரச் செய்வதற்கு உரிய சட்டச் சீர் திருத்தங்களை வகுப்பதற்கும் அவற்றை உரிய சட்ட சபைகளில் நிறைவேற்றுதற்கும் வேண்டிய கிளர்ச்சி செய்யவேண்டும்.

திருக்கோயில்களில் தமிழிலே பூசனை முறைகள் ஏற்படுத்துவதற்கும் கலாசாலை, ஏழை உணவுச் சாலை முதலியன நிறுவி நடத்துவதற்கும் குலத் தடையின்றித் தக்க அர்ச்சகர்களையும் வேலைக்காரர்களையும் நியமிப்பதற்கும் இசை, கூத்து முதலிய கவின் கலைகளைப் பேணுவதற்கும் ஆதீனங்களின் செல்வத்தைத் தமிழர்க்குப் பயன்படும்படி செய்வதற்கும் உரிய கிளர்ச்சியை இடைவிடாது நடத்தவேண்டும்.

தமிழர் சமயம் நிலை பெற்றோங்குவதற்கு அதன் கொள்கைகளைக் கூறும் நூல்களைக் கற்றலும் பாதுகாத்தலும் அவசியமாகும். அதன் பொருட்டுச் சிறந்த முறையிற் கலாசாலை மாணவர்க்கும் பொதுமக்களுக்கும் தமிழ்க் கல்வி கற்பிக்கப்படவேண்டும். சமயக் கல்விக்குத் துணையாக மேலை நாட்டு அறிவு நூற் கலைகள் பலவும் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டும். சென்னை மாகாணத் தமிழர் சங்கம் வெளிப்படுத்தியுள்ள கலைச் சொற்கோவை அதற்கு மிகுதியும்

பயன்படத் தக்கது. இசைக்கலை தமிழில் விளக்கம் அடையும் பொருட்டுத் தமிழ்ப் பாடல்களிலேயே இசை நயங்களை அமைத்துப் பாடவல்ல இசைவாணரைத் தமிழர் ஊக்கி ஆதரிக்கவேண்டும். இக்காலத்தில் பொதுமக்களுக்கு அறிவு கொடுத்து அவரது மனதைப் பண்படுத்துதற்குச் சிறந்த கருவியாய் விளங்கும் பேசும் படக் காட்சியிலும் வானொலிப் பேச்சிலும் தமிழ்ப் பெரியார்கள் வரலாறுகள் திருந்திய முறையில் வெளிவரும்படி கிளர்ச்சி செய்யவேண்டும். தமிழர்கள் கதைகளும் வரலாறுகளும் தமிழ்நாட்டு சினிமா, ரேடியோக்களில் முதன்மையான இடம் பெறவேண்டும். பேச்சுக்கள் திருந்திய எளிய தமிழ் நடையில் நிகழவேண்டும். இம் மகாநாட்டு அமைச்சர் திருவாளர் **வெ. சண்முக முதலியார்** அவர்கள் குறிப்பித்தபடி தமிழ் மக்கள் பிறந்தநாள் தொடங்கி இறக்கும் வரையும் அதற்குப் பின்னும் செய்யவேண்டிய எல்லாச் சடங்குகளையும் தமிழ் முறைப்படி தமிழிலேயே தமிழக் குருக்கள்மாரைக் கொண்டே செய்வித்தல் வேண்டும்.

தமிழர் சமயக் கொள்கைகளையும் அவற்றிற்கு இணக்கமான சீர்திருத்த முறைகளையும் நாடெங்கும் போதிப்பதற்குத் தக்க சொற்பொழிவாளர்களைப் பயிற்றுவிப்பதற்குச் சிறந்த கலாசாலை தமிழ்நாட்டில் வசதி நிறைந்த இடங்களில் நடைபெறவேண்டும்.

தமிழர் பெருங்கூட்டத்திலுள்ள எல்லாரும் ஒற்றுமைப் படுவதற்கு ஒத்த சமயக் கொள்கை சிறந்த

கருவியாகும். ஆதலால் விரிந்த சமயக் கொள்கைகளை நடைமுறையில் விரைவில் கொண்டுவரத் தமிழர்களெல்லாரும் முயலவேண்டும். பல இனங்களும் உணவாலும் மணத்தாலும் இணக்கப்படின் தமிழர் என்ற உணர்ச்சி தலையெடுத்து வெவ்வேறு குலமக்கள் குலப்பெருமை பாராட்டும் வழக்கம் தளர்வடையும். நடை உடை பாவனைகளிலும் தூய வழக்கங்களிலும் ஒரு தன்மையான முறை பல இனத்தாருக்குள்ளும் ஏற்படுமாயின் இனவேற்றுமை யுணர்ச்சி விரைவில் ஒழிந்து போம்.

தமிழர் சமயம் நிலைபெற வேண்டுமாயின் தமிழ் மொழி பேணப்படவேண்டும். தமிழ் மொழி நன்கு பேணப்படுதற்கு அதனைத் தாய்மொழியாக உடைய தமிழர் முன்னேற்றமடையவேண்டும். முன்னேற்றம் அடைவதற்குத் தமிழரது பொருளாதார நிலை சிறக்க வேண்டும். அது சிறத்தற்குத் தமிழருட் செல்வர்களாயிருப்பவர்களும் சொல்லாற்றல் உடையவர்களும் சமுதாயத்தில் உள்ள ஏழை மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் வருந்தாதபடி அவரவர்க்கு உரிய தொழிலும் உணவும் அளித்தற் கேற்ற வாயில்களை வகுக்கவேண்டும். தொழில் வளர்ச்சியே வறுமையை எளிதில் ஒழிக்கும். தக்க தொழிலாளிகளுக்கு ஆதரவும் ஊக்கமும் அளிக்கத்தக்க ஏற்பாடுகள் சமுதாயத்தில் அமைந்திருக்கவேண்டும்.

தமிழர் சமயம், சட்டம், கல்வி, சமுதாயம் என்பவற்றின் சார்பான எல்லாவகைச் சீர்திருத்தங்களின்

பொருட்டும் தக்க தீர்மானங்களை நிறைவேற்றுதற்கும் அவற்றை விரைவிற் செயல் முறையிற் கொண்டு வந்து தமிழ் மக்கள் பெரும் பயன் அடையும் பொருட்டும் செய்யவேண்டிய முயற்சிகள் யாவும் இயற்றுவதற்குக் கூடியுள்ள இம் மாநாடானது இடையூறின்றி இனிது முற்றுப் பெற்றுத் தமிழர் சமயம் புத்துயிர் எய்தித் தழைத்தோங்குமாறு எல்லாம் வல்ல முழுமுதற்கடவுள் திருவருளை வழுத்துகின்றேன்.



வெ. சண்முக முதலியார்,

வாணியம்பாடி.

ஓம்

# தமிழர் சமயம்

## தமிழர் யார்?

---

தமிழர் யார் எனில் தமிழ்மொழியைத் தாய் மொழியாக உடையவர் யாவரும் தமிழரே. மொழியை வைத்து மக்களின் இனத்தைக் கூறுவது உண்டெனினும் ஓர் இனத்தாரின் மொழியை அவர்களோடு ஒருங்குவாழும் மற்ருேர் இனத்தார் தம்முடையதாகத் தழுவிக்கொள்ளுதலும் உண்டு. பெலுசிஸ்டானிலுள்ள பிராகுவி மொழியானது திராவிட குடும்பத்தைச் சேர்ந்ததாயினும் அதைப்பேசுகின்ற மக்கள் தமிழரின் வேருகிய உடற்கூறு உடையவர்களாவர். யூதர் (Jews) என்பார் ஐரோப்பாவில் வெவ்வேறிடத்தில் வெவ்வேறு மொழிகளைத் தங்கள் சொந்தமொழியாகப் பேசுவதைக் காணலாம். இந்தியாவில் உள்ள மொழிகள் ஆரிய மொழிகள் என்றும் மண்டா மொழிகளென்றும் திராவிட மொழிகளென்றும் மூன்று வகையாக வகுக்கப்பட்டுள்ளன. திராவிட மக்களோடு ஒத்த இனத்தவர்கள் திராவிட மொழிகளின் வேருன மண்டா மொழிகளைப் பேசுகின்ருர்கள். கலப்பினத்தார்கள் தாய்மொழி அல்லது தகப்பன் மொழியைச் சொந்தமொழியாகக் கொண்டிருக்கின்றனர். ஆங்கில ஆடவர்க்கும் இந்தியப் பெண்களுக்கும் பிறந்தவர்கள் ஆங்கிலமொழியைத் தங்கள் வீட்டுமொழியாகப் பேசிவருகின்றனர். இதனுல் மொழியானது இனத்தையும் இனச்சார்பையும் குறிக்கு மென்பது புலப்படும்.

தமிழ்மொழி பேசும் தென்னாட்டு மக்கள் தமிழரென்றும் அவர்கள் நாட்டைத் தமிழகம் என்றும் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே டாலமி (Ptolemy) என்ற கிரேக்க ஆசிரியர் குறித்தனர். தற்காலத்தில் தென்னிந்திய மக்களைத் தமிழரென்றே டாக்டர் மக்ளீன் (Dr. Mclean) முதலியோர் பேசினர். டாக்டர் கால்டுவல் என்பவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், துளுவம் முதலிய மொழிகள் பேசுவார் அனைவரையும் திராவிடர் என்றும், தமிழ் மட்டும் பேசுபவரைத் தமிழரென்றும் அழைப்பாராயினர். அம் மொழிகள் யாவும் ஓரினத்தன என்பதை அவர் நிலை நாட்டினர். திராவிடம் என்ற சொல்லினை அவர் வடமொழியினின்று எடுத்துக் கொண்டனர். தமிழ் என்ற சொல்லையே திராவிடத்தின் சிதை வென்று அவர் கூறினும், திராவிடம் என்ற வடசொல் ஆரியத்துக்கு முற்பட்ட இந் நாட்டுமொழியில் நின்று ஆரியத்துட் புகுந்திருக்க வேண்டுமென்று அவர் குறிப்பித்தனர். அவர் காலத்தில் தொல்காப்பிய முதலிய சங்கநூற் பயிற்சி குறைவாயிருந்தமையால் தமிழ் என்ற சொல்லின் இயல்பை அவர் நன்கு அறிந்திலர் போலும். ஆசிரியர் நச்சினார்க்கினியர், தமிழிலுள்ள சொற்களுக்கே தொல்காப்பியர் சிறப்பாகக் கட்டளை இயற்றினர் எனக் கூறுதலாலும், 'தமிழக் கிளவியும் அதனோரற்றே' எனத் தொல்காப்பியர் சூத்திரஞ் செய்துள்ளமையாலும் தமிழ் மக்கள் தங்கள் மொழியைச் சுட்டுவதற்கு ஆரிய மொழியைக் கடன் வாங்கியிருத்தல் பொருத்த மில்லாமையாலும் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் என்ற சொல் இந் நாட்டில்

வழங்கி யிருப்பவும் திராவிடம் என்ற சொல் வழங்கும் வடநூல்களாகிய மனுஸ்மிருதி பிருகத்சம்கிதை முதலிய நூல்கள், கி. பி. நான்காவது அல்லது ஐந்தாவது நூற்றூண்டிலேதான் உருவெடுத்தமையாலும் தமிழ் என்ற சொல் தமிழ் மொழிக்கே உரியது என்பது தெளிவு. தமிழோடு ஒத்த தெலுங்கு மலையாளம் முதலிய இன மொழிகள் பேசுவாரைப் பெருந் தமிழர் என்னலாம். அல்லது இப்போது வழங்குகின்ற முறையில் அவர்களைத் திராவிடர் என்றுங் கூறலாம். வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் பேசப்படும் உள் நாட்டு மொழிகளின் இலக்கணங்களை ஆராய்ச்சி செய்த காலஞ்சென்ற பி. டி. சீனிவாசய்யங்கார் அவையெல்லாம் தமிழோடொத்த இலக்கண அமைப்பு உடையன என்றும் மிகப்பழைய காலத்தில் அவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சார்ந்திருந்தன என்றும் அக்குடும்பத்தின் சிறந்த தலைமொழி தமிழே யென்றுங் கூறினர்.* ரிஸ்லி (Risley) முதலிய ஆராய்ச்சியாளர் இந்திய

---

*P. T. Srinivasa Aiyangar says in his Stone Age: —

"A comparative study of the North Indian and South Indian dialects reveals the fact that their fundamental grammatical structure is so very much the same that it is possible to translate from one of these languages into any other by the simp'e process of the substitution of one word for another, a procedure absolutely impossible when translations are made from Sanskrit or English into any of the spoken dialects of ancient or modern India." "In the most ancient layers of the Tamil language can be discovered not only ample traces of neolithic culture but also the birth of the iron age culture which succeeded it."

நாட்டின் பெரும்பான்மையான பண்டைமக்கள் திராவிடர்களே ஆவர் என்று தெளிவாக உணர்த்தினர். திராவிடமக்கள் இந்நாட்டின் பழங்குடிகள் அல்லரென்றும் அவர்கள் வெளிநாட்டிலிருந்து இங்கே வந்தவர்கள் என்றுங் கூறும் பலவகையான கொள்கைகள் உலாவுகின்றன. காலஞ்சென்ற கனகசபைப்பிள்ளை தமிழர் சீன நாட்டில் நின்று வந்தவர் என்றார். பண்டிதர் சவரிராயர் முதலியோர் அவர்கள் மெசப்பட்டோமியா சாலடியா முதலிய மேலை ஆசிய நாடுகளிலிருந்து இங்கே வந்தவர்கள் என்றார். இன்னும் சிலர் அவர்கள் மத்திய ஆசியாவிலுள்ள தூரானிய இனத்தவர் என்றனர். டாக்டர் சில்பர்ட்சிலேட்டர் அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து இங்கே போந்தனர் என்பர். இந்திய சரித ஆசிரியர் அரங்காசாரியர், அவர்கள் ஐரோப்பாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் நடுவில் உள்ள மத்திய தரைக்கடற்கரையில் வாழ்ந்த மக்கள் இனத்தவர் என்பர். டாக்டர் கிரையர்சன், (Dr. Grierson), டாக்டர் பெர் கூசன் (Dr. Ferguson) பி. டி சீனிவாச அய்யங்கார் * முதலியோர் அவர்கள் வெளிநாட்டிலிருந்து இங்கே வராது இந்நாட்டுக்கே உரிய பண்டைமக்களினத்தவர் என்பர். வெளிநாட்டிலிருந்து அவர்கள் இங்கே வந்தவர்கள் என்று சொல்பவர்கள் அங்ஙனஞ் சொல்வதற்குக் காரணம் அங்கங்குள்ள

---

Dr. Grierson says. "The Dravidian race is commonly considered to be the aborigines of India or at least of Southern India, and we have no information to show that they were not the aboriginal inhabitants of the South."

மக்களுடைய உடற் கூறுகள், பழக்க வழக்கங்கள், மொழிகள் முதலியவற்றிற்கும் திராவிட மக்களின் உடற் கூறு, பழக்க வழக்கங்கள், மொழி என்ப வற்றிற்கும் உள்ள ஒற்றுமையேயாமென்க. அக் காரணத்தை வைத்தே இந்நாட்டில் நின்று வெவ்வேறு வெளி நாடுகளுக்குத் திராவிட மக்கள் சென்று தங்கினர் என்று கூறுதற்குத் தடையாது? மேலும் அந் நாட்டிலிருந்து இங்கே மக்கள் வந்தனரென்றால் அந் நாட்டுக்கு முதல் முதல் மக்கள் எங்கிருந்து போயினர் என்ற கேள்வி எழும். அப்போது மக்கள் முதல் முதல் எங்கே தோன்றினர் என்ற ஆராய்ச்சி இயற்றவேண்டும். அதைப் பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள் சாவாவில் முதல் மனிதனின் அடை யாளங்கள் காணப்படுவது பற்றி அங்கே முதலில் மனிதன் தோன்றினன் என்பர். குமரி முனைக்குத தெற்கே கடல்கொண்ட கண்டமானது சாவாவை யும் உள்ளடக்கி மேற்கே ஆப்பிரிக்கா வரையிலும்

---

Dr. Ferguson says, "The hypothesis that would represent what we know of their (Dravidian) history most correctly is that which places their original seat in the extreme south. They have no traditions which point to any seat of their race outside India, or ~~of their race outside India~~, or of their having migrated from any country with whose inhabitants they can claim any kindred. So far as we know they are indigenous and original."

Mr. P. T. Srinivasa Aiyangar says. "An inspection of the map of Neolithic India is enough to prove that the country was thickly populated by people of one homogeneous form of culture, and that the people ought to have been autochthonous as the Tamil people have always claimed to be in the traditions recorded in their literature."

கிழக்கே ஆஸ்த்ரேலியா வரையிலும் பரவி யிருந்த மையால் அக்கண்டத்தில் எங்காவது மனிதன் முதலில் தோன்றியிருக்கவேண்டுமென்று சிலர் கூறுவர். சிலர், இமய மலை அடிவாரத்தில் மனிதனுக்கு முற்பட்ட விலங்குகளின் வளர்ச்சி யடையாளங்கள் கிடைப்பதால் அங்கே முதல் மனிதன் தோன்றியிருக்கவேண்டுமென்பாரு முளர். எவ்வாறாயினும் முதலில் இந்தியாவில்தான் முதல் மனிதன் தோன்றியிருக்கவேண்டும்; அதிலும் தென்னாட்டிலே மனிதனது முதலிடம் உள்ளது என்ற கொள்கை உரமடைந்து வருகிறது.

இவ்வாராய்ச்சி விரிக்கிற் பெருகுமாதலால் அதன் சுருக்கமாக அறியற்பாலனவற்றை இங்கே சுட்டுகின்றோம். குமரி முனைக்குத் தெற்கே கடல் கொண்ட நாட்டில் நீகிரோ இனத்தார் முதலில் தோன்றி உலகெங்கும் பரவினர். எனினும், அவர்களின் பெருந்தொகுதி தங்குதற்கு வசதியான இடம் ஆப்பிரிக்காவாயிற்று. கீழை ஆசியத் தீவுகளிலும் அவர்கள் நிலைவரமாகத் தங்கினர். இந்தியாவிலும் காடுகளிலும் மலைகளிலும் அவ்வினத்தவருடைய அடையாளங்கள் காணப்படுகின்றன. கதிரர், பணியர், சோளகர், இருளர், குறும்பர், முதலியோர் அவ்வினத்தவரின் வழிவந்தாராவர். இராமாயணத்தில் கரடித் தலைவனாகிய சாம்பவான் மிக்க வயோதிகனாகப் பேசப்படுகின்றான். கரடிகள் என்னப்பட்டவர்கள் நீகிரோவராய் இருத்தல் கூடும். பிற்பட்ட இனத்தவர் படைக்கல வலிமையால் முற்பட்டவரை மலைக்கும் காட்டுக்கும் ஓட்டிவிட்

டுத் தாங்கள் வசதியான இடத்தில் தங்கி யிருக்கவுங் கூடும். நீகிரோவர்க்குப் பின் மஞ்சள் நிறமும் சப்பை மூக்கும் தட்டைக் கன்னமும் நேர்மயிரும் வட்டத் தலையும் உடைய சீன இனத்தவராகிய மங்கோலியர் தோன்றி இந்திய நாடு வழியாகச் சென்று அங்கே சிற்சில இடங்களில் தங்கினவர்கள் தவிர மற்றையோர் சீன நாட்டில் நிலைவரமாகக் குடியேறினர். அவர்களுக்குப் பின், முன் திராவிடர் என்பவர் கடல் கொண்ட கண்டத்தில் நின்று இந்தியாவிற் பல இடங்களிற் சென்று தங்கினர். அவர்கள் தமக்குமுன் இருந்தவர்களோடு கலந்தும் தம்மொடு பகைமை கொண்டாரை ஓட்டியும் வாழ்க்கை நடத்தி யிருக்கலாம். அவர்களுக்குப் பின் திராவிடமக்கள் இந்தியாவிற் புகுந்து நாடெங்கும் பரவினர். அவ்வினத்தவர் மத்திய இந்தியாவில் மங்கோலியரோடு கலப்புற்றனர். கலப்புறுத திராவிடரில் ஒரு பகுதியார் எகிப்து நாட்டிற் சென்று அங்கே நாகரிகத்துக்கு வித்திட்டனர். திராவிட மக்களோடு ஒத்த இனத்தவர் தென் ஐரோப்பாவிலும் *வட ஐரோப்பாவிலும் தங்கி அவ்வவ்விடங்களின் தன்மைக் கேற்றவாறு வேறுபட்ட உடல் வளர்ச்சி எய்தினர். வட ஐரோப்பாவிலும் மத்திய ஐரோப்பாவிலும் தங்கின பண்டை மக்கள் பிற்காலத்தில் ஆரியர் என்ற பெயருடன் தெற்கே

* Dr. Mclean says :—"Investigations in relation to race show it to be by no means impossible that Southern India was once the passage ground by which the ancient progenitors of the Northern and Mediterranian races proceeded to parts of the globe which they now inhabit."

மீண்டும் பல நாடுகளுக்குப் படையெடுத்துச் சென்று தங்கினர்.

திராவிடர்கள் இந்தியாவுக்கு வருமுன் வேறு மக்களினத்தவர்கள் சிறுபான்மையாவது குடியேறி யிருந்தனர் என்று தோன்றுவதால் திராவிடமக்கள் முதல் முதல் இந்திய நிலத்தில் தோன்றியவர்கள் அல்லர் என்பதை ஒப்புக் கொண்டாலும் இந்நாட்டிற் குடியிருக்கும் பெரும் பான்மையான மக்கள் திரா விடர்களே என்பதும் அவர்கள் புதுக் கற்காலம் (New Stone Age) முதல் சுமார் பதினாயிரம் ஆண்டு களாக இந்நாட்டில் வாழ்ந்து நாகரிகத்தை வளர்த் தனர் என்பதும் அவர்களை ஆரிய வகுப்பினர் என்று கொள்பவர்கள் கருத்தின்படி வேத ஆரியர் இந்தியா வுக்கு வருதற்குச் சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே திராவிடர்கள் இந்தியாவுக்கு வந்து இந்திய நாடு முழுவதிலும் நாகரிகத்தைப் பரப்பினர் என்பதும் சரித்திர ஆசிரியர் பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மைகளாகும். அக்காலத்தில் தான் மனிதர் களுடைய நல்வாழ்க்கை, உயர்ந்த நினைவுகள், ஒழுக்க முறைகள், சமயம் என்பவற்றிற்கு வித்திடப் பட் டன. சரித்திரத்துக்கு முற்பட்ட இந்தியாவைப் பற்றி நூல் (Pre-musalman India) எழுதிய ஆசிரி யர் V. அரங்காச்சாரியார் கூறுவன கவனிக்கத் தக்கன :—

"There is no doubt that it was in the close of the palaeolithic period that the Dravidians, from whom the vast majority

of the peoples of India are derived first came to prominence.

The 'Dravidians' or the Mediterraneans migrated into the land some time, we may suppose, about the 9th or 8th Millennium B.C. and after driving the 'pre-Dravidians' and Indonesian Mundas to the hills and woods, occupied the more fertile parts and carried on the neolithic culture. The 'Dravidian' culture spread throughout India during the next four Millenniums."

"Above all the neolithians contributed to the evolution of human thought, morals and religion."

இந்தியாவிற் புது தற்கால நாகரிகத்தை வளர்த்தவர்கள் திராவிடர்கள் என்பது சரித்திர ஆசிரியர் கருத்து. அவர்கள் ஆராய்ச்சி முடிவுகள் சில வருமாறு :—

அக்கால மக்கள் இறந்த முன்னோர் ஆவிகளைத் தொழுதனர். அவர்களுக்காக நினைவுக் கற்கள் நாட்டினர். உயிரைப்பற்றிய கருத்துக் களும் மறு பிறப்பு நம்பிக்கையும், நோய்களுக்கு ஆவிசம்பந்தமான காரணங்களும், பெயரிடுகின்ற நாள், பிறந்த நாள், மணம், இழவு முதலியவற்றின் சார்பான சடங்குகளும் அக் காலத்தில் தொடங்கியவையாகும். சிவ லிங்க வழிபாடு அக் காலத்தில் ஏற்பட்டு முதலில் ஆரியர்களால் இகழப்பட்டுப் பின் தழுவப் பட்ட

தாகும். இருக்கு வேதத்தில் அதன் இகழ்ச்சியும், அதர்வண வேதத்தில் அதன் புகழ்ச்சியும் காணப்படும். கோயிலிலுள்ள வடிவங்கள் அக் காலத்தில் மதிப்பாகக் கல்லிலும் மரத்திலும் அமைக்கப்பட்டன. பிராணிகளின் பலியும் அக் காலத்தில் வழக்கத்திலிருந்தது. பேய்பிடிப்பதும், பேயை ஓட்டுவதும், சிவலிங்கம், சாளக்கிராமம், ஆயுதங்கள், முதலியவற்றை வழிபடுவதும், நோய் நீக்கத்திற்காக நூற்காப்பு, திருநீறு முதலியவற்றை உபயோகப்படுத்துவதும் அக் காலத்தில் ஏற்பட்டவை. குறளி வித்தை, சோதிடம் முதலியவும் அக் காலத்தில் தோன்றியனவே. உருவ வழிபாடும், திருவடிவங்களுக்கு மழு, வில், அம்பு முதலிய ஆயுதங்களைச் சாத்துவதும் புதுக்கற்கால வழக்கங்களே. சைவத்திலும், வைணவத்திலும் சிவன், உருத்திரன், விஷ்ணு, கிருஷ்ணன் முதலிய தெய்வங்களைப் பற்றிய கருத்துக்கள் அக் காலத்தில் முளைத்தனவே.

சில ஆண்டுகளுக்கு முன் சிந்து நதிப் பாசனத்தில் ஹாரப்பா மோகஞ்சோ தாரோ முதலிய இடங்களிலும் பெலுச்சிஸ்தானில் நல் என்னும் கிராமத்திலும் தோண்டிக் கண்ட பொருள்களால் அவை கி. மு. ஏழவாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு பெரிய நாகரிகத்தை வளர்த்த மக்களினத்திற்குரியன என்பது புலனாயிற்று. அது தாமிர ஆயுதங்கள் வழக்கத்தில் வந்தகாலம் என்று சரித்திரக்காரர் ஊகிக்கின்றனர். மேற்குறித்த இடங்களில் ஆழமாகத் தோண்டிப் பார்த்தபோது செவ்வையாக அமைக்கப்பெற்ற கோயில்களும் வீடுகளும் காணப்பட்டன. கோயில்

களில் சிறு அறைகள் கனமான சுவர்களை உடையன வாயிருந்தன. அதனால் அறைகளுக்குமேல் விமானம் போன்ற கட்டிடங்கள் இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. அந்த அறைகளைச் சுற்றி விசால மான முற்றமும், அம் முற்றத்தின் நாலுபக்கங் களிலும் சிறு மாடங்களும் காணப்பட்டன. நடுவிலுள்ள அறை மூலத்தானமா யிருக்கலாம். மலை யாளத்துக் கோயில் அமைப்பு அதனை ஒத்தது போலும். வீடுகளில் கிணறுகள், குளிக்கும் அறை கள், செங்கல் தளங்கள், சாக்கடைபோகும் ஓடை கள் முதலியன காணப்பட்டன. சங்குத்தட்டுகள், நீல வளையல்கள், நாணயங்கள், கல்மோதிரங்கள், வடி வம் நிறைந்த முத்திரைகள் முதலியன தோண்டி எடுக்கப்பட்டன. முத்திரைகள் மீது காளைவடிவம் செதுக்கப் பட்டிருந்தது. சில முத்திரைகளில் அரச மரம், மான்கொம்பு, புலி, யானை, காண்டாமிருகம் முதலியவற்றின் வடிவங்கள் காணப்பட்டன. குதிரைவடிவம் காணப்படவில்லை. அது பிற்காலத் தில் ஆரியராற் கொண்டுவரப்பட்டதுபோலும். கால் களை குறுக்காக வைத்து உட்கார்ந்திருக்கும் தெய்வ வடிவம், பாம்புவடிவம், தேவி வடிவங்கள், முதலி யன கோயில்களிற் காணப்பட்டன. சிவலிங்கங்கள் ஏராளமாகக் கண்டெடுக்கப்பட்டன. காலத்தால் பிற்பட்ட இடங்களில், பிரேதங்களைப் புதைப்பது மாத்திரமல்லாமல் அவற்றைச் சுட்டெரித்த சாம் பலையும் எலும்பையும் பெரிய மண்பாண்டத்தில் வைத்துப் புதைப்பதும் அவற்றின்மேல் செங்கல் லினால் சமாதிபோன்ற கட்டிடங்கள் அமைப்பதும் புலனாயின. புதையல் நிலங்களிற் காணப்பட்ட

முத்திரையிலுள்ள எழுத்துக்கள் முதலில் படஎழுத்தாயிருந்து பின் ஒலிகளைக் குறிப்பனவாயின. அவற்றை ஆராய்ந்த ஹீராஸ் பாதிரியார் அவை தமிழ் எழுத்துக்களின் மூலவடிவுகளாயிருத்தல் கூடும் என்று கருதுகிறார்.

சிந்து நாகரிகத்தைச் சிலர் எகிப்தில் தோன்றிய சூரியகலைப் பயிற்சியின் சார்பானது என்றும் சிலர் மெசப்பொட்டோமியாவிலிருந்த சுமேரிய நாகரிகத்தை சார்ந்தது என்றும் கூறுகின்றனர். கர்னல் ஆல்காட் எகிப்து நாகரிகமானது இந்திய நாகரிகத்தின் வழிவந்தது என்கின்றார். எகிப்தியரே 'பண்டு' என்னும் நாட்டிலிருந்து எகிப்துக்குத் தாங்கள் வந்ததாகத் தங்கள் பண்டைநூலிற் கூறியிருக்கின்றனர். அந்தப் 'பண்டு' நாட்டின் விலங்குகளும் செடி கொடிகளும் தென்இந்தியாவோடு சார்ந்திருந்த இலங்கைத் தீவின் விலங்குகளோடும் செடிகளோடும் ஒத்திருத்தலால் இங்கிருந்துதான் நாகரிகம் படைத்த மக்கள் எகிப்துக்குப் போயிருக்க வேண்டும் என்று அவர் கூறுகின்றார். அவர் சொல்வதாவது :—

He says 'The Egyptians came, according to their own records, from a mysterious land 'the Sacred Punt' to the valley of the Nile led by Amon. The references made by them to the names of the Princess of Punt, its fauna and flora, esp, the nomenclature of various precious woods to be found but in India leave us scarcely room for the smallest doubt that

the old civilisation of Egypt is the direct outcome of that of the still order India, most probably of the Isle of Ceylon which was in pre-historic days part and parcel of that great continent as the geologists tell us."

சுமேரிய நாகரிகத்திற்கும் சிந்து நாகரிகத்திற்கும் ஒற்றுமை காட்டும் பொருள்கள் முதல் முதல் இந்தியாவிலேயே தோன்றினவாகத் தெரிவதால் சிந்து நாகரிகமே சுமேரிய நாகரிகத்திற்கு முற்பட்டதென்று கருத இடமிருக்கிறது. பாபிலோனியர் உபயோகப்படுத்திய பஞ்சு சிந்து அல்லது சிந்தம் என்று அழைக்கப்பட்டது. அச்சொல் அது சிந்து நாட்டிலிருந்து வந்ததென்பதைக் குறிப்பதாகும். ஆடைநெய்யுந் தொழிலை இந்தியாவிலிருந்து தான் மேல் நாட்டினர் அறிந்தனர். வைடூரிய மணிகள் இந்தியாவிலிருந்து மெசப்பொட்டோமியாவுக்குப் போனதாகத் தெரிகிறது. தென்னாட்டின்மேல் பக்க மலைகள் வைடூரிய நிலம் என்று வடமொழியிற் பேசப் படுகின்றன. சிந்து நாட்டில் காணப்படும் மண் பாத்திரங்கள் ஆதிச்ச நல்லூரின் மண் பாத்திரங் களுக்குக் காலத்தால் பிற்பட்டவையாயும் மெசப் பொட்டோமியா பாத்திரங்களுக்கு முற்பட்டவை யாயும் தோன்றுகின்றன. இத்தகைய காரணங்களால் சிந்து நாகரிகமே சுமேரிய நாகரிகத்திற்கு முன் னுள்ளதென்று தெரிகிறது. சிந்து நாட்டிற் காணப் பட்ட மண்டை ஓடுகள் பெரும்பான்மையும் நெடுந் தலைக் குரியனவாயும் சிறுபான்மையே வட்டத் தலைக் குரியனவாயும் இருப்பதால் நெடுந் தலையின

ராகிய திராவிட மக்கள் பெரும் பான்மையும் வட்டத் தலையினராகிய சீன மங்கோலிய மக்கள் சிறுபான் மையும் கலந்து சிந்து நாகரிகத்தை வளர்த்தனர் என்னலாம்.

திராவிடருக்குப் பின்வந்த ஆரியருடைய வேத மொழிக்கும், தமிழ் மொழிக்கும் உள்ள ஒற்றுமை யினை ஆய்ந்து கல்கத்தாவில் தமிழ் ரீடரா யிருந்த சாமி நாதய்யர் என்பவர் வடமொழியினின்று தமிழ் வந்தது என்றும் ஆரியரும் தமிழரும் ஓர் இனத்தவரே என்றும் குறிப்பித்தார். திராவிடர் காலத்தால முற்பட்டவர் என்பது சரித்திர உண்மையாதலினாலும் திராவிடம் மொழி வளர்ச்சியில் முற்பட்ட ஒட்டுச் சொல் நிலையி லும் (Agglutinative stage) ஆரியம் பிற்பட்ட உட் பிணைப்பு நிலையிலும் (Inflectional stage) இருப்பதா லும் திராவிடத்திலிருந்து ஆரிய ஒற்றுமைப் பகுதிகள் கிளைத்திருக்க வேண்டும்.*

பல மொழிகளின் ஒற்றுமையை நோக்குங்கால் அவர்களின் முன்னோர்கள் ஓரிடத்தில் முதலிற் தோன்றி ஒரு மொழி பேசினர் என்பது ஊகிக்கப்

---

*நாகரிகப்பயிற்சி யளவில் ஆரியரும் திராவிடரும் வேற் றுமை யுடைமையால், அவர்கள் இருபிரிவினராகஎண்ணப் படுதல் பொருந்துமென்பார், (Pre-Musalman India V-l, I Page 103)-ல் "Though there was not much distinction between the Aryans and the Dravidians in physical form, still even physically they were not entirely the same and at all events the cultural differences are wide enough to distinguish them entirely. Even if thes originally belonged to the same group of humanity, they are sufficiently differentiated in culture and habits to afford justification for holding them as distinct."
—V. Rangacharya, M. A.

படும். மொழி தோன்றுங்கால் ஓரிடத்திலிருந்து பின்னர்ப் பிரிவுற்று வெவ்வேறு இடங்களில் தங்கி அவ்விடங்களுக்குத் தக்க நாகரிகங்களை மக்கள் தோற்றுவித்து வளர்த்தனராதலின், மக்களினத்தார் பலரும் மொழி வேற்றுமையும், நாகரிக வேற்றுமையும் உடையவராயினர். வட நாட்டிலும் தென்னாட்டிலும் திராவிட மொழிகள் நிகழ்ந்தபோது ஆரியர் படையெடுப்பு ஏற்பட்டதால் ஆரியரது வேத மொழியிலும் அதன் கிளைகளிலும் திராவிட மொழிகளின் தொடர்பு மிகுதியாக ஏற்பட்டதென்று கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக வடமொழிப் பேராசியராகிய ராப்ஸன் (Rapson) என்பவர் கூறுகின்றார். அவர் சொல்வதாவது :—

" Dravidian languages were actually flourising in the western regions of Northern India at the period when languages of the Indo-European type were introduced by the Aryan invasions from the North-West. Dravidian characteristics have been traced alike in Vedic and Classical Sanskrit, in the Prakrits or early popular dialects and in the modern vernaculars derived from them." " We may conclude that the earlier forms of speech by which Indo-European was modified in the various stages of its progress from the North-west were predominantly Dravidian."

ள, ண, ட முதலிய ஒலிகள் திராவிடத்தினின்று ஆரியத்திற்குப் போனவை. திராவிடச் சார்பு பற்றியே

பிற்காலத்தில் சொல்லமைப்பு வடமொழியில் அமைவதாயிற்று என்பதும் அவர் கருத்து.

டாக்டர் கால்டுவெல் நீர், மீன் முதலிய சொற்களைத் தமிழ் மொழியினின்று வடமொழி பெற்றிருப்பதைப் பலர் அறிவதில்லை என்று குறிப்பித்துள்ளார். திராவிட மொழிக்கும் ஆரிய மொழிக்கும் உள்ள இலக்கண வேறுபாடுகளை அவர் தமது நூலில் தெளிவாகக் காட்டியிருக்கின்றார்.

வட மொழியில் ஆண், பெண், அலி என்ற பகுப்பு சொல்லைப் பொறுத்தது. பாஷாணம் (= கல்) ஆண் பால், சிலை (= கல்) பெண் பால், தாரம் (= மனைவி) அலிப்பால். திராவிட மொழியில் பகுத்தறிவு இல்லாதனவும், உயிரில்லாதனவும் அஃறிணைப்பாலன.

வடமொழியில் ஒருமை, இருமை, பன்மை என்ற முப்பகுதியுள்ளன. ஒருமை பன்மையே தமிழிலுள்ளன.

திராவிட மொழியில் பின்னசைச் சொற்களே உருபுமாறாது வேற்றுமை குறிப்பன. உருபுகளும் விகுதிகளும் ஒருமைக்கும் பன்மைக்கும் ஓரினத்தனவே. வடமொழியில், வேற்றுமை தோறும் உருபுகள் வேறாய்ப் பெயர்களோடு உட்பிணைந்து (inflectional) நிற்பன.

வடமொழியிற்போல, தமிழில் உரிச் சொற்களுக்குத் திணைபால் உருபுகள் இணைக்கப்படுவனவல்ல. திராவிடத்திற்போல உடன்பாடும் எதிர்மறையும் வினையின் பகுதிகளாக அமைதல் வடமொழியிலில்லை. திரா

விடத்தில் தொடர்சுட்டு (relative form) என்பது கிடையாது.

திராவிடத்தில் தழுவுஞ் சொல் முடியுஞ் சொல்லுக்கு முன் நிற்கும். அது, ஆரிய மொழிகளிற் பின்னிற்றலுண்டு.

சுவாமிநாதய்யர் தமிழுக்கும் வடமொழிக்கும் ஒற்றுமை காட்டுகின்றார் எனில், சித்திய மொழிகளுக்கும் திராவிடத்துக்கும் மிகுந்த இலக்கண ஒற்றுமை இருப்பதாக டாக்டர் கால்டுவெல் கூறுகின்றார். அவர் சொல்வதின் சாரமாவது :

திராவிடத்திற்போலச் சித்திய மொழிகளில் ஆண், பெண் என்ற பகுப்பு, படர்க்கைச் சொற்களிலும், வினையாலணையும் பெயர்களிலும் படர்க்கை வினைகளிலுமே உண்டு.

தமிழிலுள்ள நான்காம் வேற்றுமை உருபு சித்திய மொழியிலும் பெஹிஸ்டுன் கற்பலகைகளிலும் அவ் வேற்றுமை குறிக்கவே காணப்படுகிறது. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, தமிழிலிருப்பது போலவே சித்திய மொழிகளிலுண்டு. தமிழிற்போல வினையெச்சங்களே, உம்மைத் தொடர்வினைகளுக்குப் பதிலாக வருதல் சித்தியத்திலுண்டு. உடன்பாடும் எதிர்மறையும் வினையின் பகுதிகளாக வருதலும் சித்தியத்திலுண்டு. கொண்டு முடியுஞ்சொல் தழுவுஞ் சொல்லிற்குப் பின்னிற்றல் சித்திய முறையாகும். வினைகளினின்றெழும் பெயரெச்சமே உரிச் சொல்லாக மிகுதியும் பயன்படுவதில் திராவிடமும் சித்தியமும் ஒத்திருப்பன. ட, ண, ள என்பவை பயிலுதல்,

மொழி முதலில் நின்றவல்லொற்று சொல் நடுவில் மென்மையாதல், இரட்டித்த வல்லோசை மிகுதல், நான்காம் வேற்றுமை, ஆறும் வேற்றுமை யுருபுகள், சுட்டுச் சொல்லுருபுகள், எண்ணுருபுகள் முதலியன திராவிடத்திற்கும், சித்தியத்திற்கும் பெரும் பாலும் ஒத்திருப்பனவாம்.

டாக்டர் போப் திராவிட மொழிகள் கெல்டிக், டியூட்டன் மொழிகளோடு ஒருவாறு ஒத்திருப்பன என்கிறார்.

திரு. எட்கின்என்பவர் சீனமொழிக்கும் பிற மொழிக்கு முள்ள தொடர்பை ஆயுமிடத்து ஆசியாவிலும் ஐரோப்பாவிலுமுள்ள எல்லா மொழிகளும் ஆதியில் ஒரு பண்டைமொழியிற் தோன்றி யிருத்தல் கூடும் என்கிறார்.

திராவிட மொழிகளுக்கும் ஆஸ்திரேலிய மொழிகளுக்கும் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

| ஆஸ்திரேலியம் | தமிழ் |
| --- | --- |
| ஞா, | நான், |
| நீன், நீம். | நீ, நீர், நீங்கள். |

என்பன ஒரு பொருட் சொற்கள். தெலுங்கில், 'லு' பன்மை விகுதியாதல் போல, ஆஸ்திரேலிய மொழிகளிலும், அது பன்மை விகுதியே. உருபுகள் பின்னசையாக வருதல் ஆஸ்திரேலியத்திற்கும், சித்தியத்திற்கும் பொது. தன்மைப் பன்மை ஆஸ்திரேலியத்திலும் இருபகுதி யாயுள்ளன. சொல்லமைப்பும் அவ்வாறே உள்ளது.

அன்னை என்ற தமிழ்ச் சொல் வட ஐரோப்பா விற் பேசப்படும் பின்னியமொழியில் அன்யா என்று வழங்குகின்றது. வடபனிக் கடற்கரையில் வழங் கும் சாமா யெடிக் மொழியில் தீ, அம்மா என்ற சொற் கள் காணப்படுகின்றன. பின்னிய மொழியில் அப்பா என்பது அப்பி என்று வழங்குகின்றது. வால்கா நதிக்கரையிலுள்ள வோகல்மொழியில் கோழி, தோல், ஆம் என்ற சொற்கள் காணப்படு கின்றன. இதனால் தமிழுக்கும் உலகின் வெவ்வேறு நாடுகளிலுள்ள வெவ்வேறு மொழிகளுக்கும் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன என்பது போதரும். இத்தகைய யொழி ஒற்றுமைக்குக் காரணமாகிய வர லாற்றுச் சார்பு பின்வருமாறு ஊகித்தற் பாலது.

மனிதன் உலகில் தோன்றி சுமார் ஐந்தரை இலக்கம் ஆண்டுகள் கழிந்தன. எனினும் அவன் சிறிது நாகரிகம் அடைந்து கற்களைக் கையில் வைக் கக் கூடிய ஆயுதமாகச் செதுக்கத் தெரிந்தகாலம் ஐம் பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தான் என்று தொன்னூல் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். சுமார் கி. மு. முப்பத்து ஐயாயிரம் ஆண்டுகள் முதல் கி. மு. பதினாயிரம் ஆண்டு வரை உள்ள காலம் கல்லா யுதம்வழக்கத்திலிருந்த பழங் கற்காலத்தின் பிற் பகுதி என்றும் அதற்குப் பிற்பட்ட காலந்தொட்டு கி. மு. ஐயாயிரம் ஆண்டு வரை யுள்ளகாலம் புதுக் கற்காலம் என்றும் அதற்குப் பிற்பட்டகாலம் உலோககாலம் என்றுங் கூறுப. பழங் கற்காலத் திற்கு முன்னேயே மக்களினம் முதலில் தோன்றிய தென்னாட்டில் நீகிரோவர்பெருகிப் பரவிய காலத்

திலேயே அவர்களுக்குள் ஒருவகையான பேச்சு ஏற்பட்டு, அப்பேச்சிலுள்ள சிலமொழிகள் பின் தோன்றினவர்களால் கையாளப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறே மங்கோலியர் தோன்றினபோதும் அவர்களுடைய பேச்சு ஒலிகள் சில அவர்களுக்குப் பின்னே தோன்றியவர்களின் மொழியிற் கலந்திருக்க வேண்டும். அவர்களுக்குப் பின்வந்த காக்கேசிய இனத்தைச்சேர்ந்த முன் திராவிடர், திராவிடர் என்பவர்களது மொழியாகிய தமிழில் உள்ள சில சொற்கள் நீகிரோ மொழிகளோடும், சீன மொழிகளோடும் ஒத்திருப்பதற்குக் காரணம் அதுவே. திராவிட இனத்தாரோடு உடற்கூற்றினுல் பெரும்பான்மையும் ஒத்து முதலில் தென்னுட்டிலிருந்தே இந்தியா வழியாகவும், வட ஆபிப்பிரிக்கா வழியாகவும், வடஐரோப்பாவிற்கும் தென்ஐரோப்பாவிற்கும் சென்று தங்கிய ஆரியமக்களின் பேச்சில் தமிழோடு ஒத்தசொற்களும் ஒலிகளும் காணப்படுதற்குக் காரணம் எளிதாய் ஊகிக்கக் கூடியதே. தமிழ் மொழியின் அடிப்படை நீகிரோவர் தோன்றியகாலத்தில் தொடங்கி யிருக்குமாயின் அதுவே உலகில் உள்ள பிற முக்கிய மொழிகளுக்கும் அடிப்படையாக இருத்தல் கூடும். இலங்கை அறிஞராகிய ஞானப்பிரகாசப் பாதிரியார் தமிழோடு பிற மொழிகளுக்குள்ள ஒற்றுமையைக் காட்டி ஒரு பேர் அகராதி வெளியிட்டு வருகிறுர். அது முற்றுப் பெறுமாயின் தமிழின் பழமையும் அது மக்களின் மூல முதல்மொழியோடு ஒத்திருக்கின்ற தன்மையும் நன்கு துலங்கும். அதைப்பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்ய இங்கே இடமில்லை.

திருநெல்வேலி திருவாளர். பி. சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் ஆராய்ந்து எழுதிய "Origin of the Indo-European Races" என்னும் பெருநூலில் ஆரியர் கடல்கொண்ட தென்னாட்டிலிருந்து கந்த புராணக் காலமுடிவில் வடநாடுகளுக்கும் ஐரோப்பாவிற்கும் சென்றனர் என்றும் திராவிடர்களோடு ஆதியில் ஒருங்கு வாழ்ந்த மக்களின் இனத்தவரே ஆரியர் என்றும் திராவிடருக்கு முக்கிய விலங்கு எருது என்றும், ஆரியருக்கு முக்கியவிலங்கு குதிரை என்றும் விளக்கியுள்ளார்.

திராவிடர்கள் இந்தியாவுக்கு வடமேற்கிலிருந்து வந்ததாகக் கூறும் ஆசிரியர்கள், தென்னாட்டைப் பற்றிய நூல்களையும் தமிழ் இலக்கிய அகச்சான்று களையும் நன்குகற்று அவற்றைத் தக்கபடி மதிப்பதில்லை. கன்னியாகுமரிக்குத் தெற்கே கடல் கொண்ட நாட்டைப்பற்றி (Lost Lemuria) என்னும் நூல்எழுதிய ஸ்காட் எலியட் (Scot Eliott) அக் கண்டத்தை ஐந்து கடற் பெரு வெள்ளங்கள் கொள்ளை கொண்டன என்றும் நாலாவது வெள்ளம் சுமார் எண்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த தென்றும் ஐந்தாவது வெள்ளம் சுமார் ஒன்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்ததென்றும் கூறினர், பலவகை மக்களினத்தாரும் அந்நாட்டில் தோன்றிப் பிற நாடுகளுக்குச் சென்று தங்கினர் என்பது நிலை பெறுமாயின் அது இருவெள்ளத்திற்கும் இடைப் பட்ட காலத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும்.

ஐந்தாவது வெள்ளத்திற்குச் சற்று முன் இருந்த நாடுகளைப்பற்றிஇறையனார் அகப்பொருள் உரையிலும்

கடல்கொண்ட சிலப்பதிகார உரையிலும் தெளிவான விபரம் கூறப்பட்டுள்ளது. குமரி முனைக்குத் தெற்கே நாற்பத்தொன்பது சிறுநாடுகளடங்கிய கண்டம் இருந்ததென்றும் அதன் வட பாகத்தில் குமரியாறும் தென்பாகத்தில் பஃறுளி ஆறும் ஓடின என்றும் இரண்டு ஆற்றிற்கும் நடுவிலே உள்ள நாட்டின் தலை நகராயுள்ள தென் மதுரையில் முதல் தமிழ்ச் சங்கம் இருந்ததென்றும் தெரியவருகின்றது. எனவே, சுமார் பதினுயிரம் ஆண்டுகளுக்கு முன் இமயமலை முதல் கடைசியாகக் கடல் கொண்ட நாட்டின் தென் பகுதி வரை பெரும்பான்மையும் திராவிடமக்களே பரவியிருந்தனர். இந்தியப் பெருங்கண்டத்தில் ஆரியர் வருமுன் பேசப்பட்ட மொழிகள் தமிழும் தமிழோடொத்த பேச்சுக்களுமேயாம். வடநாட்டுப் பேச்சு மொழிகள் ஆரியத் தொடர்பால் நாளடைவில் ஆரியச் சொற்களை மிகுதியாகக் கடன் வாங்கி ஆரிய மயமாகி விட்டன. நடு இந்தியாவில் சீன மொழித் தாக்கினுலும் பண்டை மலைவாசிகளின் பேச்சுக் கலப்பாலும் சொல்லும் இலக்கணமும் திராவிடத்தினின்று வேறுபட்ட பேச்சு மொழிகள் மண்டா என்ற தனிக்குடும்பத்தைச் சார்ந்தனவாயின. எனினும் காண்டர் (Gonds) கொண்டையர் (Khonds) மாலர் (Maler) ஓராவோன் (Oraon) நீலகிரியில் உள்ள தோடர், கோட்டார் என்பவர்கள் திராவிடச் சார்பான மொழிகளையே இன்றும் பேசி வருகின்றுர்கள்.

தென் இந்தியாவிற் சிறந்து விளங்குந் திராவிட மொழிகளாகிய கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம், தமிழ், என்பவற்றுள் துளுவமொழி இலக்கிய

மொழியாக விளங்கவில்லை. கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்பன இலக்கிய விருத்தி அடைந்தாலும் வடமொழிக்கு மிகுதியும் கடன் பட்டுள்ளன. தமிழ் சிறுபான்மை வடமொழிச் சொற்களைக் கடன் வாங்கினாலும் டாக்டர் கால்டுவெல் கூறுகின்றபடி வடமொழியின் உதவியின்றித் திகழக்கூடியது. மொழிகளை ஒத்துப்பார்க்கும் ஆராய்ச்சிக்குப் பிற திராவிட மொழிகளிலும் தமிழே சிறந்த மூலப்பகுதிகளை உடையது. திராவிட நாகரிகத்தை விளக்குந் தனி மூல இலக்கியங்களும் இலக்கணங்களும் சாசனங்களும் தமிழிலேயேதான் உள்ளன. கிரேக்கர் முதலிய அயல் நாட்டினர் தமிழ், தமிழர், தமிழகம் என்ற சொற்களையே இந்நாட்டைப்பற்றிய வரலாறுகளில் முக்கியமாக வழங்குகின்றார்கள். தமிழையும் தமிழ் நாட்டையும் பற்றிப் பேசிய கிரேக்கப் புலவர்களுள் ஹெரோடட்டஸ் (Herodatus) கி. மு. 429-லும் மெகஸ்தனீஸ் 300-க்கு முன்னும், ஸ்டிராபோ கி. பி. 20-லும் பிளினி 77-லும் தாலமி (Ptolemy) 130-லும் வாழ்ந்தவர்கள். ஆராய்ச்சிக்கு, திராவிடர் என்ற சொல்லை விடுத்துத் தமிழர் என்ற சொல்லை வழங்குதலே பொருத்தமாகும். ஈண்டு தமிழரின் பண்டை நாகரிக நிலையை, ஒருவாறு சுருக்கி ஆய்ந்தபின் தமிழ் மூல நூல்களின் உதவி கொண்டு தமிழர் சமயக் கருத்துக்களைக் தொகுத்துரைப்பாம்.

## தமிழர் பண்டை நாகரிக நிலை

உணவுவகையில் இந் நாட்டிற்கு ஏற்ற உணவுப் பொருளாகிய நெற்பயிர் செய்து முதல் முதல் உழவு வாழ்க்கை நடத்தியவர்கள் தமிழரே. வார்னிங்டன்

(Warnington) வர்த்தகத்தைப் பற்றி எழுதிய நூலில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே எகிப்து, கிரீஸ், பாலஸ்தீன், முதலிய மேலை நாடுகளுடன் தமிழர் கடல் வழியாக வர்த்தகம் செய்தனர் என்று குறிப்பித்தார். அரிசி என்ற சொல் கிரீக் மொழியில் அரிசா (oriza) என்ருய் அதிலிருந்து ரைஸ் (Rice) என்ற ஆங்கிலச் சொல் வந்தது. வடமொழி ஆதி வேதத்தில் அரிசியைப் பற்றிய விபரம் காண்பதரிது. பார்லியும் கோதுமையுமே அதனுட் பேசப்படுகின் றன. அரிசி உணவாகிய அன்னம் ஆலயங்களில் மகா நைவேத்தியம் எனப்படும். பலவகைச் சித்திரான் னங்களே தென்னுட்டுச் சைவ வைணவக்கோயில் களிற் சிறந்த திருவமுதமாகப் பாராட்டப்படுகின் றன. பாலில் அன்னத்தை வேக வைத்துக் குழந்தை களுக்குக் கொடுப்பது தமிழ்நாட்டு வழக்கம். திரு ஞானசம்பந்தருக்குப் பாலடிசிலோடு ஞானத்தை உமாதேவி குழைத்துக் கொடுத்த வரலாறு யாரும் அறிந்ததே. "நெய்யில்லா உண்டிபாழ்" என்றமை யால் நெய்கலந்த உணவைத் தமிழ் மக்கள் நாள் உண வாகக் கொண்டனர். பருப்புணவு, தயிர்ச்சாதம் பல வகைப் பொறியல்கள் முதலியன பத்துப் பாட்டு, புற நானூறு, முதலிய சங்க இலக்கியங்களிற் பேசப்படு கின்றன. சேனைகளுக்குச் சூடுதணிக்கத் தயிர்ச் சாதம் வழங்கப்பட்டது. மிளகு, உப்பு, புளி, சர்க் கரை வெல்லம் முதலிய பொருள்கள் முதல் முதல் தமிழ்நாட்டில் தயார் செய்யப்பட்டனவே.

வேனிற் காலத்தில் நறுநீரும் தயிர் அன்னமும் வழங்கும் தண்ணீர்ப் பந்தல் வைப்பது தமிழர் வழக்

கம். பட்டினத்தடிகள் பாடல் ஒன்றில் (கழுமலமும் மணிக்கோவை 25) போகப் பொருள்களை அழகாகத் தொகுத்துரைத்தனர். உரை நடையில் அவர் கருத்து வருமாறு:-"பாதிரிப்பூவும், புன்னைமலரும், தாமரையிதழும், வெளிய பச்சைக் கற்பூரமும், கத்தூரிக் குழம்பும், பிறமணப் பொருளுங் கலந்து உண்ணும்நீரமைத்த தண்ணீர்ப்பந்தரும், நறுநெய் கலந்த பொரிக்கறியும், தாளித நறும்புகைகமழும் கறி வகைகளும், வெண்ணிலவு போன்ற தயிரும், பலாப்பழமும், கற்கண்டும், நல்ல சுவைப்பதம் கெடாத முல்லையரும்பு போன்ற அன்னமும், தவத்தினர் யார்க்கும் வறியர் யார்க்கும் கருணையுடன் வழங்கும் அன்ன சத்திரமும்" என்றது காண்க. கனிகளுள் வாழை, பலா, மா, என்ற மூன்றின் கனிகளே தென்னாட்டிற்குச் சிறந்தன. தேங்காயின் பயனை நன்கு தெரிந்தவர்கள் மலையாள நாட்டினரும், ஈழ நாட்டினரும் ஆவர். பனையின் பயன்கள் அளவிடப்படாதன. அதன் ஒவ்வோர் உறுப்பும் தமிழர்க்குப் பயன் தருவதே.

ஆவினைப் போற்றி அதன்பால், தயிர், நெய்யினைக் கடவுட் பூசனைக்கும் உணவுக்கும் பயன்படுத்துதலும் அதன் கோசலம், சாணம் என்பவனற்றை வீட்டுச் சுத்தி, பொருட் சுத்திக்காகப் பயன்படுத்துதலும் தமிழரது பண்டை வழக்கமே. போர்க்குச் செல்லுகின்றவர்கள் போர்புரியுமுன் எதிரியின் பசுக்கூட்டங்களைக் கவர்ந்து பாதுகாத்தல் மரபு. திருக்குறளில் இரவின் இழிவைப் பேசுமிடத்து, "ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு, இரவின் இழிவந்ததில்" என்றமையால் ஆவின் மதிப்பு அக்காலத்தில் மிகுந்திருந்த

தென்று ஊகிக்கப்படும். ஆரிய மரபினர் நெடுநாள் வரை பசுவையும் கொன்று யாகம் செய்தனர் போலும். அது மணிமேகலையில் ஆபுத்திரன் காதையால் இனிது விளங்கும்.

தமிழ் நாட்டுக் குழம்பு வகைகளும் கறி வகைகளும் சுருக்கமான செலவில் உடம்பிற்கு நோய் நீக்கமும் உரமும் தரத்தக்க முறையில் அமைந்துள்ளன. ஆப்பிரிக்காவில் குடியேறிய தமிழ் மக்கள் சுருங்கிய செலவில் உணவு கொண்டதனல் உணவுக்கு மிகுதிப் பணம் செலவிடும் ஐரோப்பியரை வாழ்க்கைப் போட்டியில் வென்றனர்.

உடைவகையில் நாட்டின் வெப்ப நிலைக்கு ஏற்றவாறு சுருக்கமான உடையே தமிழர் அணிந்துவந்தனரெனினும் மிகவும் மெல்லிய உடைகள் நெய்வதில் மேலைநாட்டினரும் புகழத்தக்க நிலையில் இருந்தனர். ஆதியில் தழையாடை வழக்கத்தில் இருந்திருக்கலாம். அதை நயமுறப் பின்னுவதில் தமிழர் மிகத் தேர்ச்சி பெற்றிருந்தனர். களவொழுக்கத்தில் தலைவி அணிதற் பொருட்டு, தழையும் கண்ணியும் தோழி வாயிலாகத் தலைவன் கொடுக்கும் வழக்கம் அகப்பொருள் நூலிற் பேசப்படுகின்றது. இப்பொழுது உமையம்மை கோயிலில் அம்பாளுக்குப் பூம்பாவாடை சாத்துவது பண்டை வழக்கத்தின் வழிவந்ததென்னலாம். மரப்பட்டையை ஆடவர் ஆதியில் உடையாகத் தரித்தனர். மரங்கள் மிகுதியாக இருந்த இந்திய நாட்டில்தான் அது தொடங்கியிருக்க வேண்டும். காட்டில் அப்பழக்கந் தோன்றியிருக்க வேண்டும். காட்டுக்குச் சென்ற இராமன் முதலியோர் மரவுரி தரித்ததாக இரா

மாயணம் கூறுகின்றது. தமிழர் வேடர் வாழ்க்கை நடத்திய பண்டைக் காலத்தில் வேட்டுவ வீரர் புலித் தோல், மான்தோல் என்பவற்றை உடையாகத் தரித்த னர் போலும். சிவபெருமானுக்குப் புலித்தோலாடை பேசப்படுதலின் அக் காலத்திலேயே சிவ வழிபாடு தொடங்கி யிருத்தல் கூடும். பிறவிலங்குகளின் தோலைப் பார்க்கிலும் சுத்தப்படுத்திய புலித்தோலும் மான்தோலும் சிறந்த இருக்கைகளாகச் சமயநெறி நிற்போரால் மதிக்கப்படுகின்றன. புலித்தோலினு லும் மான்தோலினுலும் பூசைப் பெட்டி முதலிய சாத னங்கள் செய்யப்படுகின்றன. மான்தோற் துண் டினைப் பூணுலில் அந்தணர் அணிகின்றார்கள். புலி, மான் என்னும் விலங்குகள் தென்னாட்டிலே தான் மிகுதியாகக் காணப்படும்.

பருத்தி யுடை இந்திய நாட்டில் தான் முதல் முதல் வழக்கத்தில் வந்தது. சிந்தம் என்ற பெயரால் அது மேலை ஆசிய நாடுகளுக்குச் சென்றது. மூங் கில்த் தாள்போன்ற மெல்லிய உடைகள் பண்டைக் காலத்தில் ஐரோப்பாவுக்கு மிகுதியாக ஏற்றுமதி செய்யப்பட்டன. மெல்லிய பஞ்சினுல் படுக்கைகள் தலையணைகள் தயார் செய்வதும் புற்களினுல் மிக மெல்லிய பாய்கள் நெய்வதும் பண்டைத் தமிழர் தொழிலே. கச்சணிதல் நூல்களிலெல்லாம் பேசப் படுவதால் தமிழ்ப் பெண்டிர் மேலாடையின்றி யிருந் தனர் என்பது தவறு. சிறுபான்மை அவ்வழக்கம் கீழ்க்குல மக்கள் கலப்பால் ஏற்பட்டிருக்கலாம். பொற் சரிகைப் புடவையும் மணிகள் கோத்த மேகலை யும் அணிதலும் கழுத்தில் மணி வடங்களும் காதில்

தோடும் தரித்தலும் பல நூல்களில் வருணிக்கப் பட்டன. சந்தனக் குழம்பு சிறப்பாகத் தமிழர்க்கே உரியது. "மென்றோள் வரித்த சாந்தின் மிசை விரித்து மீதிட்ட பட்டு ஒருபால் ஒளிர்தர" என்றமையால் தோளின் மீதுமேலாடை இடப்பட்டது என்பது விளங்கும். சங்கினாற் செய்த வளையும் இரத்தினக் காப்பும் அணிதல், விரல்களில் ஆழி அணிதல், உடம் பில் முத்து மாலை யணிதல், பவளக்கோவை யணிதல் முதலியன பண்டை நூல்களிற் பேசப் பட்டுள்ளன. மன்னர் மணிமுடி சூடுதலும் அத்தகைத்தே. திருமுரு காற்றுப் படையில் "ஐ வேறுருவில் செய்வினை முற்றிய முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி மின் உறழ் இமைப்பிற் சென்னிப் பொற்ப" என்ற விடத்து மின்போல் ஒளிர்கின்ற ஐவகை வேலைப் பாடமைந்த மணி முடியை அறுமுகப் பெருமான் அணிந்து விளங்கினமை வர்ணிக்கப்பட்டது. மக்கள் சிறப்பாக அணிந்த உடை வகைகளையும் அணிவகை களையும் அன்பு காரணமாகத் தெய்வங்களுக்குச் சமர்ப் பித்தமையால் நமது கோயிற்கருவூலங்களில் மிக்க வேலைப்பாடமைந்த வியக்கத்தக்க நகையினங்கள் பேணிவைக்கப் பட்டன. ஆடைகளும் அணிகளும் தென்னாட்டில் நின்று வணிகர்களால் வடநாட்டிற் கும் பிறநாடுகளுக்கும் கொண்டு போய் விற்கப் பட்டன. சிந்து நதிக்கரையில் தற்காலத்தில் தோண்டி எடுக்கப்பட்ட பொருள்களுள் தென்னாட்டு மணியணி கள் மிகுதியாகக்காணப் பட்டன. கிரீஸ், ரோம் முதலிய தேசங்களில் உள்ள செல்வர்கள் இந்நாட்டு உடைகளையும் அணிகளையும் மிக்க விருப்பத்துடன் மிகுந்த பொருள் கொடுத்து வாங்கினர். கிளாடியஸ்,

வால்ன்ஸ் முதலிய ரோமச் சக்கரவர்த்திகளின் நாணயங்கள் வைகையாற்றின் கரைகளிலும் கோயம் புத்தூரிற் சில இடங்களிலும் தோண்டி யெடுக்கப் பட்டன.

கடல் வணிகத்திலும் தென்னாட்டு வணிகர் கள் சிறந்து விளங்கினர். மயில்த் தோகை, அரிசி, தந்தம், முதலியன பாலஸ்தீன நாட்டிற்கும் கிரீஸ் நாட்டிற்கும் தமிழ் வணிகர்கள் கப்பலிற் கொண்டு போயினர். பாண்டிய நாட்டின் முத்துக்களைப் பற்றிப் புகழாத அந்நிய நாட்டினர் இல்லை. சாலடியா நாட் டின் தலைநகராகிய ஊரின் (Ur) புதை விடங்களில் மலை யாளத்தில் இருந்து வந்த தேக்கு மரத்துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன, அவை நாலாயிரம் ஆண்டு கட்கு முற்பட்டவை என்று ஆராய்ச்சியாளர் கருது கின்றார்கள். தந்த வேலைப் பாடுகளைப் பற்றிய பேச்சு வடமொழி வேதங்களிற் காண்டல் அரிது. கி. மு. ஏழாவது நூற்றாண்டிலேயே தமிழ் வணிகர் சீன தேசத்தில் வர்த்தகஞ் செய்தனர் என்பது அங்கே கிடைத்த பண்டை நாணயங்களால் தெரிய வருகிறது.

உலோகங்களில், பொன் என்பதை முதலிற் கண்ட வர்கள் தமிழரே. அது ஆதியில் தமிழ் நாட்டிற் சிறந்து விளங்கியதென்றும் அதில் நகைகள் செய்வ தில் இணையற்றவர்களாய்த் தமிழர் திகழ்ந்தனர் என்றும் டாக்டர் மெக்ளீன் சொல்லுகின் றார். பொன்னை வைத்தே பிறலோகங்களுக்குப் பேர்கள் வகுக்கப் பட்டன. செம்பொன் என்பது செம்பு எனவும், இரும்பொன் என்பது இரும்பு எனவும் மருவின. வெண் பொன் என்பது வெள்ளி

யைக் குறிக்கும். வடமொழியில் உள்ள சொர்ணம், தாம்பிரம், என்ற சொற்கள் ஆரியர்க்கு முன் வழங்கின சொற்களின் மருவிய மொழிகள். தென் இந்தியாவில் பொன் முதலிற் காணப் பட்டமையால் எகிப்து, மெசப் பட்டோமியா, சிந்து, முதலிய தேசங்களில் தென்னிந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப் பட்ட பொன் மேலே நாடுகளில் முதல் முதல் உபயோகப்பட்டது என்று சரித்திர ஆசிரியர்கள் தெரிவிக்கின்றார்கள். சாலடியாவின் ஊர் (Ur) என்னும் நகரத்திற் காணப்பட்ட சாசனங்கள் இந்தியாவில் நின்று கப்பல்கள் அணிகள் செய்வதற்காகத் தங்கம் கொண்டு வந்தன எனக் கூறுகின்றன. கப்பலைக் குறிக்கும் நாவாய் என்ற சொல் கிரீக் மொழியில் எடுத்துக் கொள்ளப் பட்டது. ஆரியர்களுக்குக் கடலின் வடிவம் நன்கு தெரியாத காலத்தில் அவர்கள் பெரிய நதிகளைக் கடல் எனக் கருதினர். சிந்து என்ற சொல் சிந்து நதியை முதலில் குறித்துப் பின்னர்க் கடலைக் குறிக்க வழங்கிற்று.

கவின் கலைகளில் பண்டைத் தமிழர் மிகப் பேர் பெற்றுத் திகழ்ந்தனர். ஓவியம் எழுதுவதில் சித்திரங்களுக்கு உயிர்ப்புக் கொடுத்தலையே அவர்கள் முக்கியமாகக் கருதினர். நெடுநல் வாடை என்னும் நூலில் அதன் நயம் நன்கு காணப்படும். பட்டினத்தார் திருக்கழுமல மும்மணிக்கோவையின் ஒரு அழகான பாட்டில், பறவைகளின் சித்திரங்களைப் பார்த்து உண்மைப் பறவை யினங்கள் அவற்றை உயிருள்ளனவாய்க் கருதித் தழுவின என்று புனைந்துரைத்தார். அப் பாட்டில் பெண்களின் அழகு

நயந்தோன்றுமாறு அவர்ள் உறுப்பின் உவமை களையும் தொகுத்துரைத்தார். அப் பாட்டின் கருத்து வருமாறு:—" சிற்ப நூல் முழுவதுங் கரிசறக்கற்ற சித்திர வேலையாளர் தூய வெண்பளிங்கனைய சுவரின் மீது நவ மணிகளைத் தூவி, குவிந்த கூரிய தூரியக் கோல் கொண்டு சீராக உயிர்ப்புக் கொடுத்தெழுதிய இமையாத விழியுடைய அழகிய செழுந்தோகை யுடைய நீல மயிலும், கோலக் கயலும், பவளவாய் பசுங் கிளியும், புகை நிறப் புறவும், மேலெழுந்த முடி யுடைய பால் நிற அன்னமும், இனிய மொழி பயி லும் நாகணவாய்ப் புள்ளும், தம்முடைய இனங்களா மென்று திரியக்கொண்டு, உயிருடைய மயிலும், குயி லும் புறவும், அன்னமும் புள்ளும் வந்து தழுவுங்கால், இரண்டிற்கும் வேறு பாடறியாவகை யமைத்த வளமிக்க பல மாடங்களிலே வாழ்கின்ற கற்பரசியா ராகிய குலமாதரது வண்டூதுங்குழலும், ஒளிமிகு முகமும், வளைந்த புருவமும், நிலவுமிழ்தோடும், நன் மென் மொழிகளும், சிற்றிடையும், முத்துமாலையும், எவ்வாறு தோன்றின வெனில், ஊழிப் பெரு வெள் ளத்தும், அழியாத நகரமிஃ தென்றெண்ணி முறையே கார்முகிலும், வெண்மதியும், வானவில்லும், கதிர வனும், அமுதமும், மின்னலும், விண்மீன் கூட்ட மும், சீகாழிவந்தமர்ந்தாற் போன்றன " என்பதே.

தமிழர்கள் கோட்டைகளும் கொத்தளங்களும் கட்டிப் பெரிய வீடுகளில் வாழ்ந்தனர். இருக்கு வேதத்தில் தாசியூக்கள் பெரிய அரண்மனைகளில் வசித்தனரெனவும், அவர்கள் அரண்மனைகளுக்கு நூறுவாசல்கள் இருந்தனவென்றும் பேசப்படுகிறது.

எழு நிலை மாடங்கள் என்பனவே பிற்காலத்துக் கோபுரங்களாயின. ஆயிரக்கால் மண்டபங்கள் அக் காலத்தில் இருந்தபடியே இக் காலத்திலும் காணப் படுகின்றன. தென்னாட்டில் உள்ள பெரிய கோவில் கள்போலப் பெருங் கட்டிடங்கள் வட நாட்டிற் காண்டல் அரிது. சிந்து நாகரிகத்தின் காலத்திலேயே கோயில்கள் இருந்தமையால் புத்தர் காலத்திற்குப் பின்தான் கோயில்கள் ஏற்பட்டன வென்பது தவறு.

எளிய வாழ்க்கையினர் மரத்து நிழல்களிற் கூடி இறைவனை வழிபட்டனர். ஆதி முறை அதுவே யாம் என்பதற்குச் சான்றாக ஒவ்வொரு தலத்திலும் ஒவ்வொரு மரம் இறைவனுக்குச் சிறந்ததாகப் பேசப் படுகிறது. திருநெல்வேலியில் மூங்கில் வனமும், மதுரையில் கடம்ப வனமும், சிதம்பரத்தில் தில்லை வனமும், மயிலையில் புன்னை வனமும், ஆதியில் வழி படும் இடங்களாய் இருந்தன. முதலில் கல் நாட்டி அதில் தெய்வங்களையும், வீரர்களையும், வழிபடுதல் வழக்கமாயிருந்தது. தொல்காப்பியம், திருவள்ளுவர், புறநானூறு, முதலிய சங்க நூல்களில் கல் நடுதலும், அதை வழிபடுதலும், திருவிழாக் கொண்டாடுதலும், குறிக்கப்பட்டன. அத்தகைய வழிபாடு பாலஸ்டீன் கிரீஸ் முதலிய நாடுகளிலும் ஏற்பட்டிருந்தது. பைபிளில் யாக்கோபு என்பவன் காட்டு வழியிற் சென்றபோதுதான் தெய்வக் கனவுகண்ட இடத்தில் ஒரு கல்லை நட்டு, அதற்குக் கடவுள் வீடென்று பேர் கொடுத்து அதன்மீது எண்ணெய் சொரிந்தானென்று கூறப்பட்டுள்ளது. தெய்வக் கல்லின்மீது வெயில் மழை படாதபடி கொட்டகைகள் போட்டு, வழி

படுவோருக்கும், சுற்றிவருவதற்கு இடம் அமைத்த போது மலையாளத்து அம்பலம்போன்ற கோயில்கள் அமைந்திருக்க வேண்டும். தில்லையிலுள்ள கனக சபையில் அத்தகைய கோயில் அமைப்பே காணப் படும். அம்பலம், மன்றம் என்ற சொற்கள் பலர் கூடும் இடத்தைக் குறிப்பன. ஆதியில் ஒவ்வொரு தெய்வத்துக்கும் மலையாளத்திற்போலத் தனித்தனி கோயில்கள் இருந்ததாகத் தெரிகிறது. கட்டிட அமைப்பு முறைகளை மக்கள் விருத்தி செய்தபோது பல சிறு கோயில்கள் அடங்கிய பெருங் கோயில் கள் கட்டும் வழக்கம் ஏற்பட்டது. கற்சிற்பம் விருத்தி யடைந்தபோது ஒவ்வொரு தெய்வத்திற் கும் தனிவடிவங்கள் செவ்வையாக அமைக்கப் பட்டன.

மக்கள் மனக் கருத்துக்களைச் சிற்ப ஓவியங் களிற் காட்டுமுறை தமிழர்களுள் மிக விரிவாகப் பெருகி வளர்ந்தது. நாலுபக்கமும் பார்க்கக் கூடிய தெய்வம் என்று காட்டுவதற்கு நான்கு முகங் கள் அமைப்பதும் வானையும் பார்ப்பதுணர்த்த ஐந்து முகங்களும் கீழ்உலகையும் நோக்குதல் காட்ட ஆறுமுகங்களும் அமைப்பது வழக்கமாயிற்று. அஞ் சாமை புணர்த்த அபயகரமும் கொடுப்பதுணர்த்த வரதகரமும் தீமைகளை ஓட்டுவதை யுணர்த்த மழுத் தரித்தகரமும் பாதுகாப்பதை யுணர்த்த மான் தரித்தகரமும் உருவங்களில் அமைப்பது வழக்க மாயிற்று. இருதயத்தில் நின்று உயிர்களை ஆட்டுவிப் பதையும் உடலில் இருபுறத்திலும் கத்திரிபோலக் குறுக்காகச் செல்லும் மூச்சோட்டத்தையும்

குருதியோட்டத்தையும் நரம்பின் அமைப்பையும் உணர்த்த நடேசரது நடனவடிவம் அமைந்திருத்தல் காண்க. உடுக்கின் ஒலியினுல் படைப்பதையும் அபயகரத்தினுல் காப்பதையும் நெருப்பேந்திய கரத்தினுல் ஒடுக்குவதையும் ஊன்றியபாதத்தினுல் மறைப்பதையும் எடுத்தபாதத்தினுல் வீடளிப்பதையும் காட்டுவான், கூத்தப்பெருமானது உறுப்புக்கள் அமைந்துள்ளன காண்க. திருமால் வடிவத்தில் பிரணவ வடிவாகிய சங்கு ஓங்கார ஒலியால் இறைவன் உலகத்தைப்படைத்தலைக் குறிக்கும். சக்கரம் உலகைக் காப்பதைக் குறிக்கும். தண்டம் அழிப்பதைக் குறிக்கும். வில் மறைப்பைக் குறிக்கும். வாள் பாசத்தை நீக்கி ஞானத்தைக் கொடுத்தலாகிய அருளுதலைக் குறிக்கும்.

பல்லாயிர ஆண்டுகளாகக் கட்டிட அமைப்பிலும் வடிவங்கள் செதுக்குஞ் சிற்பவேலையிலும் தலைசிறந்து விளங்கிய தமிழர் உயர்ந்த தத்துவக் கருத்துக்களைப் பொதுமக்களுக்கு விளக்கிக் காட்டுவதற்காகப் பல வகைத் தெய்வ வடிவங்களையும் அவற்றிற் சேர்க்கப்படும் படைக்கலங்களையும் வகுத்தமைத்தனர். தென்னுட்டுக் கற்சிற்பங்களிற் காணப்படும் பதுமைகள் நடு அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோவில் தோண்டி எடுக்கப்பட்ட பிம்பங்களை ஒத்திருக்கின்றன என்று H. G. Wells என்பவர் தமது உலக சரித்திரத்திற் கூறியுள்ளார்.

## நாட்டியக்கலை

பலவகைக் கூத்துக்கள் ஆடுவதிலும் தமிழர் திறமையுற்ற படியால் அவர்கள் கோயில்களில்

கூத்துவகைகள் வழக்கில் ஏற்பட்டன. சிவபெருமான் கூத்தியற்றுவதும் உமையம்மை தாளம் போடுவதும் * கலித்தொகைத் துதியுள் வர்ணிக்கப்

## கலித்தோகை மேற்கோள்

படுமுறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டியாடுங் காற்கோடுய ரகல்குறிக்
கொடிபுரை நசுப்பினுள் கொண்டசீர் தருவாளோ;
மண்டமர் பலகடந்து மதுகையானீ றணிந்து
பண்டரங்க மாடுங்காற் பணையெழிலணை மென்றோள்
வண்டாற்றுங் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ;
கொலையுழுவைத் தோலசைஇக்கொன்றைத்தார் [சுவற்புரளத்
தலையங்கை கொண்டுநீ காபால மாடுங்கால்
முலையணிந்த முறுவலாண் முற்பாணி தருவாளோ;

படுதல் காண்க. கண்ணன் காளிங்கனென்னும் பாம்பின்மீது நடனம் செய்தமையும் திருமால் குடக் கூத்தாடினமையும் காண்க. பிற தெய்வங்களின் கூத்துக்கள் சிலப்பதிகார உரையுள் விவரமாக இயம்பப்பெற்றன. மனத்தால் நினைப்பதை வாயினுற் பாடுவதுபோல உறுப்புக்களின் குறிப்பினுல் கருத்துக்களை விளக்குவது நாட்டியம் எனப்படும். திருக்கோயில்களில் நாட்டியக்கலையானது ஆதியில் நன்கு வளர்ந்தோங்கிற்று. வழிபாட்டுக் காலங்களில் உயர்ந்த சமயக்கருத்துக்களை விளக்கும் அடையாளங்களைக் காட்டி நாட்டியஞ் செய்தல் ஒரு பணிவிடையாயிற்று. நாட்டியம் இயற்றுவது பெரும்பாலும் பெண்களுக்கு உரியதாயிருப்பினும் ஆட

வரும் ஆனந்தக் கூத்தாடுதல் சிறுபான்மை வழக்கத்திலிருந்தது. நாட்டியமானது ஒழுக்கக்குறைகளைக் காட்டும் கலையாக மாறிக் கூடா ஒழுக்கமுடைய மாதரால் நிகழ்த்தப்பட்டமையால் அது இக்காலத்திற் கடியப்படுவதாயிற்று. நாட்டியமானது முத்தமிழில் கூத்து என்ற பகுதியைச்சார்ந்தது. ஆரியக் கூத்து என்றவாக்கியம் விளையாட்டு வகையுள் ஒன்ருக இருந்தது போலும். பரத நாட்டியத்தில் எவ்வளவு பகுதி ஆரியக் கூத்து என்பது தெரியவில்லை. பரதர் எழுதிய நூலில் விளக்கப்பட்ட கூத்து பரதநாட்டியமாயிற்று. கருத்துக்களை அடையாளங்களாற் காட்டுங்கலை தமிழருக்கு உரியதே. திருவிழாக்களும் மெய்ந்நூற்கருத்துக்களை விளக்கும் நாடகங்களாக அமைந்துள்ளன. சிவபெருமானுடைய ஐந்தொழிலை விளக்கவே திருவிழா நடைபெற வேண்டும் என்பது சைவநூற் கருத்து.

## இசைக்கலை

முத்தமிழின் நடுப்பகுதி இசைத் தமிழாகும். இனிமை தரத்தக்க ஒலிகளை இசைத்தொலிப்பது இசையெனப்படும். அது எழுவகைத்தான அடிப்படையை உடையது என்று முதலிற் கண்டவர் தமிழர் என்பது, காலஞ் சென்ற தஞ்சாவூர் ஆபிரகாம் பண்டிதர் எழுதிய பெருநூலினுல் இனிது விளங்கும். சங்கீத ரத்னகரம் என்னும் வடநூலில் தமிழ்ப் பண்களிலிருந்து இராகங்கள் தோன்றின எனக் கூறப்பட்டது. தாளத்தின் விரிவு திருப்புகழ் என்னும் தமிழ்நூலிற் காண்கின்றபடி பிறமொழிநூல்களிற் காண்பதரிது. இசைக்கருவிகளின் வளம் கல்லாடம்

முதலிய பண்டை நூல்களில் நன்கு பேசப்படும். உலகத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என இருவகையாகப் பகுத்து ஒவ்வொரு நிலத்துக்கும் மெல்லிய இசைபயிலும் யாழும் வன்மையான ஓசை பயிலும் பறையும் வெவ்வேருகக் கூறப்பட்டன. யாழே பிற்காலத்தில் வீணையாக உருவெடுத்தது போலும். குழலின் வகைகளில் நாகசுரம் என்னுங் கருவியும் அடங்கும். நாகசுரமே இக்காலத்திற் பெருங்கருவியாகப் பயன்படுகிறது. கூத்துக்கு உரிய இசைக்கருவிகள் தேவார முதலிய பல நூல்களிற் பேசப்படுகின்றன. தமிழ்மக்களிற் பலர் எல்லாக் கலைகளிலும் நன்கு பயிலாமை போலவே இசைக்கலையையும் நன்கு பயிலுவதில்லை. தமிழ் இசைவாணர் பலர் அருமையாக இயற்றியுள்ள பல வகைக்கீர்த்தனைகளையும் தமிழ் இசை அறிஞர் செவ்வையாகக் கற்றுத் தேர்வதில்லை. தற்காலத்தில் திருவனந்தபுரம் இலக்குமணபிள்ளை முதலிய இசைச் செல்வர்கள் முயற்சியால் தமிழ்இசை புத்துயிர் பெற்று நிலவுகின்றது. ஆயிரம் நரம்புடைய பேரியாழ் முதலிய இசைக்கருவிகள் எவ்வடிவினதாயிருக்க வேண்டுமென்று இப்பொழுது துலங்கவில்லை. மெல்லிய இசையின் தாக்கால் நரம்புகள் மென்மையடைதலும், வல்லோசையால் அவை முறிதலும் ஏற்படும். அசுணமா என்னுங் காட்டு விலங்கு யாழ் ஒலியைக் கேட்டபொழுது மென்மை அடைந்து உடனே பறையோசை கேட்கவே இறந்துபடும். அவ்விலங்கினை யாழினையும் பறையையும் ஒன்றின்பின் ஒன்ருக ஒலிப்பித்து வழிபோக்கர்கள் கொன்றனர் என்ப.

ஓவியம், சிற்பம், கூத்து, இசை முதலிய கவின் கலைகள் திருக்கோயிலில் வைத்துப் பாதுகாக்கப் பட்டமை போலச் செய்யுட் கலையும் இறைவனைத் துதிப்பதற்கு அங்கே பயிலப் படுவதாயிற்று. செய்யுட்கலையானது நாலாயிர ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பிய நூலில் விரித்து விளக்கப் பட்டது. நால்வகைப்பாவும் பாவினங்களும் சுமார் எழுநூறு வகைத் தொடைகளோடு விளங்கின. உரைச் செய்யுள், பாட்டிடைவைத்த குறிப்பு, பாவில்லாதெழுந்த சொல்தொடை, பொருளொடு புணர்ந்த பொய்ம்மொழி, பொருளொடு புணரா நகைமொழி என நான்கு வகையாகப் பேசப்பட்டது. தொடர் நிலைச் செய்யுள்களாகிய காவியங்களுக்குரிய வனப்பு எட்டு வகையாகும். புதிதுபுதிதாகச் செய்யும் பிரபந்தங்களுக்கு விருந்து என்று பெயர். தமிழில் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் உள்ளன. இசைப் பாடல்கள் வேறாய் உள்ளன. உள்ளத்தை உருக்கும் பெரியோரது அனுபவப் பாடல்கள் தமிழில் வளம் பெறக் கிடைப்பதுபோலப் பிறமொழிகளிற் கிடைப்பதரிது. சிவாலயங்களில் தேவார திருவாசகங்களும், திருமால் கோயில்களில் நாலாயிரப் பிரபந்தங்களும், இன்னும் அன்பு விளைத்துக் கொண்டிருக்கின்றன. சிவாலயங்களில் அத்திருவருட் பாடல்கள் தக்க முறையில் பயிற்றப்படுவதும் மதிக்கப்படுவதும் இல்லை. வைணவ ஆலயங்களில் அதுமதிப் படைந்தாலும் எல்லா மக்களாலும் செவ்விய முறையிற் பாடப் பெறாமல் ஓரினத்தாரால் வடமொழி வேதம்போலப் பிறர்க்குவிளங்கா முறையிற் பாடப் படுகின்றன.

சிவாலயங்களில் நாயன்மார்களும், வைணவ ஆலயங்களில் ஆழ்வார்களுக்கும் குரு பூசைகளும், திருவிழாக்களும் நடக்கின்றனவே ஒழிய அவர்கள் வரலாறுகளையும் உயர்ந்த கருத்துக்களையும் போதிக்குஞ் சொற்பொழிவுகள் நடைபெறுவதில்லை. அவ்வாறே திருவிழாக்களில் ஒவ்வொரு தலத்தின் ஐதிகங்களை விளக்கும் வரலாறுகளும் சிறப்புக்களும் வழிபடுவோர்க்கு எடுத்துரைக்கப் படுவதில்லை. தக்க சொற்பொழிவுகளும் போதனைகளும் ஏற்படுமாயின் கோயில்கள் சிறந்த கலாசாலைகளாக விளங்கும்.

ஒரு பொருளைப் பற்றிய உண்மைகளைத் தொகுத்து முன் பின் முரண்பாடில்லாமல் ஒழுங்குபடுத்திக் கூறுவது அப்பொருளைப் பற்றிய நூலாகும். இக்கருத்து தொல்காப்பியத்தில் விளக்கப்பட்டது.

தமிழில் இலக்கண நூல்கள் தனியேசெவ்வையாக அமைந்துள்ளன. அகத்தியர் இயற்றிய இலக்கணம் இப்போது கிடைப்பதில்லை. இயல், இசை, கூத்து என்ற முத்தமிழுக்கும் அவர் இலக்கணம் செய்ததாகக் கூறுவதுண்டு. இசைத்தமிழும் நாடகத் தமிழும் பிற்காலத்தில் தளர்ச்சியுற்றன. இயற்றமிழுக்குச் செம்மையான இலக்கண நூலாகத் தமிழர்க்குக் கிடைத்திருப்பது தொல்காப்பியமாகும். அது ஏறக் குறைய நாலாயிர ஆண்டுகளுக்கு முற்பட்டது. அதற்கு முன்னிருந்த ஆயிரக்கணக்கான நூல்கள் அழிந்தொழிந்தன. அதன் காலத்தில் உலகத்தில் அது ஒன்றே சிறந்த இலக்கணமாகத் திகழ்ந்திருக்க வேண்டும். அதன் கண் பிற்காலத்தில் சிற்சில பகுதிகள் சேர்க்கப்பட்டிருந்தாலும் அதன் ஆதிப் பகுதி

மிகவும் பழமை யானது. அது இடைச் சங்க காலத்தில் தோன்றிய நூல். கன்னியா குமரிக்குத் தெற்கே இருந்த குமரியாறு கடல் கொள்ளப்படுவதன் முன் இடைச்சங்கம் நிலைபெற்றிருந்ததாதலின் அக்காலத்திலேயே தொல்காப்பியம் தோன்றி யிருக்கவேண்டும். குமரியாறு கடல் கொள்ளப்பட்ட பின் பாண்டியர்கள் மதுரைக்குக் கிழக்கேயுள்ள மணலூரில் தங்கிய காலத்தில்தான் அர்ச்சுனன் அங்கே சென்றதாகப் பாரதம் கூறும். பாரதப்போர் நிகழ்ந்து கி. மு. 1200 க்கு முன்னாதலின் அதற்குமுன்னே குமரியாறு மறைந்திருக்க வேண்டும். வால்மீகி ராமாயணத்துள் தாமிரபாணி பேசப்படுவதே யொழியக் குமரியாறு பேசப்படாமையின் அக்காலத்தில் அது கடல் கொள்ளப்பட்டது என்பது ஊகிக்கப்படும். வடமொழியில் வான்மீகி நூலும் பாரதமுந் தோன்றுமுன்னமே தொல்காப்பியம் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும். பாரதம் இயற்றிய வியாசர் இப்பொழுதுள்ள வடமொழி நான்குவேதங்களையும் வகைப்படுத்தினராதலின் ஆசிரியர் நச்சினார்க்கினியர் இருக்கு முதலிய வேதங்கள் தோன்று முன்னே தொல்காப்பியம் தோன்றிய தென்று குறிப்பித்தார்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்துள் ஆவணிமுதலாக மாதங்களையெண்ணுதல் காணப்படுதலின் அப்படி எண்ணும் வழக்கம் வானநூலாராய்ச்சியால் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று புலனாவதால் தொல்காப்பியம் அத்துணைப் பண்டைக்காலத்திலேயே தோன்றி யிருக்கக் கூடுமென்று எண்ண இடமுண்டு. இரவும் பகலும் சமமாக இருக்

கின்ற நாள்வேனிற் காலத்தில் ஆண்டில் ஒரு தடவை ஏற்படும். அது தொல்காப்பியர் காலத்தில் ஆவணித் தொடக்கத்தில் ஏற்பட்டதாகும். அது சித்திரைத தொடக்கத்தில் ஏற்பட்ட பொழுது சித்திரை மாதம் முதல் மாதங்களை எண்ணும் இக்கால வழக்கம் தொடங்கி யிருக்கவேண்டும். ஆவணிக்கு நேரான சிங்க ராசியிலிருந்து சித்திரைக்கு நேரான இராசிக்குக் கதிரவன் வருவதற்கு சில ஆயிரக்கணக்கான ஆண்டு களாகும். இப்போது சித்திரைக்கும் முன்னே (மார்ச்சு 21ல்) சமநாள் ஏற்பட்டு விடுதலால் இக்கால வழக்கம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே தொடங்கி யிருக்க வேண்டும்.

இப்பொழுதுள்ள சிறந்த வடமொழி இலக்கண நூலாகிய பாணினியம் கி. மு. 8-வது நூற்றாண்டுக்கு முற்பட்டதன்றாதலின் மேற்கூறிய காரணங்களால் தொல்காப்பியம் அதற்கு முற்பட்ட தென்பது தெளிவு. ஆராய்ந்து பார்க்குமிடத்து இப்போதுள்ள பண்டை இலக்கண நூல்கள் எல்லா வற்றினும் பெரு மையும் பழமையும் மிக்கது தொல்காப்பியமே யாகும். தனக்கு முன்னிருந்த பல புலவர்களின்கருத்துக்களைத் தொல்காப்பியர் தொகுத்துரைத்தா ராதலின் அவர் காலத்திற் முன்னேயே பலவகைத் தமிழ் இலக்கியங் களும் தழைத்தோங்கி யிருக்கவேண்டும். ஆதலால் அறிவுவளர்ச்சியில் எந்நாட்டினர்க்கும் முன்னாகத் தமி ழர் சீரும் சிறப்பும் அடைந்தனர் என்பது போதரும்.

மருத்துவ நூலும் தமிழர்க்குள் மிக்க நயம் வாய்ந்திருந்தது. சித்தர் எனப்படும் அறிஞர்கள்

உடம்புக்கு நலம் தரும் முறைகளை ஆராய்ந்து நோய் நீக்கமும் நீண்ட ஆயுளும் தரத்தக்க மருந்துகளையும் முறைகளையும் கண்டனர். அவர்களுடைய கருத்துக் கள் நெடுநாள் உபதேச மூலமாகப் பரவி சில நூற்றுண்டுகளுக்கு முன் எழுத்து வடிவம் பெற்றன. திருவள்ளுவர் காலத்திற்கு முன்னேயே வாதபித்த கபம் என்ற கொள்கை தோன்றினமையால் அது திருவள்ளுவ நூலில் மருந்ததிகாரத்தின் முதல் குறளிற் பேசப்பட்டது.

> மிகினுங் குறையினு நோய் செய்யுநூலோர்
> வளிமுதலா வெண்ணிய மூன்று

அவ்வதிகாரத்தின் எட்டாவது குறளில் நோயை இன்னதென்று ஆராய்ந்து அதன் காரணத்தை அறிந்து அதை ஒழிக்க வல்ல வழியைத் தெரிந்து பொருத்தமான மருந்தைக் கொடுக்கவேண்டு மென் பதை அழகாக ஆசிரியர் கூறினர்.

> நோய்நாடி நோய் முதனாடியது தணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்

நோய் தீர்வதற்கு நோயாளி, மருத்துவன், மருத்துவன் துணைவன், மருந்து என்னும் நான்கும் இணக்கமாய் இருத்தல் வேண்டும் என்பதை ஆசிரியர் இறுதிச் செய்யுளிற்குறித்தார். உடம்பிலுள்ள நோய்களுக்கு முக்கிய காரணம் வயிற்று நிலையேயாதலின் நல்ல பசி உண்டானபின் அளவறிந்து மாறுபாடில்லாத உணவை உட்கொள்ளுதலே நோயைத் தடுக்கும் முறை என்று பிறகுறள்களில் ஆசிரியர் குறித்தனர். உடம்பை நீண்ட நாள் நிலைபெறச் செய்வதற்குரிய

யோகமுறைகளைத் தமிழ்மக்கள் நன்கு அறிந்திருந்தனர். யோக முறைகளை எளிதாகக் கையாளுவதற்குத் துணைசெய்யும் மருந்துகளை அவர்கள் அறிந்து பயன்படுத்தினமையால் வருத்தமின்றி யோகப்பயிற்சியை அவர்கள் பயின்று வந்தனர். தீரா நோய்களைத் தீர்க்கும் மருந்துகள் சித்த வைத்தியத்திலேதான் இன்றும் காணப்படுகின்றன. வைத்தியத்திற்கு உயிராயுள்ள முப்பு என்பதைக் கண்டுபிடித்து அதன் துணைகொண்டு உலோகங்களையும் நஞ்சுகளையும் சுத்தப்படுத்தி, பசிக்கு உணவுபோல நோய்க்கு உரிய செந்தூரம், பற்பம், சுன்னம் முதலிய மருந்துகளைத் தயாரித்த தனிப்பெரு மாண்பு தமிழ்ச் சித்தருக்கே உரியது. ஆனால் அவர்கள் கண்டுகூறிய முறைகள், ஒழுங்காகப் போதிக்கப்படாமையால் சித்தர்நூற் பொருளறியாது தவறான முறையிற் சென்று பலர் இடர்ப்படுதலின் உண்மைச்சித்த மருத்துவம் நன்கு பரவாதிருக்கின்றது. இது தமிழருக்கு ஓர் குறைவாகும். குட்டம், காசம், இருமல் முதலிய நோய்களை வேரறக்களையும் தாமிரபற்பம், தாளக செந்தூரம் இரசசுன்னம் முதலியன பிறமருத்துவ முறைகளில் உளவாயின் அவை தமிழ் நூல்களிலிருந்து தழுவப்பட்டனவேயாகும்.

உலோகங்களைச் சுத்தி செய்து அவற்றைப் பொன்னாக்கும் மருந்தினையும் தமிழர்கள் அறிந்து அம்மருந்தினால் உடம்பைச் சுத்தப்படுத்தி அதனை நெடுங்காலம் நிலைபெறச் செய்தனர். அம்மருந்து காயகற்பம் எனப்படும். இரசசுன்னத்தின் உதவி கொண்டு செம்பு முதலிய உலோகங்களைப் பொன்னாக்

கினமையால் அம் முறை இரசவாதம் எனப்பட்டது. காயகற்பத்தின் துணைகொண்டு மூச்சினை அடக்கி, அதனால் உண்டாகும் வெப்பத்தினால் உடம்பின் சத்தை அமிர்த மயமாக்குதல், உடம்பை இலேசாக்குதல், கனமாக்குதல், கூடுவிட்டுக் கூடுபாய்தல் முதலிய அருந்தொழில்கள் செய்தல் யோக முயற்சியின் பயனும். யோக முயற்சியைத் தமிழர் தவம் என்ற சொல்லாற் குறிப்பித்தனர். தவத்தினால் வேண்டிய வேண்டியாங் கெய்துப எனவும், கூற்றங் குதித்தலு மாகும் எனவும் ஆசிரியர் திருவள்ளுவர் கூறியது காண்க. திருமூலர் “ஏற்றி யிறக்கி இருகாலும் பூரிக்கும்காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாரில்லை, காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்கூற்றை உதைக்குங் குறியது வாமே” என்றதுகாண்க.

இரசத்தைக் கட்டிமணியாக்கி அதற்குப் பல பொருள்களின் சாரத்தை ஏற்றிக் குளிகையாக அதனைப் பயன்படுத்துதல் பல அருஞ்செயல் செய்வதற்குக் காரணமாகும். அது ஒரு தனிக்கலையாகக் கருதப்படும். ஒலியின் இயற்கை நுட்பங்களைப் பழந்தமிழர் நன்கு அறிந்து எல்லாவகையான பேச்சு ஒலிகளையும் அறிவியல் முறைக்கு ஏற்றபடி, தமிழ் எழுத்துக்களினால் எழுதக்கூடிய முறையையும் கலையையும் வளர்த்தமை காலஞ்சென்ற தமிழ்த்தலை மகனாராகிய திருவாளர் பா. வே. மாணிக்க நாயகரால் இனிது விளக்கப்பட்டது. மந்திர ஒலிகளாற் செய்யக்கூடிய மாற்றங்களையும் தமிழர் அறிந்திருந்தனர்.

நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த
மறைமொழி தானே மந்திரமென்ப.

என்பது தொல்காப்பியச் சூத்திரம். தாம் சொல்லுஞ் சொல்லால், கருதிய பயனைப் பயப்பிக்கும் மனவலி யுடையவர் மந்திரம் வல்லவராவர். மந்திரம் ஒரு வகை இலக்கியமாகத் தொல்காப்பிய நூலுள் பேசப் பட்டது.

இருக்கு வேதத்துள் தாசியுக்கள் இறந்தவரை எழுப்பும் மந்திரம் கற்றிருந்தனர் என்றதறிக. உடம் பிணை மருந்து மணி, மந்திரம் வாதம், யோகம் முதலிய வற்றால் நீடிக்கச்செய்யும் மாந்தர் உடம்பெடுத்ததின் பயனாக முழுமுதற் கடவுளைக் கண்டு நுகரும் முறை தேர்தல் மெய்ந்நூலாராய்ச்சி எனப்படும். இல்லறம் ஆற்றியபின் உலகம் நிலையாமை உணர்ந்து வீட்டு நெறி நிற்றல் தமிழர் மரபு என்பது.

> "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும்
> நில்லா உலகம் புல்லிய நெறித்தே"—
> காமஞ் சான்ற கடைக்கோட்காலை
> ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
> அறம் புரி மரபிற் கிழவனும் கிழத்தியும்
> சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.

எனவரும் தொல்காப்பியச் சூத்திரக் கருத்துக்களால் தெளியப்படும். மெய்ந்நூலே ஞானநூலெனப்பட் டது. மருந்து மந்திரம், மணி, வாதம், யோகம், ஞானம் ஆகிய ஆறும் பிற்காலச் சித்தர் நூல்களிற் கலந்து பேசப்படும்.

நீதிகளைச் சுருக்கமான மொழிகளில் திட்பமா கக் கூறுஞ்சிறப்பு தமிழருக்கே உரியது. நீதி கூறும் மொழிகளுக்கு முதுமொழி என்ற பெயர் தொல்காப் பியத்துள் அளிக்கப்பட்டது. பிற்காலத்தில் நீதிநூல்

களிற் சிறந்தன பதினெண்கீழ்க் கணக்கு என்பவற்றில் அடங்கும். நீதி இலக்கியத்தில் தமிழ் வட மொழியை வென்றது என்று டாக்டர் கால்டுவெல் கூறுகின்ருர்.

கணிதத்தில் தமிழ் வணிகர் மிகப் பேர்பெற்று விளங்கினர். எழுத்துக்களின் கோவை நெடுங்கணக்கு எனப்பட்டதால், எண், எழுத்து என்பவற்றில் எண்ணே முதலில் முக்கியமாகக் கருதப்பட்டதென்று தெரிகிறது. "எண்ணும் எழுத்தும்" "எண்ணென்ப ஏனையெழுத்தென்ப" என்னும் வாக்கியங்களில் எண்ணே முதலில் நிற்றல் காண்க. கோடிக்கு மேற்பட்ட இலக்கங்கள் பரிபாடல், பதிற்றுப்பத்து என்னும் நூல்களிற் குறிக்கப்பட்டன. கோடிக்கு மேற்பட்ட எண்களைத் தமிழர்கள் தெரிந்திருந்தனர் என்பது.

ஒன்றுபத்தடுக்கிய கோடிகடை இரீய
பெருமைத்தாக நின்ஞயுள் தானே.

என்ற அடிகளாற் புலனுகும். கணிதநூற் சார்பான வான நூல், சோதிட நூல் என்பவற்றில் தமிழர் தேர்ச்சி பெற்றனர் என்பது புறநானூற்றில் கூடலூர் கிழார் முதலிய புலவர்கள் வரலாற்ருலும் வாய்மொழியாலும் இனிது விளங்கும். கதிரவனை முதலாகக் கொண்டு கணிக்கும் ஆண்டு முறை தமிழர்க்குரியதென்பது ஆராய்ச்சிக் கருத்து. அம்முறையே ஆகமங்களிற் சிறப்பாகப் பயில்வதென்க.

## சமயக்கலை

இங்ஙனம் தமிழரது பண்டை நாகரிக நிலையைப் பலபட ஆராயப்புகில் விரியு மாதலின் அவர்களது

பிறவற்றை விடுத்து சமயக்கலையையும் மெய்க்கலையையும் ஆராய்வாம் :—தமிழ்நூல்களிலுள்ள வடமொழிச் சொற்களை ஆய்ந்துகொண்டுபோனால் இற்றை நாளிலும் கம்பர் காலத்தில் வடமொழிச் சொற்கள் குறைவாகவும் சங்க காலத்தில் அதிலும் மிகக் குறைவாகவும் காணப்படும். திருவள்ளுவர் நூலில் உள்ள சுமார் பன்னீராயிரம் சொற்களில் ஐம்பதுக்கு மேற்பட்ட வடமொழியில்லையென்ப. அவை தாமும் தமிழில் நின்று வடமொழிக்குப் போயினவோ என்னும் ஐயப்பாட்டிற்கு இடந்தருவன. இதனால் நாம் தெரிவது யாதெனில் பண்டைக் காலத்தில் அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆரியக் கலப்பு மிகவும் குறைவாய் இருந்தது என்பதே. இதற்கு முற்பட்ட ஒரு காலத்தில் ஆரியக் கலப்பு அறவே இல்லாதிருந்திருக்க வேண்டும். "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்ற அடியில் மொழி வேறுபாடே குறிக்கப்பட்டது என்று கொள்ளினும் ஆரிய மொழி பேசும் மக்கள் வேறு, தமிழ் மொழி பேசும் மக்கள் வேறு என்பது அதனாற்பெறப்படும். ஆசிரியர் நச்சினார்க்கினியர் "ஆரியர் கூறும் தமிழ்" நகைச் சுவைக்குக் காரணமாகுமென்றதுங் காண்க.

ஆரியர் இந்நாட்டில் வருவதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே தமிழர் இந்தியாவில் நாகரிகத்தோடு திகழ்ந்தனர் என்பது சரித்திர ஆசிரியர் முடிவு. திலகர் கொள்கைப்படி ஆரியர் கி. மு. ஆறாயிரம் ஆண்டிற்கு முன்னர் இங்கு வந்தனர் என்பதே ஆரியர் வருகையைப் பற்றிக் கூறும் மிகப் பழமையான காலக் கணக்காகும். சரித்திர ஆசிரியர் அரங்காச்சாரியார் என்பார், திராவிடர்கள் கி. மு.

எண்ணுயிரம் அல்லது ஒன்பதினுயிரம் ஆண்டுகளுக்கு முன் இங்கு வாழ்ந்தனர் என்று தமது இந்திய சரித்திர நூலிற் கூறிப் போந்தனர். மேலை நாட்டினர் மதிப்புப்படி ஆரியர் கி. மு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்தான் இங்கே வந்தவராவர். தமிழ் நூல் முறைப்படி இடைச் சங்க காலமாகிய தொல்காப்பியர் காலத்தில் தான் வடக்கிருந்து வந்த ஆரியரின் தொடர்பு தமிழருக்கு ஏற்பட்டதாகும். தலைச் சங்க காலத்தில் கடல் கொண்ட நாட்டில் தமிழ் வளர்ச்சியடைந்த போது ஆரியக் கலப்பு ஏற்படவில்லை என்றே ஊகிக்க இடமுண்டு. தமிழரது நாகரிகம் சிந்து நாகரிகத்திற்கு முற்பட்டதாதலாலும் இருக்கு வேதத்தில் தாஸ்யூக்களாகிய தமிழர்கள் கோட்டைகளும் கோயில்களும் உடையர்களாய்ப் பாலில் முழுகும் நல் வாழ்க்கை பெற்றுத் திகழ்ந்தனர் என்று பேசப் படுதலாலும் அவர்கள் போர் வாழ்க்கையும் இன்பவாழ்க்கையும் உடையராய்த் திகழ்ந்தனர் என்பது தெளிவு. பகுத்தறிவுடையவர்களை உயர்திணைக்குரியவர் என்பதும் பகுத்தறிவில்லாத உயிருள் பொருளும் உயிரில் பொருளும் அஃறிணைக்குரியனவாம் என்பதும் தமிழ் இலக்கணத்தில் தவிரப் பிற மொழி இலக்கணங்களிற் காண்டல் அரிது. வடமொழியில் திணைவேற்றுமை சொல்லைப் பொறுத்ததேயன்றிப் பொருளைப் பொறுத்த தன்று.

(இந்நூல் பக்கம் 16-ல் பார்க்க)

தமிழ் நாட்டில் ஐந்துவகை நிலத்திற்கும் உரிய தெய்வங்கள் வெவ்வேறாகக் கூறப்பட்டன. அவ்வந் நிலத்தில் உள்ளவர்கள் வாழ்க்கைப் பயன்களை விரும்பி அத்தெய்வங்களை வழிபட்டனர். முதலில்

மக்கள் இறந்த தாய் தந்தையரைத் தொழத் தொடங்கி அவர்களை அடக்கஞ் செய்த இடத்தில் கல்லை நாட்டி அக்கல்லின் கண், முன்னோர்கள் உயிரோடிருந்து தங்கள் வணக்கத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுத் தங்களுக்கு நலன் தருவதாக நம்பி வழிபட்டனர். நாளடைவிற் கிடைத்த பலனுக்கு ஏற்றவாறு வழிபாடு விருத்தியடைந்து வந்தது. தமிழ் நாட்டிற்குப் பொதுவாக முக்கண் தெய்வ வழிபாடு நிலவியிருந்தது. கடல் கொண்ட தென்னாட்டினை லெமூரியா என்று மேலை நாட்டினர் அழைப்பர். அந்நாட்டில் உள்ள ஆதி மக்களில் ஒருவகையார் பன்னிரண்டு அல்லது பதினைந்து அடி உயரமுள்ள வராய் முன் தலையில் தசைக்கோளம் (pineal gland) உள்ள இடத்தில் கண்போன்ற உறுப்பும் உருண்டையான நெற்றியும் உடையராய் இருந்தனர் என்பது ஸ்காட் எலியட்டின்கருத்தாகும். அவ்வினத்தார் வழி வந்த தமிழர் பண்டை முன்னோர் வடிவைத் தெய்வ வடிவாகக்கருதினர். மக்கள் கடவுளுக்குத் தங்கள் பழைய வடிவைக் கற்பித்தல் இயற்கை. மாடு கடவுளை வழிபடுவதானால் தன்னினத்திற் பெரியதொன்றாக அவரை நினைக்கும் என்றார் சுவாமி விவேகானந்தர்.

முக்கண்ணுடைய தெய்வம் சிவம் என்ற சொல்லால் வழிபடப் பட்டது. சிவம் என்ற சொல் தமிழ்ச் சொல் என்று டாக்டர் கிரையர்சன் கூறுகின்றார்* 'வேத இந்தியா' (Vedic India)

---

* Dr. Grierson says :—"The term 'Siva' is Tamil in its origin; the conception of Rudra-Siva has a tinge of Dravidian influence on the Aryans not only philosophically but on their whole mode of thought."

என்னும் நூலில் ரகோசின் என்பவர், சிவ வழிபாடு ஆரியர் வந்தபோது இந்நாட்டில் வாழ்ந்த ஆதி மக்களில் ஒருவகையார் வழிபாடென்று குறிப்பித்துள்ளார். சிவ என்ற சொல்லிலுள்ள சகர ஓசை ஆதியில் ஆரிய மொழியிற் கிடையாத கபால ஒலி (cerebral) என்னப்படும். அத்தகைய ஒலிகள் திராவிடச் சார்பால் ஆரிய மொழியிற் புகுந்தன என்று ஆசிரியர் ராப்சன் கூறுகின்றார் * சிவ என்ற சொல் செம்மை என்பதன் அடியாகப் பிறந்தது; அது சிவப்பு என்றும் நன்மை, மங்களம் என்றும் பொருள்படும். தமிழ் மக்கள் வேட்டுவ வாழ்க்கை நிலையிலிருந்த போது சிவனை வழிபட்டமையால் தமக்குள் அரிய செயலாய் மதிக்கப்பட்ட புலிக் கொலையையும் பாம்பு வசியத்தையும் அப்பெருமானுக்கு ஏற்றி வணங்கினர் போலும். புலித் தோலாடையும் பாம்பு நகையும் சிவ பெருமானுக்கு உரியனவாயின. கூரிய முனையுடைய மழு அக்காலத்துச் சிறந்த படைக்கலமாகும். வீரத் தந்தை பால் அச்சமும் அன்புடைய தாயின் பால் நேசமும் சிவனாரது திருவடிவிற் கலந்துள்ளன. சிவ வடிவம் பாதி ஆணும் பாதிப் பெண்ணும் கூடிய வடிவமாகும். சிவவழிபாடு நாளுக்கு நாள் விருத்தி அடைந்தபோது கதிரவனில் அக்கடவுள் வீற்றிருப்பதாகக் கருதப்படவே, கதிரவனது செந்நிறம் அக்கடவுளுக்கும்உரித்தாயிற்று. கதிரவனைக் கடவுளோடு ஒற்றித்து வணங்கிய காலத்தே செந்நிற

* Professor Rapson says :—"The cerebrals are foreign to Indo-European languages, while they are characteristic of Dravidian tongues."

முடைய இளங்கதிரவன் சிவனார் மகனாகிய முருகனது உருவமாகக் கருதப்பட்டது. முருகு என்ற சொல் அழகு என்று பொருள்படும். நீலக் கடலின்மீது நீல வானுக்கு முன்னாகத் தோன்றும் இளஞ் செஞ்ஞாயிற் றின் காட்சி தோகை விரித்த மயிலின் மீது வீற்றிருக் குஞ் சேயோனது காட்சி போலு மாதலின், அதன் அழகைக் குறிப்பதற்கு அங்கே வழிபடப்படும் தெய் வத்தின் பெயர் முருகன் எனப்பட்டது. மலையுச்சியில் அக்காட்சி தெளிவாகத் தோன்றி வணங்கப்படுதலின் மலைக்குரிய சிறந்த தெய்வம் முருகனாகக் கொள்ளப் பட்டது போலும்.

சிவ வடிவத்தில் நான்கு கைகள் காணப்படும். வலது பக்கம் மேற்கையில் மழு அல்லது சூலம் வைக்கப்பட்டுள்ளது. அது தந்தை வீரத்தைக் காட் டும் பழங்கற்காலப் படையாகும். சூலம் என்பது புதுக் கற்கால ஈட்டிபோல்வதாகும். வலது பக்கம் கீழ்க் கையானது அஞ்சவேண்டா மென்று அன் பரை அழைக்கும் நிலையில் அமைந்துள்ளது. சிவ வடிவத்தில் இடது பாகத்தில் மேற்கரத்தில் உள்ள மானனது வேட்டுவ மகளிரால் விருப்பமாய் வளர்க் கப்பட்ட மானைக் குறிப்பதாய்த் தாயின் இரக்கத்தை உணர்த்துவது. இடது பக்கத்துக் கீழ்க் கையானது மக்களுக்கு உணவுப் பொருள்களைப் பகுத்துக் கொடுக்கும் வடிவில் அமைந்துள்ளது. கடல் கொண்ட நாட்டிலேயே சிவ வழிபாடு தமிழ் மக்க ளுள்மெய்யுணர்ச்சி மிகுதிப்பட்டபோது முழுமுதற்

கடவுளின் வழிபாடாக ஆகிவிட்டது. கடல் கொண்ட நாட்டிற்குரிய தமிழ் மன்னன் ஒருவனைப்பற்றிய புறநானூற்றுப் பாடல் ஒன்றில் அவன் முக்கட் கடவுளைத் தவிர வேறொருவரையும் வணங்கான் என்பது கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகார காலத்தில் நுதல்விழிக் கடவுள் கோட்டத்திற்குக் கோயில்களுள் முதன்மையான இடங்கொடுக்கப்பட்டது. பிறப்பிறப் பில்லாதவன் சிவபெருமான் என்ற கருத்தும் அந்நூலிற் காணப்படும். பிற்காலத்தில் தமிழர் சமயக்கொள்கைகளை விளக்கும் வடமொழித் தந்திரங்களெல்லாம் சிவத்தையும் சிவசத்தியையுமே பெருந் தெய்வமாகப் பேசுகின்றன.

சிவலிங்க வழிபாடு தந்திரங்களில் முதல் இடம் பெற்றுள்ளது. சிந்து நாகரிகத்தில் அது பெருவழக்காய் இருந்தது என்பது அந் நாட்டில் கண்டெடுக்கப்படும் ஏராளமான சிவலிங்கங்களால் தெரியவரும்.

முருகன் தமிழ்த் தெய்வம் என்பதைப்பற்றி விரிவாகப் பேசவேண்டியதில்லை. விநாயகர் வழிபாடு யானைகள் மிகுந்துள்ள நாட்டிலேதான் தோன்றியிருக்க வேண்டும். தென் இந்தியாவில் அல்லது மேலை இந்தியாவில் அது முதலில் தொடங்கினது போலும். மலைகளிலேதான் அது தொடங்கக்கூடுமாதலினாலும் இயற்கை வழிபாடாகிய முருகன்வணக்கம் ஏற்படும்முன்னரே மனிதன் தன்னினும் பெருவடிவமுடைய யானையை வழிபட்டிருத்தல் கூடுமாத

லால் முருகன் குறிஞ்சிநிலத் தெய்வமாகக் கருதப்படு முன் யானை முகன் குறிஞ்சி நிலத் தெய்வமாக இருந் தனர்போலும். முருகன் சிவகுமாரனாகக் கருதப் பட்டபோது அவருக்கு முற்பட்ட யானை முகத் தெய்வம் சிவனாரது மூத்த பிள்ளையாகப் பேசப் பட்டது.

கதிரவனை இடமாகக்கொண்ட சிவபிரான் வெம் மையினால் அச்சம் விளைக்குந் தந்தைத் தெய்வமாகக் கரு தப்பட்டபோது தண்ணளிடையதாய்த் தெய்வத்தின் வடிவம் தண்ணீராகக் கருதப்பட்டது. ஆழமுள்ள தண் ணீரின் நிறம் நீலமாதலின் தாய்த் தெய்வத்தின் நிறமும் நீலமாயிற்று. சந்திரன் குளிர்ச்சி தருவதாகத் தோன்று வதால் சந்திரன் தாயின் அருவுரு வடிவமாகக் கருதப் படுதற்கு ஏதுவாயிற்று. சூரிய ஒளியில் தோன்றும் ஏழு நிறங்களில் முதலினுள்ளது சிவப்பும் இறுதி லுள்ளது நீலமும் ஆம். பாதி ஆணும் பாதிப் பெண் ணும் ஆகிய சிவவடிவத்தில் ஆண் பகுதி செந்நிற மாகவும் பெண் பகுதி நீல நிறமாகவும் கொள்ளப் பட்டது. சிவம் என்ற சொல் முழுமுதற் கடவுளைக் குறிக்கப் பயன்பட்டபோது எங்கும் நிறைந்திலங் கும் கடவுளின் ஆற்றல் சத்தி எனப்பட்டது. கடவுள் தன் ஆற்றலினால் எல்லாம்செய்வது உயிர்கள் மேல் வைத்த அருள் காரணமாம் என்ற கொள்கை எழுந்த போது சிவசத்தி அருளெனவும் தாயெனவும் வழங் கப்பட்டது.

கதிரவனைச் சிவத்திற்கு உவமையாகவும் அவன் ஒளியைச் சத்திக்கு உவமையாகவும் வழங்கியபோது

அவ்வொளி பரவிய இடமாகிய விண்ணும் சத்திக்குப் பேராயிற்று. விண்ணு என்றபேரே விண்டு எனவும் விஷ்ணு எனவும் மாறிற்று. இருக்கு வேதத்தில் விண்ணிற் பரவியகதிர் ஒளியே விஷ்ணுவாகப் பேசப்பட்டது. வியாபக ஆற்றல் ஆண் தன்மையாகக் கருதப்பட்டபோது விண்டு அல்லது விஷ்ணு என்ற சொல் சத்தியின் ஆண் வடிவத்தைக் குறிப்பதாகக் கருதப்பட்டது. அக் கருத்துடைய ஆகம சுலோகமும் உண்டு. சொல்லின் இடையே ஷகரத்தை டரகணகரங்களுக்குப் பதிலாக அமைத்துக் கூறுதல் ஆரிய மரபு. குட்டம்என்பதைக் குஷ்டம் எனவும் வேட்டி என்பதை வேஷ்டி எனவும் கூறுதல் காண்க. விஷ்ணுவுக்கும் சிவசத்திக்கும் நீல நிறமே பேசப்படுதல் காண்க.

இருளடைந்த பொழில்களில் வணங்கப்பட்ட தாய்த் தெய்வத்திற்குக் கருநிறம் பேசப்பட்டது. மாயோள் என்ற தமிழ்ச்சொல் கருநிறமுடையவள் என்று பொருள்படும். மாயோள் ஆண் வடிவமாகத் தொழப்பட்டபோது மாயோன் என்ற சொல்வழக்கத்திற்கு வந்தது. காடுகள் அடர்ந்த முல்லை நிலத்திற்குரிய தமிழ்த்தெய்வம் ஆதியில் மாயோளாய் இருந்து பின் மாயோனாயிற்று. முல்லை நிலத்தில் மாயோன்குழல் ஊதும் மேய்ப்பனாக வழிபடப்பட்டபோது கரு நிறத்தன் என்ற பொருளுடைய கிருஷ்ணன் என்ற சொல் ஆரியவழக்கில் வந்தது. கிருஷ்ணன் முல்லை நிலத்தின் தமிழ்த் தெய்வமென்றும் அவன் ஆரியத்தெய்வங்களுக்கு வேறானவன் என்

றும் காலஞ்சென்ற பி. டி. ஸ்ரீநிவாச ஐயங்கார் ஆய்ந்து கூறினுர். ஆணைச் சிறப்பாகக் கூறும் மரபு பற்றி விஷ்ணுவைத் தமையனுகவும் சிவசத்தியைத் தங் கையாகவும் கூறும் வழக்கம் ஏற்பட்டது போலும்.

கடவுளின் சத்தி உலகத்தைப் பரிபாலிப்பது போல அரசர்களும் தம்முடைய ஆற்றலால் உல கைப் பரிபாலித்தலின் கடவுட் சத்தியின் ஆண்வடி வாகிய திருமாலின் இனம் என்று அரசர்களைச் சொல்லுதல் வழக்கமாயிற்று. இராமன் வழிபாடு வீரவணக்கத்தைச் சேர்ந்ததாகும். இராமன் சிறந்த அரசனுய் விளங்கினமையால் அவன் திருமாலின் அவதாரமாகக் கருதப்பட்டான். இராமன் அரசகுடும் பத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்த திருவாளர் M. S. ராமசாமி ஐயர் முதலியோர் அக்குடும்பம் தமிழரசர் குடும்பம் என்றே துணிந்தனர். இராம னுக்குக் கரு நிறம் கூறப்படுதல் அதற்கு ஒரு சான்ருமென்ப. இராமன் என்பதைத் தமிழ்ச்சொற் ருெடராக எடுத்தால் இரவுபோன்ற மன்னன் என்று அது விரியும், அப்போது அவன் நிறம் சுட்டப்படு தல் காண்க. இராம ரகசிய உபநிடதத்துள் இராமனுடைய வடிவம் சிவ வடிவமாக வர் ணிக்கப்பட்டது. இராமன், கிருஷ்ணன் என்ற சொற்கள் வடசொல்லாய் இருப்பினும் அவை கள் தமிழருக்கு இட்ட பெயர்களேயாம். தமிழர் தங்கள் கருத்துக்களை வடமொழியிற் கூறுதல் நெடுநாள் வழக்கமாயிற்று. புதுமை, தோற்றப் பொலிவு முதலிய காரணங்களால் அவ்வழக்கம் ஏற்

பட்டதாகும். இதனை நன்கறிந்த டாக்டர் சிலேட்டர் ஆரியரெல்லாம் நாகரிகத்தால் திராவிடராயும், திராவிடரெல்லாம் மொழி அளவில் ஆரியராயும் ஆயினர் என்றார். இராமன் வழிபாட்டுடன், இராமருக்குப் பெருந்துணையாக இருந்த அனுமாரின் வழிபாடும் தொடர்ந்தது.

வானரர் என்று இராமாயணத்திற் பேசப் படுவோர் மக்கள் இனத்தவரே ஆவர். மக்களுள் ஒவ்வொரு இனத்தார் தமது நாட்டில் மிகுதியாயும் மிக்க உபயோகமாயும் உள்ள விலங்கையாவது பறவையையாவது தங்கள் அடையாளப் பிராணியாகப் பண்டைக்காலத்தில் கொண்டனர். சில இடங்களில் அவ்வடையாளப் பிராணிகளின் பெயரே அவ்வினத்துக்கும் அமைவதாயிற்று. பிற்காலத்துக் கதைகளில் அப்பிராணிகளின் வடிவமே அவ்வினத்தார்க்கும் ஏற்றிக் கூறப்பட்டது. அவ்வினத்தார் வழிபடும் தெய்வங்களுக்கு அப்பிராணிகள் வாகனமாயின. சிவபெருமானுக்குக் காளைவாகனம், காளை அல்லது நந்தியை அடையாளமாகக் கருதின தமிழ் இனத்தாரால் ஏற்படுத்தப்பட்டதாகும். உவணப் புள்ளாகிய வெண்கழுத்துப் பருந்தை அடையாளமாகக் கொண்டவர்கள் விரிந்த வானைவடிவமாகக் கொண்ட திருமாலுக்கு அதனை வாகனமாக்கினர். இராமாயணப்போரில் அனுமான் இராமனைத் தாங்கின படியால் விஷ்ணுவுக்கு அனுமான் சிறிய திருவடியாயினர். கருடன் பெரிய திருவடி எனப்படும்.

பாம்புவழிபாடு மலையில் வாழ்ந்த நாகருக்குள் முதலில் ஏற்பட்டுப் பிற்பாடு நாடெங்கும் பரவி யிருக்கவேண்டும். இப்போதும் மலையாளத்தில் தான் அது பெருவழக்காய் இருக்கிறது. பாம்பு சிவபெரு மானுக்கு அணியாயும், திருமாலுக்குப் படுக்கையாயும் இருக்கிறது.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்துள் பால்வரை தெய்வம் என்பது பேசப்படுகின்றது. அதன் பொருள் யாதெனில் ஒவ்வொரு உயிரும் அனுபவிக்க வேண்டி யதை வரையறைப்படுத்தும் கடவுள் என்பது. அது பிரமா என்ற ஆரியத் தெய்வத்தோடு பிற்காலத்தில் ஒற்றுமைப்பட்டது. பிரமாவிற்குத் தமிழர் கோயிலில் இடம் இல்லை. அனுபவிக்க வேண்டியதை அனு பவிக்கச் செய்யும் தெய்வத்திற்கு வினைத் தெய்வம் என்ற பெயர் தொல்காப்பியத்துள் கொடுக்கப்பட் டது. ஐம்பூதங்களுக்கும் தெய்வம் உண்டென்று தொல்காப்பியத்துள் குறிப்பிக்கப்படினும் அவை இன்ன என்று விதந்தோதப் படவில்லை. தமிழர் கருத் தைத் தழுவிய பிற்கால சிவாகமங்களுள் அயன் அரி, அரன், மகேசன், சதாசிவன் என்பவர்கள், முறையே நிலம், நீர், தீ, காற்று, வான் என்பவற்றிற் குத் தெய்வங்களாகப் பேசப்பட்டனர். காலம், உல கம், உயிர், உடம்பு, ஞாயிறு, திங்கள், சொல் என்ப வற்றிற்குத் தெய்வச் சார்பு தொல்காப்பியத்துள் குறிப் கப்பட்டது. காலக் கடவுள் உருத்திரன், யமன் என் பவர்களோடு ஒத்தும் உலகத் தெய்வம் திருமகளாயும், சொல் தெய்வம் கலைமகளாயும் இருத்தல் காண்க.

உயிரைப் போற்றும் தெய்வம் சிவமாயும், உடம்பைப் பேணும் தெய்வம் சத்தி அல்லது விஷ்ணுவாயும் கருதப்படும். மருத நிலத்தெய்வமாகிய வேந்தன் அரச தெய்வமாகிய சிவபெருமானோ அல்லது விண்ணவர் தெய்வமாகிய இந்திரனோ என்பது விளங்கவில்லை. நெய்தல் நிலத் தெய்வமாகிய வருணன் ஆரியத் தெய்வமோ தமிழ்த் தெய்வமோ என்னும் ஐயப்பாடு நிகழற்பாலது. வண்ணன் என்பது பாடமாயின் அது தமிழ்த் தெய்வத்தையே குறிப்பதாகும். இந்திரன் திராவிடக்கடவுளெனில் இன்றிறன் என்பது இந்திரனென மருவிற்றெனக. வடவேதத்தில் வருணன் கடற்றெய்வமாய் முதலிற் கருதப்படாமை காண்க.

ஆசிரியர் தொல்காப்பியர் காலத்திலேயே மும்மூர்த்திகள் உளர் என்ற கருத்து முளைக்கத் தொடங்கிற்று. எல்லாக் கோள்களுக்கும் நடுவிலிருந்து தனது கவர்சத்தியால் அவற்றைப் பிணித்து நிற்கின்ற கதிரவனது மண்டிலம் கொடி நிலை எனப்பட்டது. இரவில் பயிர்களுக்கு உயிர்தரும் திங்கள் மண்டிலம் அமுதத்தை வழங்குவதாகக் கருதப்பட்டு வள்ளி என்ற பெயர் பெற்றது. பற்றினவெல்லாம் அழிக்கின்ற நெருப்பு கந்தழி எனப்பட்டது. கதிரவன் ஒளியால் எல்லாம் உண்டாதலின் சூரிய மண்டிலமாகிய கொடி நிலைக்கு அதிபதி பிரமா ஆவரென்றும், சந்திர மண்டிலத்துக்கு அதிபதி காத்தற் கடவுளாகிய திருமால் என்றும், நெருப்பு மண்டிலத்துக்கு அதிபதி அழித்தற் கடவுளாகிய உருத்திரன் என்றும், உலகங்களெல்லாவற்றையும் அடக்கி நிற்கும் சத்தி மண்டிலத்

துக்கு அதிபதி கடவுள் என்றும் கருதப்பட்டது. கடவுளைத் துதிப்போர் மும்மூர்த்திகளோடு அவரைத் தொடர்புபடுத்திப் பேசுதலின் "கொடிநிலை வள்ளி கந்தழிஎன்ற வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும் கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே என்ற தொல்காப்பியச் சூத்திரம் எழுந்ததாகும். இவ்விடத்தில்; சூரியமண்டலாதிபதயே பிரம்மணே, நம: சந்திர மண்டலாதிபதயே விஷ்ணவே நம : அக்னி மண்டலாதிமதயே ருத்திராய நம : சத்தி மண்டலாதிபதயே ஈசுவராய நம : என்ற வடமொழி வாக்கியங்கள் நினைவுகூரத்தக்கன. பிரம வழிபாடும். திக்குப்பாலகரின் வழிபாடும் நவக்கிரகங்களின் வழிபாடும், ஆரியச் சார்பால் ஏற்பட்டன போலும்.

சிவன் கோயிலில் மூலஸ்தானத்திலுள்ள (கருவில்லில் உள்ள) சிவலிங்கம் ஆதித்தமிழர் வழிபாட்டைச் சார்ந்தது. சிவபெருமானைத் தாய் தந்தையாகக் காட்டும் அம்மையப்பர் வடிவம் வடமொழியில் உமாமகேசுவர வடிவம் எனப்படும். சிவபெருமானைக் குருவாகக் காட்டும் வடிவம் தக்ஷிணாமூர்த்தி வடிவம். தக்ஷிணம் என்பதற்கு ஞானம் என்பதுபொருள். தக்ஷிணாமூர்த்தியின் திருக்கையடையாளம் பாசப்பற்றைவிட்டு உயிர் கடவுளோடு சேரவேண்டும் என்பதைக் குறிப்பதாகும். நடேச வடிவம் ஐந்தொழிலைக் குறித்ததாக முன்னமே கூறப்பட்டது. இவ்வாறு ஒரே சிவத்தின் பல வடிவங்களே சிவாலயத்தில் இடம் பெற்றுள்ளன. ஓர் அரசனுக்குப் பரிவாரங்கள் இருப்பதுபோல ஒரு கடவுளுக்குப் பரிவாரமாயுள்ள அவரது அடியாரின்

வடிவங்களும், வாகனத்தின் வடிவங்களும் ஆலயத்தில் அமைதல் இயைபுடையதே. அரசாது அரண்மனை போலவே தமிழர்கள் தெய்வத்தின் கோயிலையும் கருதினர். கோயில் என்ற சொல்லே அரசன் வீடு என்று பொருள்படும். கோ = அரசன், இல் = வீடு. அரண்மனையில் கொடிகட்டும் நெடுந் தூண் இருப்பது போலக் கோயிலிலும் கொடிமரம் இருத்தல் காண்க. பிற சமய அடியார்களுக்கும், ஆசாரியர்களுக்கும் சிவாலயத்தில் இடமில்லை. திக்குப்பாலகர் வடிவங்கள் கோயிலில் அமைக்கப்படவில்லை எனினும் நவக்கிரகங்களின் வடிவங்கள் பிற்காலத்தில் கோயிலில் இடம் பெறலாயின.

திருமால் கோயில்களிலுள்ள பெருமாள், கண்ணன், இராமன், அனுமான், கருடன் முதலிய தெய்வங்கள் திராவிடத் தெய்வங்களேயாகும். கடவுட் சத்தியைத் தாயாக வழிபடும் தமிழர் வழக்கங் காரணமாக, சைவ வைணவ ஆலயங்களில் தெய்வங்களின் ஆற்றல் பெண் வடிவில் வழிபடப் படுவதாயிற்று. அதுவும் தமிழர் கருத்தின் விளைவேயாகும். ஆழ்வார்கள் அடியார்களாகத் திருமால் கோயில்களில் இடம் பெற்றனர். ஆதியில் ஒரு தெய்வக் கோயில்களே ஏற்பட்டிருந்தன. பிற்காலத்தில் தெய்வங்களின் பரிவாரங்களும் அவைகளில் இடம் பெறலாயின. எனினும் இக்கோயில்களில் முக்கிய தெய்வம் ஒன்றே வழிபடப் படுகின்றது. வடமொழி வேதத்திற் பேசப்படும் பல வேறு தெய்வங்கள் தமிழர் கோயிலில் இடம் பெறவில்லை என்பது தெளிக.

இக் கருத்தினை டாக்டர் கில்பர்ட் சிலேட்டர் தெளிவாகக் கூறியுள்ளார். "If Kali, Siva, and Vishnu are not Vedic dei ties and certainly they are not, they can hardly be Aryan, there seems no other possible alternative than to suppose they are Dravidian."

The worship of Kali of, Siva, and Vishnu of Parvathi the consort, and Subramania and Ganesa, sons of Siva and of Krishna the last incarnation of Vishnu, these things are not mere alien and unimportant accretions to an Indian culture of Aryan and Vedic origin; they are of the inner most essence of Indian culture.

ஒவ்வொரு மக்களினத்தாரும் தங்கள் முயற்சிக்குத் தாங்கள் எதிர்பார்த்த பயன் கிட்டாத போதும், எதிர்காலப் பயனைக் கருதியும் அச்சங் காரணமாகவரும் இடையூற்றை நீக்குதற் பொருட்டும், தெய்வத்தின் துணையை நாடுதல் இயல்பு. அங்ஙனம் நாடுவோர் தாங்கள் வழிபடும் தெய்வத்தை மகிழ்விப்பதற்காகத் தங்களுள் பெரியோர்களுக்கும் அரசர்க்கும் விருந்தினர்க்குஞ் செய்யும் மதிப்புச் செயல்களைத் தெய்வத்திற்குச் செய்வர். அது பூசனை எனப்படும்.

தமிழர் கோயிலிற் செய்யும் பூசனை வெப்புள்ள நாட்டில் தமிழ் மக்கள் வாழ்க்கை வசதி

களுக்கு ஏற்ற முறையில் அமைந்துள்ளது. பூசனை முறைகள் ஆதியில் தமிழர் வழக்கத்திலிருந்து பின்னர் வடமொழி ஆகமங்களில் எழுதப்பட்டன. பாதங்கழுவுதற்குரிய நீர் பாத்தியம் எனப்படும். வெயிலில் வழிநடந்து வந்தவர்களுக்குக் கால் கழுவத் தண்ணீர் கொடுப்பதுபோலத் தெய்வத்திற்குப் பாத்தியம் கொடுக்கப்படுகிறது. அதன் பொருட்டு வட்டகை அல்லது கிண்ணம் ஒன்றில் பாத்தியநீர் தெய்வத் திருவுருவத்துக்குமுன் வைக்கப்படுகிறது. அதைக் கழுவு புனல் என்னலாம். தாகத்திற்குத் தண்ணீர் கொடுப்பதுபோல ஆசமனஞ் செய்ய மற்றொரு கிண்ணத்தில் நீர்வைக்கப்படுகிறது. அதனைப் பருகு புனல் என்னலாம். வெப்பம் தணியத் தலையில் நீர தெளிப்பதற்காகப் பிறிதொரு கிண்ணத்தில் நீர் வைக்கப்படும். அது அர்க்கியம் எனப்படும். அதனைத் தெளி புனல் எனலாம். வாசனைப் பொருள்கள் கலந்த நீரில் செல்வர்கள் முழுகுவதுபோலத் திருவுருவத்துக்கு நீராட்டுதற் பொருட்டுத் திருமஞ்சனம் ஆயத்தஞ் செய்யப்படுகிறது. பண்டைச் செல்வர்கள் பால், பழரசம், இளநீர், தேன், சந்தனம் முதலியவற்றை முழுக்குப் பொருள்களாகப் பயன்படுத்தினர். எண்ணெயும், நெய்யும் தற்கால வழக்கத்தில் உள்ளனவே. நெய்ப்பசைபோக இளவெந்நீர் ஆட்டுதல் ஆகமத்துள் விதிக்கப்பட்டது. எண்ணெய் போக்குவதற்கு நெல்லிப்பருப்பு, பச்சரிசிமா சீயக்காய் முதலியவை பயன்படுகின்றன. பசுவிலுள்ள பால், தயிர், நெய் உபயோகப்படுவதுடன் தூய்மை செய்தற்

பொருட்டு அதன் நீரும் சாணமும் சிறிதளவு சேர்க்கப்படுகின்றன. தேவாரத்தில் ஆவில் ஐந்து என்று பேசப்படுவதே பஞ்சகவ்வியம் எனப்பட்டது. தெய்வத்திற்கு மலர்மாலை சாத்துதலும், ஆடை அணிகள் சாத்துதலும் எந்நாட்டிலும் காணப்படுவதாயினும் அவை இந்நாட்டிற் சிறப்பாக வழக்கில் இருக்கின்றன. மலரும்நீரும் கொண்டு பூசனை செய்வது தேவார திருவாசகங்களிற் பலபாடல்களில் ஓதப்பட்டது. தமிழ் நாட்டுக் கோயில்களிற் படைக்கப்படும் அன்னவகைக ளெல்லாம் தமிழர் உணவுவகைகளே. வாசனைத் தூபமிடுதல் தீபமிடுதல் பண்டைத் தமிழ் நூல்களிலெல்லாம் பேசப்படுகின்றன.

திருமுருகாற்றுப் படையில் வேட்டுவ வாழ்க்கையினர் செய்ததாகக் கூறப்படும் பூசைமுறையை உற்று நோக்கின் அதன் விரிவே தற்காலக்கோயில் பூசை முறையாம் என்பது விளங்கும்.

"சிறுதினைமலரொடு விரைஇ" என்றமையால் மலையில் கிடைக்கும் தானியமாகிய தினையைப் பூவோடு சேர்த்து நிறைநாழி வைக்கப்பட்டது என்று தெரிகிறது. மருத நிலத்தில் நெல்லை நிறைநாழியாக வைப்பது வழக்கம். 'வாரணக்கொடியோடு வயிற்பட நிறீஇ' எனவும் 'ஆண்தலைக் கொடியோடு மண்ணி' எனவுங் கூறுவதால் கொடிநாட்டித் திருவிழாக் கொண்டாடுவது மலைவேடர்களுள்ளும் வழக்கமாயிருந்தது. நெய், வெண்கடுகு முதலியவற்றை யுறைத்துக் கதவுகளிற் பூசுதல் பேய்க்கோள் முதலிய

இடையூறுகளை நீக்குவதற்குப் போலும். நெய்யி னைக் கல்லினுற் செய்த திரு உருவுக்குப் பூசுதலும் உண்டு. 'நெய்யோடு ஐயவி அப்பி' என்றதுகாண்க. வழிபடுந் தெய் வத்தின் மந்திரத்தை உருவெண்ணு தலும் நெஞ்சிற் கையை வைத்துத் தெய்வ உருவை நினைந்து கைநிறையப் பூவை எடுத்து திருவடிவத்தின் மீது சொரிதலும் "ஐதுரைத்துக் குடந்தம்பட்டுக் கொழுமலர் சிதறி" என்றமையாற் பெறப்படும். அது பிற்காலத்தில் வடமொழியில் ஆவாகனம் முதலிய செயல்களாக விரித்துரைக்கப்பட்டது. வெண்பொரி சிதறுதல் அக்காலத்துவழக்கம். ஆடு முதலியவற்றைப் பலியிடுதல் வழிபடுவோர் உணவைப் பொறுத்ததாகும். சைவ உணவுகொள்வோர் சைவ உணவையே தாங் கள் வழிபடுந் தெய்வத்திற்குப் படைப்பார்கள். தத்துவ உணர்ச்சி ஏற்பட்ட பிற்காலத்தில் முருகன் முதலிய கடவுளர்க்கு உயிர்ப்பலி செய்தல் நின்று விட்டது. 'தூஉவெள்ளரிசி' பலிப்பொருள்களுள் ஒன்றுயிருத்தல் காண்க. பல வகைப் பருப்புகளை மிகுதியாக அக்காலத்தில் தெய்வத்திற்கு முன் படைத்தனர். பசுமஞ்சளை அறைத்து நல்ல வாசனைப் பொருள்களோடு சேர்த்துக் கரைத்த நீரை எங்கும் தெளித்தலும் பெரிய அலரி மாலைகளை ஒத்த அளவில் துணித்துத் தொங்கவிடுதலும் அக்காலவழக்கங் களே. மகளிர் ஆடல் பாடல்கள் செய்தல் பண்டை மரபேயாகும். அவர்கள் ஊரை வாழ்த்துதலும் தெய் வத்தை வாழ்த்துதலும், அரசரை வாழ்த்துதலுஞ் செய் தனர். மலையிலுள்ள இயற்கை ஒலியுடன் பல வகை

வாத்தியங்களும் வழிபாட்டுக்காலத்தில் முழங்கின என்பது "இமிழிசை அருவியோடு இன்னியங் கறங்க" என்றமையாற் பெறப்படும். 'நறும்புகை எடுத்து' என்பதால் தூபங்காட்டுதல் விளங்கும். "உருவப்பல் பூத்தூஉய்" என்பதால் பல நிறமலர்களைத் தெய்வத்தின்மீது தூவிப்போற்றுதல் பெறப்படும். அதுவே பிற்காலத்தில் அர்ச்சனை செய்வதாக மாறிற்று. 'கொடு மணி இயக்கி' என்றமையால் மணியடித்தலும் 'கோடு வாய்வைத்து' என்றமையால் கொம்பு ஊதுதலும் பெறப்படும். மகளிர் கோழிக் கொடியை வாழ்த்திப்பாடியாடுதல் திருப்பரங்குன்றில் நிகழ்ந்ததென்ற வர்ணனை காண்க.

கும்பக் குடம் வைத்தலும் எடுத்து ஆடுதலும் தமிழ் மக்கள் பூசனை புரியும் எல்லாக் கோயில்களிலும் காணப்படுவதால் கும்பநீரில் தெய்வத்தைப் பாவித்துப் பூசனைபுரிதலும் கும்ப முழுக்காட்டுதலும் தமிழர் வழக்கமென்றே தோன்றுகின்றன. மாவிலை தமிழ் நாட்டில் உள்ளதே. நூல் சுற்றுதலும் தேங்காய் வைத்தலும் தத்துவ உணர்ச்சி ஏற்பட்ட பின் நரம்புக்கும் தலைக்கும் அடையாளமாக அமைந்தன போலும்.

நெருப்பில் தெய்வத்தை வழிபடுதல் குளிர் நாடுகளில் தொடங்கியதாகும். வெப்பம் மிகுந்த நாடுகளில் உள்ளவர்கள் தண்மைதரும் மரநிழலில் இறைவனை வழிபட்டனர். அதுபோலக் குளிர் நாட்டில் குளிர் காய்வதற்கு மூட்டப்பட்ட நெருப்பின் அகத்தே தெய்வத்தை மக்கள் வழிபட்ட

னர். தமிழ் நாட்டுமலைகளில் முனிவர்கள் நெருப்பு வழிபாடு செய்தனர் என்று புறநானூற்றிற் கூறப் பட்டுள்ளது. ஆனால் அது பெருவழக்காக நாட்டில் ஆதிக்காலத்தில் பரவவில்லை. ஆரியர் நெருப்பு வழி பாட்டை முக்கியமாகக் கைக்கொண்டமையால் அவர் கள் சார்பு பற்றியே ஆலயங்களில் அது கலப் புற்றதாகும். நெருப்பு வழிபாடு ஆரிய வேதத்துள் விதிக்கப்பட்டிருத்தலின், அது வேதநெறியின் பால தாகும். ஆனால் வடநாட்டில் வேதநெறி என்று சொல் லப்படுவதும் தென்னாட்டில் வேதநெறி என்பதும் வெவ்வேறு வகைப்படும். மழை முதலிய உலகப் பயன்களைக் கருதி நெருப்பில் தெய்வத்தை வழிபடு வதே வேதநெறியின் முக்கிய கருத்தாகும். பயன் கருதாது பரம்பொருளை நெருப்பில் வழிபடுதலும் உண்டு. அது சிறுபான்மையே காணப்படும். பெரும் பான்மையும் வடநாட்டு வேதநெறியில் பல தெய்வங் களைக்குறித்து ஊன் இட்டு வேள்வி செய்தலும் தென் னாட்டு வேதநெறியில் பரம்பொருளைக்குறித்து ஊனி டாது வேள்விசெய்தலும் சிறந்த பகுதிகளாம். முன்னையது வாம மார்க்கம் எனவும் பின்னையது தக்ஷிண மார்க்கம் எனவும் கூறப்படும். பின்னைய முறையில் தமிழ்நாட்டுச் சைவ வைணவ ஆலயங் களில் ஓமங்கள் நடைபெற்று வருகின்றன. நெருப்பு வழிபாடு கெடுதிவிளைப்பதுமில்லை. அவசியமும் இல்லை.

நாள் வழிபாட்டின் குறைகளை நீக்கவும் வழி பாட்டினர்க்கு ஊக்கம் விளைக்கவும் திருவிழாக்கள்

கொண்டாடப் படுகின்றன. வழிபடுவாரின் செல்வ வளத்திற்குத் தக்கபடி பல நாட்கள் திருவிழா நடைபெறும். திருவிழாக்களில் ஆடம்பரச் செலவு செய்தல் அவற்றை நடத்தும் மக்களின் மனப்பாங்கைப் பொறுத்ததாகும். ஒவ்வொரு தலத் திலும் அதன் ஐதிகக் கதைகளை விளக்குவதற்குத் திருவிழாக் கொண்டாடுதல் நாடக உணர்ச்சியின் பாலதே. முக்கிய ஐதிகங்களை மாத்திரம் நிகழ்த்திக் காட்டுதல் தக்கதே. சமய ஆசிரியர்கள் அடியார்களென்பவர்களின் திருநாட்களைக் கொண்டாடுதல் பாராட்டுதற்குரியதே. ஆனால் அக்கொண்டாட்டங்கள் உணவுப் பெருக்கத்தில் முடியாது அறிவுவளர்ச்சியில் முடிதல் வேண்டும்.

தமிழர் வீட்டு வாழ்க்கையில் சிறப்பான செய்திகள் நிகழும் போதெல்லாம் தெய்வ வழிபாட்டின் சார்பான சடங்குகள் நிகழ்த்துதல் வழக்கம். ஒவ்வொரு குடும்பமும் ஐயனார், காளி, உமை முதலிய தெய்வ இனங்களில் ஒன்றைக் குல தெய்வமாகக் கருதி ஆண்டின் ஒரு நாளில் அதற்குச் சிறந்த பூசனை இயற்றி வருகின்றது. அதைத் தங்கள் வருவாய்க்கு ஏற்ப ஊன்பலி இல்லாது நடத்துதல் நலம். பிறந்த நாட்கொண்டாட்டம் தமிழர் வழக்கத்தில் உள்ளதே. சோறுண்பித்தல், காது குத்தல், மயிர் கழித்தல், கல்விபயிற்றுதல், முதலிய சிறு சடங்குகளை மிக்க செலவில் நடத்த வேண்டியதில்லை. சைவ வைணவர்கள் ஏழாவது ஆண்டில் சமயம் புகுதலாகிய தீக்கை அல்லது முத்திரை தரித்தல் என்பதை

அவசியம் நடத்த வேண்டுமாயினும் சுருக்கச் செலவில் அவற்றை நடத்துதல் நலம். திருமணங்களை நடத்தும் முறை திருமண மகாநாட்டின் தீர்மானங்களிலும் அதற்கு முன்வெளியான சிறு நூல்களிலும் காணப்படும். சீமந்தம் முதலிய சடங்குகளை ஒழித்து விடலாம். இறந்தநாட் கடனையும் சிரார்த்தம் முதலியவைகளையும் சுருக்கச் செலவில் செய்வதே நலம். சிரார்த்தம் என்பது ஆரியமுறையில் தமிழருள் ஆதியிற் செய்யப்படவில்லை. அது இறந்த பெற்றோர்களுக்கு அவர்கள் செய்த நன்றியை உணர்ந்து செய்யும் நினைவுச் சடங்காகும். அவர்களைத் தொழுதலும் அவர்களுக்கு நற்கதி கிடைக்கும் பொருட்டு இறைவனை வழுத்துதலும் ஏழைகளுக்கும் தக்கவர்களுக்கும் அன்னமிடுதல் முதலிய புண்ணிய செயல்களைச் செய்து அவற்றின் பயனை இறந்தவர்கள்பாற் சேர்க்கும்படி கடவுளை வேண்டுதலும் செய்வதே நிகழற் பாலன. வீடுகளில் சேலைவைப்பதும் கல் முதலிய குறிகள் வைத்து அவற்றின்முன் படைப்பதும் அக்காலத் தமிழர் வழக்கங்களே. புதல்வர்களைப் பெற்று வளர்த்ததன் பயனாக அவர்கள் நற்செயலின் விளைவு பெற்றோர்களைச் சாரும் என்பது சமய நம்பிக்கை ஆகும். அச்சமயக் கொள்கை இல்லாதவர்கள் நன்றியறிவுச் செயல் ஒன்றே செய்தல் போதுமானது. சடங்குகள் எல்லாவற்றையும் ஒழித்து விடுதல் இயலாதாயினும் தீக்கை, திருமணம், ஈமக்கடன் என்ற மூன்றை மாத்திரம் அவசியமான அளவில் நடத்துதல் போதுமானது. தமிழர் தமிழக்

குருக்களைக் கொண்டு தமிழ் முறையில் தமிழ்மொழியி லேயே சடங்குகளை நடாத்துதல் வேண்டும். சைவச் சடங்கு விளக்கம் என்னும் நூலில் சடங்குகளைத் தமிழிற் செய்யு முறை கூறப்பட்டுள்ளது. வைணவர் கள் அம்முறையைத் தழுவித் தங்கள் தெய்வப் பெய ரையே பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஆண்டுப் பண்டிகைகளில் தைப்பொங்கலே சிறந்ததாகும். அதுமுதலில் கதிரவன் வழி பாட்டிற்குரியதாய்ப் பின்னர் அக்கதிரவனிற் பூசிக்கப்படும் சிவன் அல்லது திருமாலுக்கு உரியதாயிற்று. ஆண்டுத் தொடக்கத்தைக் கொண் டாடுதல் வழக்கமாயினும் பலபண்டிகைகளைக் கொண்டாடுதல் அவசியமில்லை யாதலின் அதனை அத்தனை சிறப்பாகக் கொண்டாட வேண்டியதில்லை. தீபாவளிப்பண்டிகை தமிழர்க்கு உரியதாகத் தோன்ற வில்லை. நரகாசுரன் என்ற ஒரு அசுரனைக் கொன்ற தற்காக மகிழ்ச்சி அடைதலைக்குறிப்பதற்கு அப் பண்டிகை வழக்கத்தில் கொண்டாடுப் படுகின்றது. அது புராண மதத்தைச் சார்ந்தது. அசுரர் என்பார் இன்னார் என்று தீர்மானித்தல் கடினமாயினும் சரித் திர ஆராய்ச்சியாளர் ஆரியர் பகைவரே அசுரர் எனப் பட்டார் என்ப. ஆரியர் பகைவர்களுள் ஆதியில் திரா விடர்களும் அடங்குவாராதலின் அசுரர்கொலைக்காக மகிழ்ச்சி யடைதல் தமிழர்க்கு ஏற்ற தன்றென்ப. இறைவனைச் சோதி வடிவமாக வழிபடுதல் திருக் கார்த்திகைநாளில் நிகழ்வதால் அது மறுக்கத் தக்க தன்று. அரியும் அயனும் சிவபெருமானது அடியும்

முடியுந் தேடியசெய்தியை அது காட்டுதல் காரண மாக அது சமயவேற்றுமை விளக்கும் என்று சிலர் கருதுவதுண்டு. ஒளிப்பிழம்பு வடிவாக இறைவனை வழிபடுதல் வைணவர்க்கும் ஒக்குமென்பது திருமால் கோயில்களிலும் அத்தகைய திருவிழா நடைபெறு தலால் விளங்கும். அரி, அயன், அரன் என்ற மூவர் களும் சிவபெருமானுக்குக் கீழ்ப்பட்ட உயிர்த் தெய் வங்கள் என்பது சைவக் கொள்கையெனில், அம் மூவ ரும் கடவுட் சத்தியாகிய திருமாலுக்குக் கீழ்ப்பட்ட வர்கள் என்பது வைணவ அறிஞர் கொள்கை யாத லின் மூவருள் இருவராகிய அரி, அயன் செய்தியைப் பற்றித் தக்கவைணவர் குறை கூற இடமில்லை. மேலும் ஒளிப்பிழம்பு என்பது படைப்பில் உள்ள எல்லா உல கங்களுக்கும் ஒளிதந்து அவற்றை ஒற்றுமைப் படுத் தும் எல்லை யற்றகடவுட் பேரறிவின் வடிவாகக் கணிக்கப் படுதலின் அவ்வுண்மையை அறியும் சைவ ராயினும் வைணவராயினும் கார்த்திகைச் சோதிவழி பாட்டைக் குறைகூறார் என்க. கதிரவன் வழிபாடு ஒளிவழிபாடாகும் எனில் அது ஓர் அண்டத்திற்கே ஒளிதருவதாய்ப் பேரொளிப் பிழம்பின் ஒரு பகுதியில் அடங்கி விடுதலின், அது எல்லையற்ற சோதி வழி பாடாகாது. ஆதலால் கார்த்திகைச் சோதிவழிபாடு தனிப்பட்ட உயர்கருத்தை உடைய தென்க.

கந்த சட்டித் திருவிழாவில் சூரன் கொலையைச் சிறப்பித்தல் எங்ஙனம் பொருந்துமெனில் தமிழர் தலைவனாய முருகன் தமிழர் பகைவனை வென்றதே கந்தப்புராணக் கதையாகும். அக்கதையை ஆரியத்தில்

எழுதினவர்கள் தமிழரைத் தேவரென்றும், அவர் களுடைய பகைவரை அசுரர் என்றுங் கூறினார் என் பதே ஆராய்ச்சியின் முடிவு. மேலும் சூரபன்மனை முருகன் ஆட்கொண்டு அவனின் ஒருபகுதியாகிய மயிலை வாகனமாகவும், மற்றொரு பகுதியாகிய கோழி யைக் கொடியாகவும் கொண்டனர் என்பதே புராண வரலாறுமாகும். அவனால் வந்த தீமையை ஒழித்தார் என்பதைப்பற்றியே முருகனுக்கு அத் திருவிழா கொண்டாடப்படுகின்றது. அத் திருவிழாவில் தெய் வத் தியானமும் பட்டினி நோன்பும், பொறியடக்க மும் நிகழ்வனவேயன்றி, வயிறு நிரம்ப உண்டலும் கூத்தாடலும் இல்லை என்றறிக. திருவாதிரை, சிவ ராத்திரி, நவராத்திரி முதலியன இயன்றவரை விரத மிருப்பார்க்கும் பயன்படுவனவாய்க் கடவுள் வழி பாட்டில் முடிகின்றன. அவற்றின் பொருட்டுத் தமிழர் தங்கள் பொருளைச் செலவுசெய்ய வேண்டிய தில்லை. எல்லாரும் அவற்றைநடத்த வேண்டுமென்ற கட்டாயமில்லை. திங்கள், வெள்ளி முதலிய வாரங் களில் விரதமிருத்தல் நிறைமதி, இருள்மதி நாட் களில் உணவு துறத்தல் முதலியன ஆரியச்சார்புபற்றி வந்தனவாயினும், உடம்பின் நலத்தின்பொருட்டு இயன்றவரை அவற்றை அனுசரிப்பதனாற் கெடுதி இல்லை. 'காப்பது விரதம்' எனவும், 'நோன் பென் பது கொன்றுதின்னாமை' எனவும் எழுந்த வாக்கி யங்களால், அருள் ஒழுக்கமே விரத நோக்கம் என் றறிக. ஆசிரியர் திருவள்ளுவர் கூறியமுறையில் அற் றால் அளவறிந் துண்பார்க்கு விரதம் மிகையே.

ஆதியில் மக்கள் உலகப்பயன்களைக் கருதியே தெய்வங்களை வழிபட்டனர். பிற்காலத்தில் உலகம் உயிர், கடவுள் என்பவற்றின் உண்மையையும் தொடர் பையும்பற்றி அறிவாராய்ச்சி செய்வதற்குச் சில அறி ஞர்கள் ஒவ்வொரு நாட்டிலும் தொடங்கித் தத்தம் அறிவுக்குப் புலனாகிய கருத்துக்களை வெளியிட்டனர். அவையே வெவ்வேறு சமயங்களின் அடிப்படையா யின. இந்தியநாட்டின் வடபாகத்தில் ஆரியரும் தமி ழரும் கலந்துசெய்த சமய ஆராய்ச்சிகள் பல்வேறு சமயங்களாகப் பரிணமித்தன. உலகாயதம், புத்தம், சைனம், தார்க்கீகம், மீமாம்சகம், சாங்கியம், யோகம், ஏகான்மவாதம் முதலிய சமயங்களும் சைவத்தின் கீழ்ப்பட்ட பகுதியினவாகிய வாமம், வயிரவம், காபாலம் முதலிய சமயங்களும் தோன்றி நிலவின.

## இந்து மதம் ஒரு மதமன்று

உலகத்தில் மதங்களுக்குப் பெயர் வழிபடும் தெய்வத்தை வைத்தாவது, சமயத் தலைவன் பெயரைத் தழுவியாவது, பிரமாண நூல்களைப் பொறுத்தாவது அமைவதேயன்றி மக்களினத்தின் பெயரால் அமை வதில்லை. வழிபடுங்கடவுளின் பெயர் சிவமாயின் அம்மதம் சைவமெனப்படும். தெய்வத்தின் பெயர் விஷ்ணுவாயின் மதம் வைணவம் எனப்படும். கிறிஸ்து மதமும் மகம்மதிய மதமும் புத்தமதமும் சைனமதமும் சமயத்தலைவர்கள் பெயரால் ஏற்பட் டவை. சொராஸ்டிரிய மதமும் கன்பூசிய மதமும் அத்தகையனவே. வைதிகம் சுமார்த்தம், என்னும் மதங்கள், வேதம் ஸ்மிருதி முதலிய பிரமாண நூல்

களின் பெயர் பெற்றன. இந்து மதம் என்ற சொல் கடவுள், ஆசிரியன், பிரமாண நூல் என்பவற்றுள் எதன் பெயரையுஞ் சார்ந்ததாகத் தெரியவில்லை. சிந்து நதிக்கரையில் இருந்தவர்களை ஹிந்துக்கள் என்று பாரசீகர் அழைத்தனர், அவர்களை இந்துக்கள் என்று கிரேக்கர்கள் கூறினர். இந்துக்கள் என்ற பெயரிலிருந்தே இந்தியா என்ற பெயர் ஏற்பட்டது. இந்திய நாட்டில் உள்ள பூர்வீகமக்கள் ஐரோப்பாக்கண்டத்தாரால் இந்துக்கள் என்று அழைக்கப்பட்டனர். இந்துக்களுக்குள் பல மதங்கள் இருப்பதை அறியாத மேலைநாட்டினர் இந்துக்கள் எல்லாருக்கும் ஒரு மதம் இருப்பதாக எண்ணி இந்துமதம் என்றபெயரைத் தோற்றுவித்தனர். இந்துமதம் என்றபெயர் தமிழிலாவது வடமொழியாலாவது உள்ள பண்டைநூல்களிற்கிடையாது. தற்காலத்தில்வடமொழிவேதத்தைப் பிரமாணமாகக்கொண்ட வைதிகர்கள் தங்கள்மதமே இந்துமதம் என்று பேசுபவராய் அம்மதமே இந்திய நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் உரியமதம்என்று நிலைநாட்ட முன்வந்துள்ளார்கள். ஆங்கில மதம், சப்பானியமாதம், அமெரிக்கமதம் என்று மதங்கள் இருக்குமாயின் இந்துமதம் என்ற ஒரு மதமும் உண்டென்னலாம். அவை இலவாதல்போல இந்துமதம் என்ற ஒரு மதமும் கிடையாது. வேதத்தையும் ஸ்மிருதியையும் பிரமாணமாகக் கொண்டமதமே இந்துமதம் என்றால் அது இந்தியாவிலுள்ள பலமதங்களில் ஒருமதமாகுமேயன்றி, அது இந்தியர் எல்லார்க்கும் உரிய பொதுமத மாகாது. தற்காலத்தில் இந்தி

யாவில் தோன்றிய இந்துக்கள், மகம்மதியர் முதலிய எல்லாரையும் இந்தியர்கள் என்பது பொருந்தும். ஆனால் இந்தியாவில் தோன்றிய புத்தம், சைனம், வைதிகம், சுமார்த்தம், சைவம், வைணவம் முதலிய எல்லா மதங்களையும் இந்துமதம் என்று கூறுதல் பொருந்துமாறில்லை. ஆதலால் வடமொழி வேதத்தின் வேறான சிறந்த பிரமாணங்களையுடைய தமிழ்ச் சைவவைணவர்கள் தங்கள் சமயங்களை இந்துமதம் என்று கூறுதல் அறிவுக்குப் பொருந்துவதில்லை. இந்திய அல்லது இந்துமதங்கள்பல. அவற்றுள் சைவம் வைணவம் இருமதங்கள் என்றல் பொருந்துவதே.

வேதவாக்கியங்களுக்கு சைவத்திற்கும் வைணவத்திற்கும் ஏற்றமுறையில் பொருள் கொள்ளுதல் பைபிளுக்கும் குரானுக்கும் சைவ வைணவப் பொருள் கொள்ளுதல் போலாகும். வேதத்திலும் உபநிடதங்களிலும் சிற்சில இடங்களில் சைவ வைணவக் கருத்துக்கள் காணப்படுதல் பற்றி அவற்றைப் பிரமாணமாகச் சைவர்களும் வைணவர்களும் கொள்ளுதல் பொருத்தமின்றாம். சைவச் சிறப்புப் பிரமாணநூல்களாகிய பன்னிரு திருமுறைகளுக்கும் பதினான்கு சாத்திரங்களுக்கும் மாறுபாடில்லாத வடநூற் பகுதிகளை தழுவத் தக்கன என்று சில ஆண்டுகளுக்கு முன் கூடிய சைவ மகாநாடு தீர்மானித்தது காண்க.

தமிழ்ச் சைவ வைணவ சமயங்கள் அடிப்படையில் ஒத்த கருத்துடையன. அது தொல்காப்பியம், திருவள்ளுவநூல், பரிபாடல் முதலிய சங்க

நூலாராய்ச்சியாலும் தேவார திருவாசக திருவாய் மொழி திருமொழி ஆராய்ச்சியாலும் நன்குபுலனாகும். சைவம் வைணவம் என இருபிரிவடங்கிய ஒரு சமயத்தைத் தமிழர் சமயமென்றுகருதி அதனைத் தமிழ் மக்கள் போற்றுவாராக.

## தமிழர் மெய்க்கலை

தொல்காப்பியர் காலத்துக்கு முன்னேயே தமிழ் நாட்டில் ஒவ்வொரு பொருளின் நுட்பங்களைக்கண்டு பிறருக்கு உணர்த்தும் சித்தர் அல்லது அறிவர் என்போர் தவமும் அறிவாற்றலும் உடையவராய் விளங்கினர். முதலில் நல் வாழ்க்கை பெற்றமக்கள் உண்மை ஆராய்ச்சி செய்யப் புகுந்து உலகிற்கும் உயிருக்கும் வேறாக அவற்றை இயக்கும் முழு முதற் கடவுள் உண்டென்பதை அறிந்தனர். அவர்கள் உலகப்பொருள்களை அகம், புறம் என்று பகுத்து ஆராய்ந்தனர். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் உலகில் அத்தகைய ஆராய்ச்சி செய்தவர்கள் தமிழரே ஆவர். அவர்கள் தமிழ்மொழி யமைப்பிலேயே உயர்ந்த மெய் நூற்கருத்துக்களை விளங்கும்படி செய்தனர். அது சில தமிழ்ச்சொற்களின்ஆராய்ச்சியினால் நன்கு புலனாகும்.

ஏனைய மக்கள் உடம்பினின்று உயிரை நன்கு பகுத்தறியாத காலத்தில் உயிரும் உடம்பும் வெவ்வேறு பொருளென்று அவர்கள் பகுத்துணர்த்தினர். அப்பகுப்பு அக்காலத்திற் பெரும்பான்மை மக்களுக்கு உணர்த்தப்பட்டமையால் இலக்கண நூலிலும் அவை எழுத்துக்களுக்கு உவமையாகு பெயராயின. இலக்கண நூற்பாக்களிலே இலக்கண விதி

கூறுமுகத்தானே உயிரின் இயல்பினை ஆசிரியர் தெரிவித்துள்ளார். "உயிரில் இயக்கம் இன்மையான" என்ற சூத்திரம் உயிர்கலவாத பொருள்கள் அசைய மாட்டா என்னும் உண்மையை உணர்த்திற்று. உயிரில்லாத பொருளை இயக்குவதற்கு உயிர்ப்பொருள் இன்றியமையாத தென்பதைச் சுருங்கிய சொற்களாற் பெறவைத்தார். உடம்பை இயக்கும் உயிர் போல சட உலகத்தை இயக்க ஒரு முதல்வன் வேண்டும் என்பது ஊகிக்கப்படும். உயிர் உடம்பின் சார்பாகத்தான் விளக்கம் எய்தும். உடம்பிற்கு வேருக உயிர்காணப்படாதது என்னும் உண்மையை யுணர்த்த "மெய்யின் வழியது உயிர் தோன்றும் நிலையே" என்று சூத்திரம் அமைத்தார். உயிர் உடம்பெடுத்தே விளக்கமடைய வேண்டியிருந்தாலும் உடம்பின் தன்மை வேறு, உயிரின் தன்மைவேறு; உடம்பு அறிவற்றதாய் இயக்கப்படுவதாய் நிலையில்லாததாய் இருப்பது; உயிரானது அறிவு, விழைவு, செயல்கள் உடையதாய்ப்பிறவற்றை இயக்குவதாய் நிலையுள்ளதாய் இருப்பது. உடம்போடு சேர்வதினுலே உடம்பு மயமாய் நின்று பொருள்களை அறியினும் தன்னியல்பினை உயிர் இழக்காது என்றஉண்மையை விளக்குதற்காக "மெய்யோடியையினும் உயிரியல் திரியா" என்னுஞ் சூத்திரம் எழுந்ததாகும். ஆய்தம் என்பது நுட்பமானது என்று பொருள்படும். எல்லா எழுத்தும்தோன்றுவதற்குக் காரணமான மூச்சொலியையே ஆய்தம் என்றுர். அது தானே எழுத்தாகாது எழுத்துக்கள் தோன்றுதற்குக் காரணமா யிருத்தலின் அதனைத் தனிப்பொருளாகிய கடவுளுக்கு

ஒப்பிடுவார் தனிநிலை என்றார். மெய்யானது சட உலகின் பகுதியாய் அதன் இயல்புடையதா யிருத்தலின் அது ஒரு சிற்றுலகமாகும். உயிரெழுத்தானது உயிரைக் குறிக்கும். ஆயுத எழுத்தானது கடவுளைக் குறிக்கும். எனவே, கடவுள், உயிர், உலகம் என்ற மூன்றுக்கும் குறிப்புச்சொற்கள் ஆதி இலக்கண நூலில் அமைந்திருத்தல் ஓர்க.

கடவுள் என்றசொல் சிறந்த மெய்க்கருத்துக்களை அடக்கிக்கொண்டு நிற்கிறது. உலகெல்லாம் உணர்ந்து ஓதுதற்கரிய முதல்வனைக் குறிப்பதற்கு வேறு எந்தச் சொல்லும் அத்தகைய பொருத்தமுடையதென்று தோன்றவில்லை. காணப்படுகின்ற உலகத்தைக் கடந்த பொருள், மனதைக்கடந்து, சொல்லைக்கடந்த பொருள் என்ற கருத்துக்களை அச்சொல் குறிக்கின்றது. பிற மொழிகளிற்பிறபொருள்களுக்குரிய சொற்களே கடவுளுக்கும் பெயராக அமைக்கப்பட்டன. எவ்வாறெனில் விளக்குதும். பிரமம் என்ற சொல் பெரியதெனப் பொருள்படும். கடல், மலை, வானம் முதலிய பல பொருள்களையும் தனித்தனி பெரியதென்னலாமாதலின் அச்சொல் கடவுளைமட்டுமே குறித்து நிற்பதன்று. எல்லாவற்றிலும் பெரியது கடவுள்என்றாலும், பெரியது என்றசொல் கடவுளின்தனித்தன்மையை நன்குவிளக்குவதில்லை. விஷ்ணு என்ற சொல்வியாபகம் உடையதென்று பொருள்படும். காற்று, வான் என்னும் பூதங்களும் உயிரும் வியாபகப் பொருள்களாதலின் அச்சொல்லும் கடவுளையே குறிப்பதென்று சொல்ல முடியாது. ஈசன், ஈசுவரன் என்ற சொற்

கள் முதன்மை குறித்து நிற்பன. பலவற்றின் முதன்மையுடைய பலருக்கும் அது பொருந்துமாதலின் அவை கடவுளின் தனித்தன்மையையே குறிப்பதென்று சொல்லமுடியாது. பிறவும் அன்ன. ஆனால் கடவுள் என்ற சொல் கடவுளைத் தவிர வேறு எப்பொருளையும் குறிக்கப் பயன்படுவதில்லை. கடவில் என்னாது கடவுள் என்றமையால், மனம் மொழி மெய்களைக்கடந்த ஒரு முழுமுதற் பொருள் உண்டென்பதே பெறப்படும். கடவுள் என்னும் மொழி இரு பொருள் உடையது. (1) கடவுள் = எல்லாவற்றையும் கடந்த பொருள். இதனால் கடவுள் உயிரும் அன்று, உலகப் பொருள்களுள் எதுவுமன்று, உலகப்பொருள் ஒன்றும் அன்றாதலின் அது உலகப்பொருள் போல அழிவதன்று, காணப்படுவதன்று, உலகெலாம் அறிதற்கு அரியது என்ற கருத்துக்கள் தொடர்ந்தெழும் என்க.

(2) கடவுதல் என்பது செலுத்துதல் என்னும் பொருளுடைமையால் எல்லா உலகத்தையும் உயிர்களையும் உள் நின்று செலுத்துவது அப்பொருள் என்பது முடியும். எல்லாவற்றையும் கடந்து நிற்கின்ற பொருளுக்கும் நமக்கும் தொடர்பு யாதெனில் நம்மை அது செலுத்துகின்றது, அறிவிக்கின்றது என்பதனலாகிய தொடர்பு பெறப்படும். இறைவன் உலகத்தைக் கடந்த நிலையை மேலை நாட்டினர் (Transcendental) என்பர். எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் இயக்குந்தன்மையை (Immanent) என்பர். இவ்விரு கருத்தையும் கடவுள் என்ற ஒரு சிறு சொல் தன்னுள்

அடக்கி நிற்றல் வியக்கத்தக்கதாகும். இவ்விரு கருத்தையும் மாணிக்கவாசக சுவாமிகள் ஒரு அழகான திருவாசகப் பாட்டில் காட்டியருளினர்.

" நினைப்பதாக சிந்தை செல்லும் எல்லையேயவாக்கினல்
தினைத்துணையும் ஆவதில்லை சொல்லலாவ கேட்பவே
அனைத்துலகும் ஆயநின்னை ஐம்புலன்கள் காண்கிலா
எனைத்தெனைத்த தெப்புறத்த தெந்தை பாதம் எய்தவே "

இயவுள் என்ற சொல் எல்லாவற்றையும் இயக்குகின்றவன் என்று பொருள்படும். இறைவன் என்ற சொல் எங்கும் தங்குபவன் என்றும் தலைவன் என்றும் பொருள்படும். முனைவன் என்ற சொல் உண்மை உணர்த்தும் குருவாகக் கடவுளைக் குறிக்கும். " முனைவன் பாத நன் மலர் பிரிந்திருந்தும் " என்ற திருவாசகமும் காண்க. முதல்வன் என்பது தலைமையைக் குறிப்பதற்குத் தொல்காப்பியத்திலே பயன்பட்டது. " சிதைவில என்ப முதல்வன் கண்ணே " என்பது சூத்திரம். ஆண்டவன் என்றது உயிர்களை ஆட்கொண்டு நற்கதி அளிப்பவன் என்று பொருள்படும். ஐயன் என்பது தலைவன், வியக்கத்தக்கவன் என்று பொருள்படும். என்றும் ஒருதன்மையதாய் நிலைத்த பொருள் என்று கடவுளைக் குறிப்பதற்கு மெய்யன், மெய்ப்பொருள், மெய், உள்ளது என்ற சொற்கள் பயன்பட்டுள்ளன. செம்மையாகிய பேரின்பப் பெருவாழ்வைத் தரும்பொருள் கடவுள் என்பதைக் குறிப்பதற்குச் செம்பொருள் என்றார். திருவள்ளுவர். செம்பொருள் என்பது செம்மையான பொருள் என விரியும். செம்மைநன்மை மங்கலம், ஆனந்

தம், "செம்மைசேர்நாமந் தன்னை" என்ற இராமாயண அடியில் அது மங்கலத்தைக் குறித்தது காண்க. செம்மை என்பதன் அடியாகச் சிவப்பு என்ற நிறப்பெயர் பிறந்ததுபோல, சிவம் என்ற மந்திரப் பெயரும் தோன்றியதாகும். சிவம் என்பது மந்திரமொழியாய் இருந்தமையால் பண்டை நூல்கள் அதைவெளிப்படையாய் வழங்கவில்லை. ஆசிரியர் நச்சினார்க்கினியர் "தமிழ் மந்திரங்களை வல்லார் வாய்க் கேட்டுணர்க" என்ற தறிக.

இறைவன் அறிவு வடிவாதலின் அறிவன், அறிவு என்ற சொற்கள் தேவாரத்தில் அவனைக் குறித்து நிற்பன. தற்பயன் கருதாது உயிர்களின் பொருட்டே இறைவனது ஆற்றல் எல்லாம் செய்தலின் அதனைத் திருவருள் என்று முன்னோர் செப்பினர். இறைவனது பெருமையைக் குறிக்கப் பெருமான் என்ற சொல்லும் வண்மையைக் குறிக்கப் பிரான் என்ற சொல்லும் வழங்கின. கடவுளுடைய ஆற்றலே விஷ்ணு எனக் கொள்ளப் பட்டமையால் பெருமாள் என்ற சொல் சத்தியைக் குறிக்கும் ளகரமுடிபோடமைந்து திருமாலைக் குறித்தல் காண்க. மால் என்ற சொல் அன்புமயமான அருட்சத்தியைக் குறிப்பதால் விஷ்ணுவுக்குப் பெயராய் வழங்குகின்றது.

வெளிஉடம்பைப் புறஉடம்பென்றும் உள் உடம்பை அகம் என்றும் நுண்ணுடம்பை மனம், நெஞ்சம் என்றும் அதற்கும் உள்ளீடாயுள்ள காரண உடம்பை உள்ளமென்றும் முன்னோர் வழங்கினர். பிறப் பிறப்புக்கள் தோறும் மாறி மாறி நிலை பெறுவ

தாகிய நுண்உடம்பு புறஉடம்பை நோக்க நிலைபெறுந் தன்மையது ஆதலின் அதனை மன்னுவது என்ற பொருளுடைய மனம் என்ற சொல்லால் அவர்கள் குறித்தனர். புத்தியைக் குறிப்பதற்கு அறிவு, புலம் என்ற மொழிகள் பயன்படும். ஒன்றைச் செய்யக் கருதும் மனநிலைக்கு உன்னுவது, உன்னம் என்ற பெயர்கள் உள்ளன. கற்பனை செய்யும் மனநிலை எண்ணம் எனப்படும்; ஞாபகசத்தி, நினைவு எனப்படும்.

## மன இயல்புகள்

மனத்தின் பல்வேறு இயல்புகளை எல்லாம் பொது மக்கள் அறிந்துகொள்ளுதற் பொருட்டு, திருவள்ளுவர் மனம், நெஞ்சம் என்ற பொதுச் சொற்களையே பயன் படுத்தினர். சில உதாரணங்கள் இங்கே தருதும். "நெஞ்சம் கடுத்தது காட்டும்" என்றவிடத்தும் "மன நலம் மன்னுயிர்க் காக்கம்" என்றவிடத்தும் மனத்தின் குண இயல்பு குறிக்கப்பட்டது. "தன்நெஞ்சறிவது பொய்யற்க தன் நெஞ்சே தன்னைச் சுடும்" என்றவிடத்து நெஞ்சு என்ற சொல் மனச் சாட்சியைக் குறித்தது. "என் நெஞ்சத்து ஓவாவரல்" "யாமும் உளேங்கொல் அவர் நெஞ்சத்து" என்ற விடத்து மனத்தின் நினைவு அல்லது கற்பனை ஆற்றல் குறிக்கப் பட்டது. "வினைத்திட்பம் என்பது மனத்திட்பம்" என்றவிடத்தும் "துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய நெஞ்சம் துணையல்வழி" என்றவிடத்தும் அறிவின் உறுதி குறிக்கப்பட்டது. "மனத்தானும் மாந்தர்க்கு உணர்ச்சி" என்ற இடத்தில் உணர்ச்சி நிலை குறிக்கப்பட்டது. "காதல் அவர் இலராக நீ நோவது பேதைமை வாழி யென்னெஞ்சு" என்றவிடத்

துப்பகுத்தறிவு குறிக்கப்பட்டது. "அளவறிந்தார் நெஞ்சத்தறம் போலநிற்கும் களவறிந்தார் நெஞ்சிற் கரவு" என்ற விடத்து, நெஞ்சம் கருத்துக் களஞ்சியம் என்பதும் உண்மையை மறைக்கும் இயல்பு அதற்கு உண்டென்பதும் உணர்த்தப்பட்டது. "ஊடல் உணங்கவிடுவாரோடு என்னெஞ்சம் கூடுவேம் என்பதவா" என்ற விடத்து அவா என்ற சொல் உன்ன ஆற்றலைக் குறிப்பது. அது வடமொழியில் அகங்கார தத்துவமெனப் படும். "கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்கோடு கொடேறுமென்னெஞ்சு" என்ற விடத்து மனத்தின் ஊக்க எழுச்சி புனைந்து உரைக்கப்பட்டது. மனம் எக்காலத்தும் சஞ்சலப்படும் இயல்பினது; ஒன்றைப் பெறுவதற்கு முன் அதனைப் பெற ஆசைப்பட்டுப் பெற முடியாத விடத்துக் கவலைப்படும், அதனைப் பெற்ற பின்னர், பெற்றது கைவிட்டுப் பிரிந்துவிடக் கூடாதே என்று கவலைப்படும். ஆதலால் எப்போதும் கவலையாகிய துன்பத்தை அனுபவிக்கும் இயல்புடையது மனம் என்பர் "பெறாஅமையஞ்சும் பெறிற் பிரிவஞ்சும் அறாஅ இடும்பைத் தென்னெஞ்சு" என்றார்.

காலம் மனத்தைத் துன்புறுத்துதல் விருப்பமான பொருள் கிடையாத இடத்தில் நிகழும் என்பதைக் காதலர் பிரிவின்வைத்து உணர்த்துவார் "மாலை நோய் செய்தல் மணந்தார் அகலாத காலை அறிந்ததிலேன்" என்றார். அசைவில்லாத நெஞ்சத்தை "நிறைநெஞ்சம்" என்பர். பல பிறவிகளில் மனம் ஒரு கருத்தை நினைப்பதை எழுபிறப்பும் உள்ளுவர் என்பதாற் குறிப்பித்தார். மறப்பும் மீள நினைத்தலுமில்லாது எப்போதும் விரும்பியது ஒன்றை மனம் நினைத்திருக்குந் தன்

மையை (Eternal Consciousnesss) "உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன் ஒள்ளமர்க் கண்ணாள் குணம்" என்றவிடத்துப் பெற வைத்தார். மனத்தில் மேற்பட்டுத் தோன்றாத உள்ளறிவு அல்லது கீழறிவு (Sub-consciousness) ஒன்று உண்டென மேலே நாட்டினர் கூறுவர். அக்கீழறிவின் பயன் உடம்பிற் தோன்றும் என்னுங் கருத்தைத் திருவள்ளுவனார் காதலியின் மொழியின் வைத்துக்காட்டினார். தலைவன் நம்மைப் பிரிந்த செயலை நாம் உணர்வதற்கு முன் நம்முடைய வளையல் உணர்ந்தது, அதாவது அவ்வுணர்ச்சியினால் உடம்புமெலிந்து வளையல் கழன்றது என்பது கருத்து. நேற்றுத்தான் நம்முடைய காதலர் பிரிந்து சென்றார், ஏழு நாளைக்கு முன்னமே உடம்பிற் பசலை படர்ந்தது. இக்கருத்துக்களை உணர்த்துஞ் செய்யுட்கள் வருமாறு:—

"தண்ணந் துறைவன் பிரிந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்தவளை"

"நெருநற்றுச் சென்றார் எங்காதலர் யாமும்
எழுநாளே மேனிபசந்து"

"மாலும் என்நெஞ்சு" என்பதால் ஐய அறிவும் "மையாத்தி நெஞ்சே" என்பதால் திரிபுணர்ச்சியும் சுட்டப்பட்டன. ஆசையினால் விரும்பாதவரையும் பின்பற்றுதல், ஆசையினால் செல்லாதவிடத்தும் முயற்சி செய்தல், விரும்பினோரைக் கண்டபோது அவர்கள் குற்றம் தோன்றாமை முதலிய பல இயல்புகள் மனத்தின் மீது வைத்துப் பல குறள்களில் உணர்த்தப் பட்டன. அவை விரிப்பிற் பெருகும். மனத்தின் மீது வைத்துப்பேசும் இயல்புகளெல்லாம் உயிரின்

குணங்களேயாகும். உயிரின் இயல்புகள் சில திருவள்ளுவர் நூலில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டன. தமிழருக்குப் பொது மறையாக விளங்கும் நூல் திருவள்ளுவரே யாதலின் அதிலுள்ள மெய்ந்நூற் கருத்துக்களை இங்கே காட்டலுற்றும். முற்கூறிய அறிவர் மரபினைச் சேர்ந்தவரே திருவள்ளுவர்.

## உயிர் இயல்பு

"மாயுமென் மாயா உயிர்," "மன்னுமுயிர்க்கு" என்றமையால் உயிர் அழிவில்லாதது என்பதும் 'எல்லா உயிரும் தொழும்' என்றமையால் உயிர்கள் பல என்பதும் "பற்றுக பற்றற்றான் பற்றினை" என்றமையால் உயிர் ஒரு தலைவனை உடையதென்பதும் உடம்பினுள் ஒதுக்கக் குடியாயிருந்த உயிருக்கு நிலையாய்ப் புகுந்து தங்கும் வீடு இல்லையோ என்ற பொருளில்,

> புக்கிலமைந்தின்று கொல்லோவுடம் பினுட்
> டுச்சிலிருந்த வுயிர்க்கு.

என்றமையால் உயிர்க்குப் பிறப்பும் இறப்பும் பிறவிப் பெருங்கடலைக் கடந்து சென்றடையும் வீடும் உள்ளன என்பதும் பெறப்படும். பொருளை இழந்தும் மேலும் மேலும் சூதாட விரும்புவதுபோலத் துன்பங்களை உயிர் நுகர்ந்தும் உடம்பில் மிகுதியாகப் பற்றுவைக்கும் அறியாமை யுடையது உயிர் என்பார்,

> "இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதே போற்றுன்பம்
> உழத்தொறூஉங் காதற்றுயிர்.

என்றார்.

இருள்சேர் இருவினை யென்றமையால் இருள் போன்று அறியாமையை விளக்குங் கட்டு உயிர்க் குளது என்பதும் பயன்கருதிச் செய்யும் நல்வினை தீவினை என்னும் இருவினைக் கட்டும் உயிர்க்கு உண்டு என்பதும்

பொருளல் லவற்றைப் பொருளென்றுணரு
மருளானு மாணுப் பிறப்பு."

என்றமையாலும்

நில்லாதவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

என்றமையாலும் மெய்ப்பொருளல்லாதவற்றை மெய் பொருளென்றுணரும் மயக்க உணர்ச்சியாகிய மருள் உயிர்க்கு உண்டென்பதும் ஊகிக்கப்படும். இருள், வினை, மருள் என்பவற்றைப் பிற்காலத்தில் ஆணவம், கன்மம், மாயை என்றனர் ஆகம நூலோர். உயிர் எதைச் சார்ந்ததோ அதன் வண்ணமாவதென்பர் 'நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகுமாந்தர்க் கினத் தியல்பதாகுமறிவு' என்றார்.

மாயா என்ற சொல்மாய்தல் ஆதல் என்ற இரு கருத்துக்களை அடக்கி நிற்கிறது. நிலையில்லாத சடப் பொருள்களெல்லாம் ஒடுங்கி மறுபடியும் உண்டா வதற்கு ஏதுவாகிய அடிப்படையே மாயா எனப் படும். மாயா என்ற சொல்மாயை என்றாயிற்று. மயக்கம் என்ற பொருளில் அது தமிழில் உபயோ கப் படவில்லை. படைப்பு என்ற சொல் படுத்தல் அதாவது பொருத்துதல் என்ற பொருளுடையதாய் உயிரையும் மெய்யையும் பொருத்துவதே படைப்புத்

தொழில் என்பதை யுணர்த்தும். சடஉலகின் வெவ் வேறுபகுதிகளை அவ்வவ்வற்றிற்குரிய தன்மைகளோடு பொருந்தி விளங்கச் செய்தலும் படைப்பேயாகும்.

"எனைப்பலகோடி யெனைப்பல பிறவும் அனைத் தனைத்தவ்வயின் அடைத்தோன்" என்ற திருவாசக மும் காண்க. தொல்காப்பியத்துள் "கொடிநிலை வள்ளி கந்தழி" என்ற சூத்திரத்தால் முத்தொழிலும் இறைவனுக்குக் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளன. "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூலாகும்" என்றமையால் இறை வனுக்கு இயல்பாகவே வினையில்லாமையால் அவன் பிறப்பிறப்பு இல்லாதவன் என்பதும் இயற்கை அறி வும் முற்றறிவும் உடையவனென்பதும் வினையும் சிற் றறிவு முடைய உயிர்க்கு உண்மை உணர்த்தக் கூடிய வன் அவனே என்பதும் கூறியவாறுகும். இறைவன் அருளால் முதல் நூல் தோன்றும் என்ற கொள்கை தமிழர்க்குள்ளேதான் முதலில் எழுந்ததாகும். அது பின்னர் ஆரியத்தில் தழுவப்பட்டது. ஆதிவட மொழி வேதத்தில் பலமுனிவர்களின் வாக்கே முதல் நூலாகக் கருதப்பட்டது. "காமப்பகுதி கடவுளும் வரையார்" என்றமையால் கடவுளையும் திருவருளை யும் கிழவனும் கிழத்தியுமாகப் பேசும் வழக்கம் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னேயே உள்ளது என்பது ஊகிக்கப்படும். கடவுளைத் தலைவனுகவும் உயிரைத் தலைவியாகவும் கொண்டு அகப்பொருள் நூல்முறைகளை அமைத்துப்பாடுதல் இதனுள் அடங்கு மென்பாரும் உளர். அம்முறையைத் தழுவியே தேவா ரம் திருவாய்மொழி என்பன அமைந்துள்ளன. இக் கருத்தை அறியாதார் இம்முறை காணப்படாத

வடவேதத்தின் சாரம் தமிழ்வேதம் என்றுபிழை படப் பேசுவர்.

திருக்குறட் கடவுள் வாழ்த்தில் முழுமுதற் கடவுள் இலக்கணம் நமக்கு வேண்டிய அளவில் விளக்கப்பட்டுள்ளது. கடவுள் இயற்கையாக எல்லாம் அறிபவர். உயிர்களாகிய நமக்கு அகக் கருவிகளையும் புறக்கருவிகளையும் அவர் கொடுத்து அறிவித்தாலன்றி நாம் ஒன்றையும் அறியோம். அறிவில்பொருளாகிய சடம் அறிவித்தாலும் அறியாது, அது செயற்படுத்தினால் தொழிற்படும். "அவன் அன்றிஓர் அணுவும் அசையாது."

கடவுள் முற்றறிவுடையவன், நம்முடைய அறிவு சிற்றறிவு. பொருள்களிற் சார்ந்து அவற்றின் வண்ணமாய் இருந்து அறிதல்நம் இயற்கை. கல்வி அறிவினால் முற்றறிவுடைய முதல்வனை அறிந்து அவனைத் தொழுது பிறவித் துன்பத்தை ஒழித்து வீடெய்துதலே நம்முடைய முடிவான நோக்கமாய் இருத்தற்குரியது. நம்முடைய உயிர்க்குயிராயிருந்தும் உலகிற்கு நடுவாய் இருந்தும் எல்லாவற்றின் இயல்பையும் விளங்கச்செய்யும்பேராற்றல் உடையவன் இறைவன். அவனுடைய அறிவாற்றலையும் செயலாற்றலையும் இடைவிடாது நினைந்தால் நாம் உயர்நிலையடைவோம். இறைவன் இயல்பாகவே குற்றமற்றவன். அவன் தனக்கென ஒன்றை விரும்புவதும் இல்லை, வெறுப்பதும் இல்லை. அவனை அன்போடு நாம் பற்றினால் பிறவித்துன்பத்துக்குக் காரணமாகிய உலகப்பற்று நம்மைவிட்டு அகலும். இவ்வுலகிலேயே பேரின்ப வாழ்வு பெறலாம்.

எல்லா அருஞ்செயல்களும் இறைவன் திருவருளால் நிகழ்வதால் உண்மைப்புகழ் இறைவனுக்கே உரியது. இறைவன் புகழை இடைவிடாது பேசுவார்பால் அறியாமையால் வருகின்றபயன் கருதிய நல்வினைத் தீவினைத் தொடர்புகள் சேரமாட்டா.

திருவள்ளுவர் மேலுலகைப்பற்றிப் பேசுங்கால் இல்லறத்தில் வாழ்பவன் முறைப்படி ஒழுகினால் வானுலகம் அடைவன் என்றும் யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் என்றும் கூறினர். எல்லாங் கடந்த மேலுலகை ஆனிலை யுலகம் என்றது புறநானூறு. அதனைச் சிவதருமோத்தரம் சிவலோகம் என்றது. வைணவர் அதனை வைகுந்தம் என்பர். அவா முற்றும் அறப்பெற்றவன் அழிவில்லாத மாற்ற மற்ற உயர் நிலையை அடைகின்றான் என்று அவர் குறித்தமையால் அதுவே முடிந்த வீடாகக் கருதற்பாலது. ‘இருள் சேர்ந்த இன்னாவுலகம்’ என்றும் ‘அளறு’ என்றும் நரகத்தை ஆசிரியர் கூறுவர்.

ஐம்பொறி அடக்கம் உயிரின் உயர் நிலைக்கு இன்றியமையாதது. என்றும் நிலைத்த பேரின்பத்தை நமக்குக் கொடுப்பதில் இணையற்ற பெருமானிடம் அன்பு செலுத்தினாலல்லாமல் மனக்கவலையை ஒழிக்க முடியாது.

இறைவன் நீதிக்கடலாய் இருப்பதோடு பேரருளும் உடையவன். அவனே பிறவிக்கடலினின்று நம்மை எடுக்கவல்லவன். ஏனெனில் அவன் பிறப்பிறப்பில்லாதவன். இவை திருவள்ளுவப்பயன்.

பிற்காலத்தெழுந்த தத்துவ நூல்கள் யாவற்றுள்ளும் ஆசிரியர் மெய்கண்டாரின் மெய்கண்ட நூல் சிறந்த உண்மைகளை நுட்பமாகத் தொகுத்துரைப்பது. கடவுள் உயிரோடும் உலகத்தோடும் ஒன்றுயும் வேருயும் உடனுயும் நிற்கும் நிலையும் உயிரானது தன்னறிவால் அறிய இயலாது இறைவன் தரும் பதி அறிவுகொண்டே அவனை அறியத்தக்க கடவுள் நிலையும் அசத்துப் பொருள்கள், சத்தாகிய கடவுள் முன் நில்லாத்தன்மையும் உயிர் கடவுட் பேரின்பத்தை நுகருமுறையும் அந்நூலிற் காண்பது போலப் பிற எந்நூலிலுங் காண்டலரிது.

இக்கருத்துக்கள் பெரும்பாலும் தமிழ்ச் சொற்களின் பொருள்களிலே அமைந்துள்ளனவாயினுந் தொல்காப்பியம் திருவள்ளுவர் என்ற நூலாராய்ச்சியாலும் அவை பெறப்படும். அவைகளெல்லாம் தொல்காப்பியத்திற்கு முன்னிருந்த அறிவர் உரைகளின் சாரமேயாகும். அறிவர் உரைகளை ஆசிரியர் நச்சினர்க்கினியர் ஆகமங்களென்பர்.

### ஆகமங்கூறும் முதல்கள் (தத்துவங்கள்)

சடமூலமாகிய மாயையினை இருபகுதியாகப் பகுத்துத் துன்பஞ் செய்யாத மேற்பகுதியைத் தூய மாயை அல்லது தமிழ் மண்டிலம் என்பர் திருமூலர். அது ஐந்து பகுதியுடையது. ஒவ்வொரு பகுதியும் பல வகைப் படைப்புகளுக்கு காரணமாவதால், 'முதல்' என்று சொல்லப்படும். அதனை வடமொழியில் தத்துவம் என்பர். "தமிழ் மண்டிலம் ஐந்தும் தத்துவமாமே" என்றூர் திருமூலர். தூயமாயை தூயதல்லாதமாயை என்ற இரண்டனுள் பின்னது முப்பது

பகுதி உடையது. தூய மாயை முதல்கள் ஐந்தும், தூய்தன் மாயையும் அதன் முப்பது பகுதிகளும் சேர்ந்து முப்பத்தாறு தத்துவங்கள் ஆகுமாதலின் "முதல் முப்பத்தாறே" என்றார் திருமூலர். இவை அண்டமாகிய உலகத்திலும் அதன் பகுதியாகிய உடம்பிலும் இருப்பதால் அவற்றை மெய்யின் பகுதிகளாகக் கருதி மெய் என்றலும் உண்டு. மெய் என்ற சொல் வடமொழியில் தத்துவம் என்று மொழி பெயர்க்கப்பட்டது. தத்துவங்களெல்லாம் மெய் என்பதில் அடங்கவே, கடவுள், உயிர், மெய், என்ற மூன்றினுள் எல்லாப்பொருள்களும் அடங்குதல் காண்க/

/என்றுமுள்ள முப்பொருளைக் குறிக்கும் கடவுள், உயிர், மெய் என்ற பழந்தமிழ் வாய்பாடு பிற்காலத்தே சிறிது மாற்ற முற்றது. இம் முப்பொருள்களின் தொடர்பை விளக்கக்கருதிய பெரியார், கடவுள் உயிர்க்குயிராய் உயிர்தோறும் பதிந்து அவற்றை இயக்கு முதல்வனாதலின் அவனைப் பதியென்று வழங்கினர்/ உயிர்கள் சிற்றறிவுடையனவாய் ஒரு தலைவனை உடைமையால் அவைகள் மனிதன் நடத்தும் மாக்கள் போல்வன. அம்மாக்களுட் சிறந்தவை பசுவாதலின், அன்னோர் உயிர்களைப் பசு என்ற மரபுச் சொல்லால் வழங்கலாயினர்/ 'ஏழையரிருகாற் பசுக்கள்' என்றது மது. உயிர்கள் கடவுளை அறிய வொட்டாமல் அவற்றின் அறிவினைமறைக்கும் மலமும், வினையும், சடவுலக மூலமாகிய மாயையும் நீரினைமறைக்கும் பாசம் போலுதலின் அவைகள் பாசமெனப்பட்டன./

*வையகத்துருவினர் மலரா அறிவினைப்*
*புலனிரை மறைத்த புணர்ப்பது போலக்*
*குளிர் கொண்டுறையுந் தெளிநீர் வாவியைப்*
*பாசடை மறைக்குங் கூடம்பெருமான்,* (கல். 9)

என்ற கல்லாடச் செய்யுட் பகுதியுள் இக்கருத்து அமைந்திருத்தல் காண்க. ஆகவே, கடவுள், உயிர், உலகம் என்ற வாய்பாட்டிற்குப் பதிலாகப்பதி, பசு, பாசம் என்ற வாய்பாடு வழக்கிலமைந்தது. வடநூலார் பதியென்பது தலைவனையும் பசுவென்பது மும் மலப் பிணிப்புற்ற உயிர்களையும், பாசமென்பது உயிரினைப் பிணித்தமும் மலத்தையு முணர்த்து மென்ப. இவ்வாய்பாட்டினை இறை, உயிர், தளையென வட்நூற்போக்கிற்கு ஏற்பச் செந்தமிழ் மொழியாலுணர்த்தலுமுண்டு.

தூயமாயையாகிய தமிழ் மண்டிலத்தில் இறைவன் திருவருட்பார்வையால் உண்டாகிய ஒளிமூலம் சிவமுதல் எனப்படும். ஒளி முதலின் கண்ணே உயிரொலி மூலம் உள்ளது. ஆதலால் அது ஒலி முதல் எனவும் கூறப்படும். ஒளி முதலை இறைவனின் அறிவாற்றலும் ஒலிமுதலை இறைவனது செயலாற்றலும் பற்றும். ஒளி ஒலிமுதலை நாததத்துவம் என்ப. ஒலி மூலத்திலிருந்து உண்டாகும்உருமூல முதலை விந்து தத்துவம் என்பர். ஒளியும் உருவும் கலந்து சிறப்பாகத் தோன்றும் முதல் அல்லது தத்துவம் அருவுரு முதலாகும். அங்கே ஓம் என்னும் முத்தமிழ் அல்லது பிரணவம் உருவெடுக்கும். ஒளி மூலமும், உரு மூலமும் எல்லாம் ஒடுங்குவதற்கு இடமாக உள்ளன. ஓங்காரம் எல்லாம் தோன்றுவதற்கு

அடிப்படையாக உள்ளது. ஓங்கார முதலை வட மொழியில் சதாசிவ தத்துவம் என்பர். ஓம் என்பது பாதுகாத்தல் என்னும் பொருளுடையது என்று வட மொழிக் கூர்மபுராணம் கூறும் அப்பொருளில் அச் சொல் தமிழ்ச் சொல்லேயாகும். ஓம்பு என்பதன் வேர்ச்சொல் ஓம் என்பதே. அப்பொருளில் அது வடமொழியில் வழங்காமையால் அப்பொருளுடைய அவஎன்னும் வடசொல்லிலிருந்து அது வந்தது என்பர் வடமொழிவாணர். அது அறிவுக்குப் பொருந்துவதில்லை. ஓம் என்ற முதல் எல்லா உலகிற்கும் கருவைத் தன்னகத்தே கொண்டது. அதன் கண் இறைவனது அறிவும் செயலும் சமமாய் நிகழும். செயல் மிகுதிப்பட்டபோது இறைவனது திருவுருவம் தோன்றும். அதனின்று உலகங்கள் உருவெடுக்கும். அந் நிலைபெருமுதல்வன் முதல் எனப்படும். அதனை வடமொழியில் ஈசுவர தத்துவம் என்பர். இறைவனது அறிவாற்றலால் எழுத் தொலிகள் வெளிப்பட்டுத் தோன்றி உயிர்களின் அறிவு நிகழ்வதற்கு ஏதுவாகும்நிலைதூய புலம் எனப்படும் அதனை வடமொழியாளர் சுத்த வித்தை என்பர். அத் தத்துவத்தில் அகர உகர மகரங்கள் வெளிப்பட்டுத் தோன்றும். அவற்றின் வாயிலாகக் கீழுள்ள உலகங்களை இயக்கும் அயன், அரி, அரன் அங்கு உளரென்று அறிவநூல் கூறும். ஓங்காரவடிவினின்று தமிழ் எழுத்துக்களின் உருபுகள் அமைக்கப்பட்டதென்பது திரு. வே. மாணிக்கநாயகர் கொள்கை. Mystic aspect of the Tamil Alphabet என்ற அவர் நூலைப்பார்க்க. ஒளிமூலமுதல், உருமூலமுதல், ஓங்காரமுதல், பேருருவமுதல், தூயபுல முதல் என்ற ஐந்தும் தூய

மாயை நின்று தோன்றிய தமிழ் மண்டிலங்கலாகும். தூயபுலமுதலுக்குக் கீழ் தூயதல்லாத மாயை உள்ளது. அது வடமொழியில் அசுத்தமாயா தத்துவம் எனப்படும். அதனின்று காலமுதல் அல்லது காலத் தத்துவம் என்பது தோன்றும். காலத்தின் இயல்பைத் திருவள்ளுவர் கூறியிருப்பது பலரும் அறிந்ததே. காலம் என்றசொல் தொல்காப்பியச் சூத்திரத்துள் எடுத்துப் பேசப்படுதலின் அதனை நச்சினார்க்கினியர் தமிழ்ச்சொல்லே என்றார். காலத்தின் பின் அவரவர் செய்யும் வினையை அவரவரே நுகரும்படி செய்யும் ஊழ்முதல் தூயதல்லாத மாயையினின்று தோன்றும். ஊழ் முதலை வடமொழியாளர் நியதி தத்துவம் என்பர். ஊழிற்குத் திருவள்ளுவ நாயனார் தனி அதிகாரம் வகுத்துள்ளார். ஊழ்வினைப்பயன் தவறாது என்பதும், ஊழ்வினைப்பயனை ஊட்டுபவன் இறைவனே என்பதும் உணர்த்துவார்

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தலரிது.

என்றார்.

காலமுதலும், ஊழ்முதலும் தோன்றியபின் தூய்தல்லா மாயையிலிருந்து உயிர்களின் அறியாமையைச் சிறிது கலைத்து நீக்குவதாகிய கலைமுதல் அல்லது கலா தத்துவம் தோன்றும். கலை முதலினின்று அறிவு முளைத்திற்கு ஏதுவாகிய புலமுதல் தோன்றும். அதனின்று ஆசை முதலாகிய அவா என்பது தோன்றும். அதுவே பிறப்புக்களுக்கு எல்லாம் வித்து என்று ஆசிரியர் திருவள்ளுவர் கூறினார்.

கலை முதலினின்று கீழுள்ள இருபத்துநாலு முதல்களும் உண்டாவதற்கு ஏதுவாகிய மூலப்பகுதி என்னும் முதல்தோன்றும். அதனையே சாங்கிய நூலார் முதல்தத்துவம் என்பார். அதற்கு முற்பட்டு உயிரின் அறிவு விழைவு, செயல்கள் பொதுமையாகத் தோன்றுவதற்கு ஏதுவாகிய கலை, புலம், அவா என்னும் முதல்களோடுகூடிய உயிரினை ஆள்முதலென்றும், புருடதத்துவம் என்றும் நூலோர் கூறுவர். மூலப்பகுதியினின்று பண்புமுதல் அல்லது குணதத்துவம் தோன்றும். பண்பு முதலிடை கடைஎன்று மூன்று வகைப்படும். செம்மை, விரைவு, மயக்கம் என்ற மூவகையாகவும் அவற்றைக் கூறுப. செம்மை மிகுந்து மற்ற இரண்டும் குறைந்தும் பண்பு முதலினின்று தெளிமுதல் கோன்றும். ஒன்றைப் பகுத்தறிவினால் இன்னதென்று தீர்மானிப்பது அதன் தன்மை. அது புத்திதத்துவம் என்று கூறப்படும். விரைவு மிகுந்து ஏனைய பண்புகள் குறைந்து பண்பு முதலினின்று உன்ன முதல் என்பது தோன்றும். அது வடமொழியில் ஆங்கார தத்துவம் எனப்படும். உன்ன முதலில் செம்மை, விரைவு, மயக்கம் என்ற மூவகைப் பகுதிகள் உள்ளன. செம்மை யுன்னத்திலிருந்து மனம், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து அறிவுப் பொறிகளும் தோன்றும். விரைவு உன்னத்திலிருந்து தொழிற்பொறிகள் ஐந்தும் தோன்றும். மயக்க உன்னத்திலிருந்து ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் பூதமூலம் ஐந்தும் தோன்றும். அவற்றினின்று ஐந்து பூதங்களும் தோன்றும். திருவள்ளுவர் பொறி வாயில் ஐந்து எனவும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று

ஐந்து எனவும் பூதங்கள் ஐந்து எனவும் கூறுவதால் இம்முதல்களெல்லாம் அந்நூலுட் பெறப்படுதல் காண்க. பொறிவாயில் என்பதன்கண் அறிவுப்பொறி ஐந்தும் வினைப்பொறி ஐந்தும் அடங்கும். மனம், நெஞ்சம், உன்னம் என்ற சொற்கள் மனம், புத்தி அகங்காரம் என்னும் தத்துவங்களைக் குறிக்க அந் நூலுள் வழங்கியிருப்பது முன்னமே காட்டப்பட் டது. சித்தம் என்பது நினைவு. அது எண்ணம் என்ப வற்றில் அடங்கும். ஒருவன் எதையாவது திண்ண மாக எண்ணிக்கொண்டிருந்தால் எண்ணிய பயனை அவன் அடைகின்றான் என்பது திண்ணம் என்பார்,

> எண்ணிய வெண்ணியாங் கெய்துபவெண்ணியார்
> திண்ணியராகப் பெறின்.

என்றார். மனம், நெஞ்சம் என்பவற்றிற்கு உள்ளீடாக உள்ள கலை, புலம், அவா என்பவற்றின் தொகு தியை ஆசிரியர் திருவள்ளுவர் உள்ளம் என்ற சொல்லாற் குறிப்பித்தார். "உள்ளத்தால் உள்ளலும் தீதே" "உள்ளத்தான் உள்ளான் வெகுளி," "உள் ளத்தாற் பொய்யாது ஒழுகின்" உள்ளம் உள்ளது உணரின் என்ற இடங்களில் மனத்துக்கு உள்ளீடா யுள்ள உள் மனத்தால் விழைதல், செய்தல், அறிதல் என்பன கூறப்பட்டமை காண்க. 'அகர முதல' என்ற வாக்கியத்திலேயே ஒளிமூலமுதலும் அதன் விரிவாகிய தூய முதல்களும் குறிப்பிக்கப்பட்டன. அது திருக்குறள் முதலதிகார விரிவுரையுட் காண்க.

தமிழ் மண்டிலம் ஐந்தும் கீழுள்ள பிறமுதல்களை இயக்கப் பயன்படுதலால் இயக்குப்பாகம் எனப் படும். தூய்தல்மாயையே, மாயை என நூல்களுட்

பேசப்படும். மாயை, காலம், ஊழ், கலை, புலம், அவா என ஆறுமுதல்களும் நுகர்ச்சி மூலப்பாகம் என்றும் மூலப்பகுதியும் அதற்குக் கீழுள்ள இருபத்து நாலு முதல்களும் நுகர்ச்சிப்பகுதி என்றும் கூறப்படும். மேற்கூறியவாற்றால் முப்பத்தாறு முதல்களின் விபரம் கண்டுகொள்க. இவையும் இவற்றாலாகிய உலகங்களும் கருவிகளும் படைப்பின் பகுதிகளாக அடங்கும்.

கி. மு. ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே தமிழ் நாட்டு அறிவர்கள் மேற்குறித்த உண்மைகளைக் கண்டு மெய்ந்நூற் கலையை வளர்த்து இந் நாட்டிலும் எகிப்து, சீனம் முதலிய பிற நாட்டிலுமுள்ள தக்க மாணவர்களுக்கு உண்மைகளைப் போதித்தனர். பிற்காலத்தில் வந்த ஆரியருள் தக்க அறிஞர்கள் தமிழ் அறிவரிடம் தத்தம் அறிவுக்கு ஏற்றபடி உண்மை உணர்ந்து சுவேதாசுவதரம் முதலிய உபநிடதங்களை இயற்றினர். அவையே பிற்காலத்தில் தத்துவ ஆராய்ச்சிக்கு அடிப்படையாகப் பயன்பட்டன.

தென்றமிழ் நாட்டில் மிகப்பழைய காலத்தில் கடவுளுண்மை யுணர்ந்த நான்கு அறிவர்கள் பிறப்பிறப்பு அற்று வீடடைவதற்கு ஏதுவாகிய ஒளி நெறியைக்காண முயன்றனர். அறிவர்களுள் (சித்தர் என்பார் உலகப்பயன் தரத்தக்க மருந்து மந்திரம் முதலிய பலகலைகளையும் வளர்த்தனர்). மேற்சொன்ன நான்கு அறிவர்கள் கடவுளை நினைந்து ஒரு ஆலமரத்தடியில் தவம் இயற்றினர். அவர்களுக்குக் கடவுள் தோன்றி ஒளிநெறியை அறுவுறுத்தினர். அது

ஓரானீழ லொண்கழ லிரண்டும் முப்பொழு தேத்திய
நால்வர்க் கொளிநெறி காட்டினை.

என்ற திருஞான சம்பந்தர் திருவாக்காலும்

1. 'ஆலமர் கீழலற நால்வர்க் கன்றுரைத்த
ஆலமர் கண்டத்தரன்'

2. 'ஆலநிழற் கீழறநெறியை நால்வர்க்கு
மேலையுகத் துரைத்தான் மெய்த்த வத்தோன்'

என்ற 'நாலாயிரப் பிரபந்தம் இயற்பா திருவந்தாதி' அடிகளாலும் இனிது விளங்கும். இதன் விரிவைத் திருநான் மறை விளக்கத்துள் காண்க. நோக்கத்தை வைத்தே நம்முடைய சமயத்துக்குப் பேர் ஏற்பட்டுள்ளது. திரு என்பது வீட்டின்பத்தைக் குறிக்கும். "பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானை" என்ற அடியில் திரு என்ற சொல் அப்பொருளில் வந்தது காண்க. திருநெறி என்பது தமிழர் சமயத்தின் பெயர். அதனைச் செந்நெறி யென்றுங் கூறுப. 'திருநெறியதமிழ்' 'செந்நெறிக்கே ஏற்றுந்தகையன' என வருதல் காண்க.

அறம்பொருள் இன்பங்களைப் பற்றிய ஒளிநெறியைத் திருவருளால் அறிந்தநான்கு அறிவர்களும் தத்தம் மாணவர்களுக்கு வெவ்வேறாக அதனை அறிவுறுத்தினர். அவர்கள் வாய் மொழியாற் கூறிய அருள் நூல்கள் நான்மறை எனப்பெயர் பெற்றன. கடவுளருளால் அவை உணர்த்தப்பட்டமையின் அவை கடவுள் கண்ட முதல் நூல் எனப்பட்டன. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றைப்பற்றிப்

பேசின. அறத்தாற் பொருளீட்டி உலக இன்பத்தைத் துய்த்து அதன் நிலையாமை கண்டு அதனை வெறுத்து வீட்டின்பம் நாடுதலே மனித வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகும். அகப்பொருள் நூலுக்கு இன்பங் கூறுதல் முக்கியமாதலின் 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு' என இன்பத்தை முதலில் எடுத்தோதினர், ஆசிரியர் தொல்காப்பியனார்.

தமிழ் என்றே சொல்லே இனிமை, இன்பம் என்ற பொருளுடையது. தமிழ் மண்டிலம் என்ற விடத்துத் தமிழ்தூய்மையை உணர்த்தும். தூய்மை அறத்தைக் குறிக்கும். "தமிழ் தழீஇய சாயலவர்" என்றவிடத்துத் தமிழ் அழகை உணர்த்திற்று. தூய தன்மையைக் குறித்தலால் அறத்தையும், இனிமை யாகிய பயன் தருவதால் பொருளையும், அழகைக் குறிப்பதால் இன்பத்தையும் அது சுட்டும் என்பாரு முளர். வீடென்பது பேரின்பமே யாதலின் அது இன்பம் என்பதில் அடங்கும். தே என்ற தெய்வத்தைக் குறிக்கும் சொல்லும் இனிமை என்ற பொருளுடையது, சிவம் என்ற சொல்லும் அப்பொருளுடையதே. தே + அம் = தேவம் என்பது தெய்வம் எனப் பிற்காலத்தில் மருவி வழங்கு வதாயிற்று. தேன் என்பதன் வேர்ச் சொல் 'தே' என்றறிக.

"தமி" என்ற அடியானது தனியெனப் பொருள் படுமெனக் கொண்டு தமிழென்பது ஒப்புயர்வற்ற மொழியென்று கூறுவாருமுளர். பழமையான மொழிகளுட் பழமையதாய், இன்று நிலவும் மொழிகளுட் சிறப்பாய் விளங்கும் தனிநயம் அதற்கே உரியது என்ப. தமிழ என்பது தமிழ் என ஆயிற்று என்

பார், அச் சொல்லைப் பிரித்து அகரம், இகரம், உகரம் என்ற மூன்று உயிரெழுத்தும் தகரம் மகரம் ழகரம் என்ற வல்லின மெல்லின இடையின எழுத்தும், இருத்தலோடு இறுதியில் நின்ற மகரம் இடையினச் சிறப்பெழுத்தாகவு மிருத்தல் பாராட்டற் பாலதென்ப. அச் சொல்லில் அகர உகர, மகர மிருத்தலால் ஓங்கா ரத்தின் பகுதிகள் அதிலிருத்தலாகக் கூறுதலுமுண்டு. ஒரு கற்பனைப்புலவர் 'அம்' 'இழுது' என்ற சொற் றொடரையே தமிழு, தமிழ் என மந்திரம் வல்லார் மாற்றிவைத்தனர் என்று கூறுகின்றார். இழுது என்ற சொல் "நெய்" "தேன்" எனப் பொருள்படும். அம் என்பதற்குப் பொருள் அழகிய என்பதே. அமிழுது என்பது அமிழ்து என்றாயது. அச் சொற்றொடரின் இறுதியிலுள்ள தகர உகரத்தில் தகரமானது முதலில் நின்ற அகரத்தோடு கலந்துவிட உகரமானது இறுதி யில் நின்ற ழகரத்தோடு சேர்ந்தது. அப்போது அமிழ்து என்பது தமிழு என ஆய்ப்பின், தமிழு என்பது தமிழ் எனக் கடைகுறைந்து நின்றது. இத ஞல் அமிழ்து என்ற சொல்லும் தமிழ்ச் சொல்லே என்பது தெளியப்படும். தமிழு என்பதில் அகரம் இயற்றமிழையும், இகரம் இசைத் தமிழையும், உகரம் நாடகத் தமிழையும் குறிக்குமென்பர். மனத்தின் கருத்தை இயற்றமிழும், சொல்லின் இனிமையை இசைத்தமிழும், செயலின் நயத்தை நாடகத்தமிழு முணர்த்தும். தமிழ் என்ற சொல் மொழியின் இயற்கை நயத்தைக் குறிக்கும்.

கருத்துவடிவாய் எழுதப் படாதிருந்த பண்டை முதல் நூல்கள் தொல்காப்பியத்திற்கு முற்பட்ட பிற நூல்களோடு கடல் கொண்ட நாட்டில் மறைந்த பின்

னர், அவற்றின் கருத்துக்களே தமிழ் மக்களுள் நிலவி வந்தன. அவற்றைத் திருவள்ளுவனார் தன் காலத்துக் கேற்ற முறையில் முப்பால் நூலாகத் தொகுத்தனர். தமிழ் முதல் நூல்கள் நால்வேதம் எனப்பட்டன. வேதம் என்ற சொல் வே என்பதன் அடியாய்ப் பிறந்தது. அது வேர் என்பதன் மூலமாகும். தம், பெயர் விகுதி. உலக வழக்கில் பிடித்தம் என்ற சொல் பிடி என்பதன் அடியாய்ப் பிறந்தது காண்க. வேதம்என்ற சொல் மூலநூல் என்று பொருள்படும். தமிழ் முதல் நூலாகிய வேதம் மறைந்தபின் திருவள்ளுவநூல் உத்தரவேதம் எனப்பட்டது. உத்தரம்=பின். வடமொழிச் சொல்லாகிய வேதம் வித்து என்பதன் அடியாய்ப் பிறந்து அறிவு நூலென்று பொருள்படும். ஆதலால் தமிழில் வேதம் என்ற சொல்லும், வடமொழியில் வேதம் என்ற சொல்லும் இருவேறு பொருளுடையன வென்றறிக. தமிழில் இருந்த ஆதிவேதம் வடமொழி வேதப் பாடல்கள்போலச் சொல்வடிவில் காக்கப்படவில்லை. அது அறம் முதலிய பொருளின் உண்மையைப்பற்றிக் கூறுவது. வடமொழி வேதம் பல தெய்வங்களைப்பற்றிய பாடற் தொகுப்பாக உள்ளது. எல்லாருக்கும் பொதுவான நீதியைக் கூறுவதால் தமிழ் முதல் நூல்கள் பொதுமறை, பொது நூல் எனப்பட்டது. அப் பெயர் பிற்காலத்தில் வடமொழி வேதத்துக்கும் வழங்குவதாயிற்று. பிற்காலத்தில் ஏற்பட்ட சைவ வைணவ தமிழ் வேதங்கள் அவ்வச்சமயத்துக்குச் சிறப்பு அனுபவ நூலாய் வடமொழி வேதம்போலப் பாடல்வடிவாய் அமைந்தன. வடிவத்தில் ஒத்திருத்தல்பற்றி அவை கருத்தில் முற்றிலும் ஒத்தன என்று கூறுவது தவறு.

ஆதித் தமிழ் நாட்டிலேயே அகத்தியர் முதலிய ஐந்து முனிவர்கள் கடவுளை நோக்கித் தவஞ் செய்து சமய உண்மை உணர்த்தப் பெற்றுச் சிறப்பு நூல்கள் இயற்றினர். அவைகளின் கருத்துக்கள் பிற்காலத்தில் வடமொழியில் தழுவி எழுதப்பட்டு தந்திரம், மந்திரம், ஆகமம் எனப் பெயர் பெற்றன. அவற்றில் தெய்வங்களுக்குரிய மந்திரம், பூசனை முறை முதலியன விரித்துப் பேசப்படும். வடமொழியில் அவை தழுவப்பட்டபோது வருண வேறுபாடும், ஊன் பலியும் கலந்தன. நாரத பரிவிராசகம் என்னும் உபநிடதத்தில் 'எல்லா ஆகமங்களும் சிவமயமாயுள்ளன' என்று பேசப்பட்டது. அன்னபூரண உபநிடதத்தில் சிவத்தைப்பற்றிய விபரம் சைவ ஆகமத்திற் காணப்படும் என்று கூறப்பட்டது. பாசுபதப் பிரம உபநிடதத்தில் ஆகமத்துக்கு விரோதமில்லாமல் தர்க்கம் செய்ய வேண்டுமென்று விதிக்கப்பட்டது. பஸ்மசாபாலம் முதலிய பல உபநிடதங்களில் சைவக் கருத்துக்கள் காணப்படும். வைணவ ஆகமங்களிரண்டும் உபநிடதகாலத்திற்குப் பின் உருவெடுத்தன.

சிவபெருமானைக் குறித்து ஓமஞ் செய்யும் முறைகள் வடமொழி வேதச் சார்பாக ஆகமங்களில் தழுவப்பட்டன. அப்பகுதியை மறைவழி என்று சொல்வதுண்டு. குற்றமற்ற மறைவழியைத் திருஞானசம்பந்தர்

"புந்தியினால் மறைவழியே புல் பரப்பி நெய் சமிதை கையிற்கொண்டு

வெந்தழலில் வேட்டுலகின் மிக அளிப்போர். சேருமூர் மிழலையாமே"

என்ற அடிகளிற் காட்டியருளினர். பிற்காலத்தில் ஆகமவடிவில் அமைந்த தமிழ் முதல்நூல் திருமூலர் திருமந்திரம் ஆகும். திருவள்ளுவர் ஆதித் தமிழ் வேதத்தையும் திருமூலர் ஆதித்தமிழ் ஆகமத்தையும் ஒத்த அரிய நூல்களை இயற்றினர். அவைகள் விரிந்த நோக்கத்தையும், உயர்ந்த சமயத்தையும் அருளொழுக்கத்தையும் போதிப்பன. அவற்றிற்குப்பின் சைவர்களுக்கு தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகளும், வைணவர்களுக்கு நாலாயிரப் பிரபந்தங்களும் சமய உண்மையை அனுபவப் பயனைத் துதி வடிவிறபோதிக்குஞ் சிறந்த நூல்களாயின. சைவத்தின் மெய்ந்நூற் பொருள்களைத் தெளித்து ஆசிரியர் மெய்கண்டார் என்னும் வேளாளப் பெரியார் பன்னிரண்டு சூத்திரங்களடங்கிய சிவஞான போத மியற்றினர். அந்நூல் தமிழர் சமயமுடி நூலாகக் கருதற்பாலது.

மெய்ந்நூல் உணர்ச்சி தோன்றி வளர்ந்த பின், வழிபாட்டுச் சாதனங்களுக்கும், புராணக் கதைகளுக்கும் சிறப்பான மெய்மைப்பொருள் (தத்துவார்த்தம்) கொள்ளப்பட்டது. அங்ஙனம் பொருள் கொண்ட முறைக்கு ஏற்பவே ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வழிபாடு நிகழ்ந்து வருகின்றது. சிவலிங்கப்பெருமான் வடிவத்தைத் தவறாகக் குறை கூறுவார் கூறினும், அது அண்டத்தின் வடிவாகவும் பிண்டத்தின் கருவடிவாகவும் இருப்பதுடன் எப்பொருளுக்கும் உள்ளீடாயுள்ள அருவுருவடிவாகவும் கருதப்படுகின்றது. அலரி, நாகலிங்கப்பூ முதலியவற்றின் நடுவில் சிவலிங்க வடிவம் இருத்தல் காண்க. ஒவ்வொரு சடப்பொருளையும் நுணுகியாய்ந்த மேலை நாட்

டினர் அறிவு நூலால் அணுவின் நடுவில் முன்சத்து என்னும் நுட்பப் பொருளும் அதைச் சுற்றும் மின்னணுக்களும் உள்ளன என்கின்றார்கள். முன்சத்தும் பின்னணுவும் சேர்ந்து சிவலிங்க வடிவமாகும் சூரியனும் அதைச் சுற்றிவரும் உலகங்களையும் நுணுகிப்பார்ப்பின் சூரியன் லிங்கமாகவும் சுற்றி வரும் கோள்களின் தொகுதி பீடமாகத் தோன்றுப. சூரியனைப்போன்ற பலகோடி மண்டிலங்கள் சூழ்ந்து வரும் நடுப்பெருங்கதிரவன் அகிலத்துக்கு நடுவாய் இருத்தலின் அந்நடுவடிவாய் அகிலத்தை இயக்கும் இறைவன் வடிவு அருவுருவான சிவலிங்கமே என்க.

இறைவனது மெய்ந்நிலை, அறிவுநிலை, இன்பநிலை என்பன வடமொழியில் சத்து, சித்து, ஆனந்தம் எனப்பட்டன. சத்தையே அப்பனாகவும் சித்தையே அம்மையாகவும் ஆனந்தத்தையே முருகனாகவும் தத்துவ நூலோர் உருவகித்தனர். ஒவ்வொரு தெய்வத்திற்கும் உரிய அறிவு, விழைவு, செயல் ஆற்றல்களைப் பெண்களாக அவர்கள் உருவகித்தனர். உதாரணமாக முருகனுக்கு வள்ளி நாயகி விழைவாற்றலும் (இச்சாசத்தியும்) தெய்வயானை செயலாற்றலும் (கிரியா சத்தி) வேல் அறிவாற்றலும் (ஞானசத்தியும்) ஆம் என்ப. வேலைக்கிரியா சத்தியாகவும் தெய்வயானை அம்மையை ஞானசத்தியாகவும் கூறுவோரும் உளர் அவ்வாறே பிற தெய்வங்களுக்கும் கண்டு கொள்க உருத்திரனுக்கு உமை, கங்கை, காளியும் திருமாலுக்கு ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவியும், அயனுக்கு சாவித்திரி காயத்திரி சரசுவதியும் முச்சத்திகளாகக் கூறப்படுதல் காண்க. விநாயகருக்கு சித்திபுத்தி என்னும் தேவிகளும் ஒற்றைக் கொம்பும் முச்சத்திகளா

கும்.* சூரியவணக்கம் பிற்காலத்தில் சைவரால் சதா சிவத்துக்கும் வைணவரால் நாராயணர்க்கும் உரிய தாகக் கொள்ளப்பட்டது. திருவுருவங்களின் குறிப்பு முன்னமே சொல்லப்பட்டது.

உருவமில்லாத அறிவைப் பெறுவதற்கு உருவ முள்ள எழுத்துக்கள் வேண்டப்படுதல் போல உருவ மற்ற கடவுளை வணங்குவதற்குத் திருவுருவங்கள் சாதனமாதல் அறிக. திருவுருவம் வைத்துவழிபடாத வர்கள் மனத்தில் ஒரு வடிவத்தை அமைத்துக் கொள்ளுகிறார்கள். மனவடிவம் நிலைத்தற் பொருட் டுப் புறத்தே ஒரு வடிவத்தை அமைத்துக் கொள்ளுத லாற் குற்றம் யாதுமில்லை. எங்கும் இருக்கிற கடவுள் வழிபடப்படுகின்ற திருவடிவத்தினின்று அன்பர்கள் வழிபாட்டிற்குப் பயனளிப்பாரென்பது நம்மவர்கள் நம்பிக்கை. தெய்வத்துக்குச் செய்யக் கருதிய உப சாரங்களைத் திருவடிவுக்குச் செய்தல் அன்பின் அறி குறியாக என்க. நிவேதனம் படைத்தல் நாம் நுக ரும்பொருளெல்லாம் இறைவன் தந்த பொருளே என்று நினைவூட்டுதற்கென்க. ஒளிவரிசை காட்டு தல் ஒளி வடிவாய் இறைவன் படைப்பெங்கும் தங்கி யருளுகின்றார் என்பதைக் குறிப்பித்தற்கென்க. கோயில்களில் இன்னிசைபாடுதல் கடவுளிடத்தில் அன்பை விளைத்தற் பொருட்டு என்க. ஓவியம், சிற்பம், இசை, நடனம், பாட்டு என்பன கோயில் களிற் பேணப்பட்டமையால் அக்கலைகள் இன்றும் என்றும் நிலைபெறுவனவாயின.

---

*சத்து என்ற தமிழ்ச்சொல் வலியபகுதி யென்று பொருள் படும், சத்துடையது, சத்தி. சத்து என்ற வடசொல் உள் ளது என்று பொருள்படும்.

திங்களைக் கடவுள் அணிதல், விடையேறுதல், முக்கண் உடைமை, முதலிய செயல்களின் ஞானக் கருத்தினைச் சில உதாரணங்களால் பட்டினத்தடிகள் திருவொற்றியூர் ஒருபா வொருபது ஆறும் பாட்டிற் சுருக்கமாக அறிவுறுத்தியுள்ளார். அப்பாட்டின் கருத்து வருமாறு :—“இறைவன் தூய மதியினைச் சடையின் மீது சூடுதல், குற்றமில்லாத ஞான நெறிக் கண் விளங்கும் அறிவான பரம்பொருள்தான் என் பதை அறிவுறுத்தற் பொருட்டேயாம். அறத்தின் வடிவமாகிய விடையூர்தல் அவன் அவள் அது என்ற முப்பகுப்புடைய எப்பொருட்கும் தானே நடுநிலையான முதல்வன் என்பதறிவித்தவாறும். மூன்று கண்ணையுடைமை, மூன்று வகையான எரி யோம்புதலின் கண்ணே நிகழும் வழிபாடனைத்தும் இறைவனுக்குரியன வென்பதுணர்த்துதற் கென்க. அறிவுநூலினையும் மானையு மேந்துதல்கலைகட்கும் உயிர் கட்கும் நாதன்தானே யென்றறறிவித்தற் கென்க. மூவிலைச் சூலமேந்துதல் மூவர்க்கும் தலைவனாய் நின்று அவரை நடத்துபவன் தானேயென்னுமுண்மை யுணர்த்தற்கே”. இவ்வாறு திருவடிவங்களிலுள்ள ஒவ்வொரு உறுப்பின் அமைப்பிற்கும் ஊர்திகளுக்கும் ஒளி வரிசை (தீபாராதனை) முதலிய நெறிச் செயல் களுக்கும் காரணங்கள் கூறும் நூல்கள் ஆகமச்சார் பாகத் தமிழிலும் வடமொழியிலும் உள்ளன. வட மொழியில் உள்ளவற்றைத் தமிழில் மொழி பெயர்த் துக்கொள்ள வேண்டும்.

வைணவத்திலும் திருமால் வடிவங்களுக்கும் படைகளுக்கும் தக்க மெய்ந் நூற் காரணங்கள் உள்

ளன. ஆலிலையில் துயில்வதென்பது ஊழி முடிவில் கடவுட் சத்தி ஓங்கார வடிவில் ஒடுங்கி யிருப்பதைக் குறிக்கும். திருமாலுக்குக் கருநிறம் முகிலின் நிற மாதலால் மேகம் போலத் தண்ணருள் வழங்குபவன் என்பதை அது உணர்த்தும். அவ்வாறே பிறவுங் கண்டு கொள்க.

புராணக் கதைகளை நம்பாதவர்களும் அவை போதிக்கும் உயரிய கருத்துக்களை அசட்டை செய்ய முடியாது. திருஞான சம்பந்தர் தேவாரத்தில் ஒவ்வொரு பதிகத்தின் எட்டாம் பாட்டிலும் இரா வணன் கதை கூறியது பிழை செய்தவர்கள் மனம் திரும்பித் திருத்த முற்று இறைவன் அருளை நாடினால் அது கிட்டுதற்குரியது என்பதை வலியுறுத்தற் கென வும் ஒன்பதாவது பாட்டில் அரி, அயன் தேடிய கதை கூறியது பணிவுடன் தொழுவார்க்கே இறை வன் அருள் புரிவான் என்பதை வலியுறுத்தற் கென வும், ஆசிரியர் சேக்கிழார் பெரிய புராணத்துள் விளக்கியது காண்க. அவ்வாறே ஒவ்வொரு தக்க கதைக்கும் அதன் உண்மைப் பொருளை அறிந்து போற்றுவதே நமது கடமையாகும். அறிவுக்குப் பொருத்த மில்லாத கதைகளை ஒதுக்கிவிடலாம்.

இறைவனை வழிபடுவோர் தத்தம் மனத்திற் கிசைந்த யாதாவதொரு வடிவில் தம்முடைய அறிவுக் கேற்ற முறையில் மெய்யன்போடு வழிபட்டால் அவ் வடிவில் நின்று இறைவன் அருள்புரிகின்றார் என்பது தக்க சமயக் கருத்தாகும். வடிவமும் பேரும் இல் லாமல் இறைவனை நினைத்தல் உயிர்களுக்கு இயலாமை யாலும் வழிபடும் வடிவத்தின் வழியாக அல்லாமல்

வேறு வடிவமாக இறைவன் தோன்றின் அவ்வடிவை இறை வடிவமென்று வழிபடுவார் எண்ணக் கூடாமையாலும் "ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்" என்றார் அப்பர் பெருமான்.

மெய்ந்நூற் கருத்தின் ஒளியில் சைவ வைணவ வழிபாட்டு முறைகள் விளக்கம் அடைந்தபின் அவ் விளக்கத்தை வழிபாட்டினர் யாவரும் அறிந்து சமய ஒழுக்கம் பயனுதலே கடமையாகும். வரலாற்றுச் சார்புபற்றிக் குறிகளையும் அடையாளங்களையும் குறை கூறிக் கொண்டிருத்தல் பொருத்தமில்லாத செயலாகும்.

## சீர்திருத்தங்கள்

சமய ஆராய்ச்சி செய்து சமயநெறி ஒழுக விரும்பும் தமிழர் தமிழ்ச் சமயப்பகுதிகளாகிய சைவ வைணவ நெறிகளுக்கு அடிப்படையாய கொள்கைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

தேவார திருவாசகங்களுள்ளும் திருவாய்மொழியின் கண்ணும் அவைகளே பலவகையாகப் பேசப்பட்டிருத்தல் காணப்பெறும். அவற்றை மனதில் வைத்துக்கொண்டால் அவற்றிற்கு மாறுய கருத்துக்களைக் கூறும் நூல்களையும் புராணங்களையும் பிரமாணமாக நாம் கொள்ளமாட்டோம்.

மெய்நூற் கருத்துக்களை விளக்கும் வழிபாட்டு முறைகளை நாம் தழுவிக்கொள்ள வேண்டும். இப்பொழுது உள்ள கோயில்களிற் கையாளப்பட்டுவரும் வழிபாட்டு முறைகளை வழிபடுவார்கள் யாவருக்கும்

விளக்கத்தக்க நூல்கள் வெளியிடப்பட வேண்டும்; சொற்பொழிவாளர்களும் நியமிக்கப்பட வேண்டும்.

கோயில்களின் மூலத்தானங்களையும் பிற இடங்களையும் எப்பொழும் புனிதமாக வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கிறித்துவக் கோயில்களும் மகம்மதியப் பள்ளிகளும் மனங்கவர் புனிதத்தோடு விளங்குதல் போல் நம்முடைய ஆலயங்கள் தூய்மையோடு திகழ்வதில்லை. எண்ணெய்ச் சிக்கினால் மாசடைந்து அழுக்கு மிகுதற்கு இடமாயுள்ள பகுதிகளை நாள்தோறும் சுத்தம் செய்யவேண்டும். மூலத்தானங்களில் திருவடிவங்களைக் குருக்கள்மார் தூய்மையாக வைப்பதில்லை, ஆறு காலத்திலும் எண்ணெயையும் தண்ணீரையும் கொட்டி வழுக்கும் அழுக்கும் சேருமாறு செய்து விடுகிறார்கள். இதை அறநிலையத் தலைவர்கள் ஒரு சிறிதும் கவனிப்பதில்லை. ஆறுகாலத் திருமுழுக்கைப் பார்க்கிலும் இருகால ஒருகால நீராட்டே போதுமானது. எண்ணெய் அழுக்கினை சீயக்காய், நெல்லிப்பருப்பு, மாக்காப்பு மஞ்சட்காப்பு முதலியவற்றால் போக்கித் திருவொற்றுடையினால் திருவடிவங்களையும் இடங்களையுந் துடைத்துத் துப்புரவு செய்ய வேண்டும். விளக்குகளை நாள்தோறும் துடைத்து அவற்றில் தூய்மையான திரியிடல் வேண்டும்.

நித்திய வழிபாட்டில் அறிவுக்குப் பொருத்தமான நெறிச் செயல்களைக் கோயில் வரும்படிக்குத் தக்கபடி செய்வித்தலே நலம். ஒருகாலத் திருமுழுக்கு நிவேதனம் முதலியன செய்வதற்கு மாத்திரம் பணம் இருக்கும் கோயில்களில் ஆறுகாலப் பூசை நிகழ்த்த

வேண்டியதில்லை. நித்திய பூசைக்கு மாத்திரம் வரும்படி உள்ள கோயில்களில் திருவிழாக்களுக்காகப் பணம் செலவிடக் கூடாது. ஒரு திருவிழாவே நடத்தக்கூடிய வருவாய் உள்ள கோவில்களில் பல திருவிழாக்கள் நடாத்துவித்தல் மிகையாகும்.

அர்ச்சனைசெய்வதென்பது விசேட காலங்களில் ஒழுங்காக நடைபெற வழியில்லை. ஆதலின் கால எல்லைக்குள் செவ்வையாக நடத்தக்கூடிய அர்ச்சனைகளை மாத்திரம் செய்ய இடங்கொடுத்தல் வேண்டும். பத்துத் திருப்பெயர்கள் சொல்லக்கூடிய நேரத்தில் ஆயிரம் பெயர்சொல்லி மலர் தூவுவதாகப் பாசாங்கு செய்வதற்கு இடம் இருத்தல் கூடாது. வழிபடுபவர்கள் இதனை நன்குகச் சிந்தித்துத் தங்கள் பணத்தைக் குறைவாகச் செலவிட வேண்டும். அர்ச்சனைகளைத் தமிழர்கள் கோயில்களில் தமிழிலேயே நடத்த ஏற்பாடு செய்தல் வேண்டும். பொருள் விளங்காத மொழியில் இறைவனை வாழ்த்துவதிலும் தமிழில் நாமம் சொல்லி மலர்தூவிப் போற்றுதலே வழிபடுவார்களுக்கு அன்புபயக்கும்.

பூசை முறைகளைத் தமிழிலே எழுதுவித்துப் பூசைகளைத் தமிழில் நடத்த அர்ச்சகர்களைப் பழக்குதல் வேண்டும். கிரியைகளின் கருத்தை விளக்கும் ஆற்றல் அர்ச்சகருக்கு இருத்தல் வேண்டும். அர்ச்சகர் பயிற்சிக்காக ஒரு கலாசாலை அமைத்தல் வேண்டும்.

தமிழிலே மொழிபெயர்க்கக் கூடாத பூசனை விதிகள் யாதுமில்லை. மந்திரங்கள், அர்ச்சனை மந்திரம், வித்தெழுத்து (பீசமந்திரம்), அடையாள மந்திரம்

என மூவகைப்படும். அவற்றுள் அர்ச்சனை மந்திரங்களை எளிதாகத் தமிழில் மொழிபெயர்த்துக் கொள்ளலாம். ஓம் கணபதயே நம என்பது கணபதிக்கு வணக்கம் என்று பொருள்படும், கணபதியின் திருவடிவத்தை முன் வைத்துக்கொண்டு படர்க்கையிற் கணபதிக்கு வணக்கம் என்று சொல்வதைப் பார்க்கினும் (ஓம்) கணபதியே போற்றி என்று முன்னிலையாகத் தமிழிற் சொல்வதே சிறந்ததாகும். சைவ வைணவ சமயப் பெருந்தலைவர்கள் தமிழிலேயே இறைவனைத் துதித்திருக்கின்றனர்கள். ஆதலால் தமிழிலே அர்ச்சனை செய்தல் கூடாது என்றல் பெருந்தவருகும். ஹாம் ஹீம் முதலிய சில ஒலி மந்திரங்கள் ஒலி நயமுள்ளவை, அவை பீசமந்திரம் எனப்படும். அவற்றிற்குச் சொற்பொருளில்லை. அவை எம்மொழிகளுக்கும் பொதுவான ஒலிகளே. ஓம் எனப்படுவது தமிழ்ச்சொல் என்பது முன்னமே கூறினும். பிறவற்றைத் திருமந்திரம் முதலிய நூற்பாடல்களிற் காண்க. அவற்றை முதல் முதல் பயன் படுத்தின மக்களினத்தார் தமிழரே என்பது தந்திர ஆராய்ச்சியாற் புலனுகும். வேதத்துள் பீசமந்திரங்கள் காண்டல் அரிது. தந்திரங்களில் அவை காணப்படுகின்றன. தந்திரங்கள் திராவிடக் கருத்தைத் தழுவி எழுதப்பட்ட வடநூல்கள். தமிழ்ச்சித்தர் நூல்களில் அவை வித்தெழுத் தெனப் படும். அவை ஏராளமாக அவற்றுள் காணப்படுவனவாதலின் அவை தமிழர்க்கே உரியன என்பது தெளிக.

அடையாள மந்திரங்களுக்கு உதாரணம் திருவைந் தெழுத்தாகும். அதனுள் ஒவ்வொரு எழுத்

தும் ஒவ்வொரு கருத்தைக் குறித்து நிற்பது. அங்ஙனம் எழுத்துக்குப் பொருள் கொள்வது தமிழர் மரபே. நமசிவய என்னும் தமிழ்மந்திரத்தில் நகரம் மறைப்புச் சத்தியையும் மகரம் பாசத்தையும் சிகரம் சிவத்தையும் வகரம் அருட்சத்தியையும் யகரம் உயிரையும் குறிக்கும். நமசிவாய என்னும் வடமொழி மந்திரம் சிவனுக்கு வணக்கம் என்று பொருள்படும், நமசிவய என்பதே நமசிவாய என விரிவுற்றுத் தேவார திருவாசகங்களிற் பயில்கின்றது. அடையாள மந்திரங்கள் தமிழ் மந்திரங்களே. மேற்கூறிய மூவகை மந்திரங்களும் தேவாரம் திருவாசகம் திருமந்திரம் முதலிய தமிழ் நூல்களிற் காணப்படுதலின் அவற்றைப் பூசனைக்குப் பயன் படுத்துதல் தமிழர்க்கு ஒத்ததே. வடமொழியில்தான் மந்திரங்கள் உள்ளன, அவை மொழிபெயர்க்கத்தகாதன என்பது தவறான கொள்கையாகும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் சிலரும் பிறரும் தேள்க்கடி, பாம்புக்கடி முதலியவற்றைக் குணப்படுத்து மந்திரங்களைத் தமிழிற் பயிலுதல் காண்க. இன்னும் வடமொழியில் கருத்தைக் கூறுஞ்சொற்களை மந்திரம் என்று உபசாரமாக எண்ணுதலும் உண்டு. அர்க்கியம் சமர்ப்பயாமி என்பது தெளிபுனல் கொடுக்கின்றேன் என்று பொருள்படும். அது ஒரு மந்திரமன்று, அதைத் தமிழிற் கூறுதற்கு எவ்வகையான தடையும் இல்லை. கோயிற் பூசனைக்குரிய எல்லா விதிகளும் முறைகளும் தமிலே எழுதப்பட வேண்டும். அவைகள் கல்லூரியிற் போதிக்கப்படவேண்டும்.

பிறப்பைப்பற்றிய உயர்வு தாழ்வு தமிழர் வழி பாட்டிற்கு இல்லை என்பதைக் காசியில் யாவரும் வருண வேறுபாடின்றிச் சிவபெருமானைப் பூசிக்கும் வழக்கத்தில் வைத்து அறிந்து கொள்க. காசியில் நடக்கும் முறை வழிபாட்டினர்க்கு வசதி தராதா தலின் நல்லொழுக்கமும் கள்ளூன் விலக்கும் உடைய அறிஞர் எக்குலத்தவராயினும் பூசனை முறை அறிந்து அன்பாய்ப் பூசனை செய்யக் கூடுமானால் அவரை ஆலயத்தில் அர்ச்சகராக நியமித்துக் கொள்ளுதல் நலம். இப்போது ஆலயங்களின் குருக்களாய் உள்ள ஆதி சைவமரபினர் தமிழப் பார்ப்பனரே ஆவார். அவர்கள் சிவன் முகத்து அருள் பெற்ற அந்தணரெனவும் சுமார்த்தப் பிராமணர் அயன் முகத் துதித்த பிராமணர் எனவும் கருதப்படுவதுடன் பின்னையோர் கோயிற் பூசனைக்கு உரியரல்லர் என்று ஆகமம் விதிக்கிறது. ஆதிசைவர் தமிழ் நாட்டிலே தோன்றிப் பொதியின் மலைக்குத் தெற்கிலுள்ள பெருஞ் செல்வமென்னும் மகேந்திர மலையில் தவ மியற்றித் திருவருள் பெற்ற ஐந்து தமிழ் முனிவர் களின் சந்ததியாராவர். அவர்கள் தற்காலத்தில் தம்மை இன்னார் என்று அறியாது சுமார்த்த மதநெறி யைத் தழுவி நடக்க முயலுகின்றார்கள்.

சைவம் விரிந்த கொள்கையுடைமையால் சைவ ஆசாரியர்கள் சமயம் புகுவித்தலாகிய தீக்கை செய் யுங்கால் மாணவன் கொடுக்கும் உணவைத் தாம் வாங்கி யுண்பதும் தாம் கொடுக்கும் உணவை மாண வனை உண்பித்தலுஞ் செய்து சிவத்தில் இருவரும் ஒற்றுமைப் படுதலாகிய நெறிச் செயல் (சடங்கு)

செய்தல் விதிக்கப்பட்டுள்ளது. அந்தணர் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் சைவ ஆசாரியர்களும் அந்தணரல்லார்க்குத் தீக்கை செய்தல் விதிக்கப்பட்டிருத்தலின் அவ்விருவகையார்க்கும் ஒற்றுமை விளைதற்கும் பிறப்பு வேறுபாடு பாராட்டாமைக்கும் வழி வகுக்கப்பட்டுள்ளது. பிறப்பு வேற்றுமை ஒழிந்தவிடத்து மூவகைத் தீக்கைகளும் ஆசாரிய அபிடேகமும் பெற்ற ஒருவர் எவராயினும் இறைவனுக்குப் பூசனை இயற்ற உரிமையுடையவரே யாவர். பண்டைக்காலத்தில் பார்ப்பார் என்ற சொல் தவத்தினால் தெய்வக்காட்சி பெற்றுப் பொது நன்மைக்காக இறைவனை வழிபடும் தமிழப் பெரியோர்களுக்கே உரியதா யிருந்தது. பிள்ளையார், முருகன், சிவபிரான், அம்மை, திருமால், ஞாயிறு என்னும் ஆறு தெய்வங்களைப் பூசிப்போர் அறுவகைப் பார்ப்பனராய் விளங்கினர். ஆதலால் ஆசிரியர் தொல்காப்பியனார் "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்றார். பிற்காலத்தில் தமிழர் சமயத்தில் உண்மைப்பற்று வையாது வயிற்றுப் பிழைப்பின் பொருட்டுப் பார்ப்பனர் என்று பேர் வைத்துக் கொண்ட பிறர் செய்யும் பூசனை பயன் தராது தீது விளைக்கும் என்ற கருத்துடன் "பேர் கொண்ட பார்ப்பான் பிரான் றன்னை அர்ச்சிக்கில் - போர் கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம் - பார் கொண்ட நாட்டிற்குப் பஞ்சமுமாம் என்றே-சீர் கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே" என்றார் திருமூலர். தற்காலத்தில் சமயத் தகுதியுடைய எவரும் இறைவனைப் பூசிப்பதால் இழுக்கு இல்லை என்றே கொள்க.

இறைவனுக்குப் பூசனைபுரிபவருள் பூசை முறைக்காரர், அவருக்குத் துணைவர் என்ற இரு பிரிவினர் இருத்தல் வேண்டும். முன்னவர்கள் இறைவனைப் பூசித்தல் ஒன்றே செய்யற்பாலர். வழிபடுவார்க்காக அர்ச்சனை செய்தல், தேங்காய் பழம் நிவேதித்தல், திருநீறு முதலியன அளித்தல் செய்வதற்குத் துணைவர்கள் பயன்பட வேண்டும். வெவ்வேறு தெய்வங்களை வழக்கமாய்ப் பூசனை புரிவோர் அவ்வத் தெய்வ வழிபாட்டில் தலை சிறந்தவர்களாய் இருத்தல் வேண்டும். கல்லூரி வாயிலாக நடத்தும் பரிசோதனைகளில் தேறியவர்களைக் கொண்டு பூசனை செய்வித்தல் நலம். அவர்களுக்கு நியமமான தக்க ஊதியம் அளிக்கப்படல் வேண்டும். மன்னிக்க முடியாத தவறுகள் ஏற்பட்டாலொழிய அவர்களை நீக்க வேண்டியதில்லை. துணைவராய் இருப்போரும் நூற்கல்வியுடையோராய் வழிபடுவோரிடத்திற் சாந்தமாய் நடப்பவராயும் கோயிலுள்ளே பயனற்ற மொழிகள் பேசாதவராயும் இருத்தல் வேண்டும்.

கோயில் அதிகாரிகள் கோயிலின் மெய்க் கொள்கைகளை அறிந்து அவற்றிற்கு ஏற்ற முறையில் வழிபாடுகளை நடத்தும் ஊக்கமும் உழைப்பும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

கோயிலில் திருத்தொண்டு புரிபவர்கள் சமயம் புகுதற்குரிய தீக்கை பெற்றவர்களாய் முக்கிய சமயக் கொள்கை தெரிந்தவர்களாய் நல்லொழுக்கமும் புனித வழக்கமும் உடையவர்களாய் இருத்தல்வேண்டும். உடலைப்பற்றிய சாதியினும் உயிரைப்பற்றிய சமயமே பெரியதென்பது சமயநூற் கொள்கை. ஆறுமுகநாவ

லர் தனது பெரிய புராண வசனத்துள் அதனை எடுத்து மொழிந்தனர். தமிழ்ச் சைவத்தைச் சார்ந்த திருக் கோயில்களில் சிவதீக்கை பெறாத புறமதத்தினரைப் பரிசாரகம் முதலிய தொண்டுகள் செய்வதற்கு நியமித்தல் சமயத்துக்கு முரணாகும். தமிழர்களுள் ஊன் உணவு ஒழித்துத் தகுதி வாய்ந்த சமய ஒழுக்கம் உடையவர்களையே அத்தொண்டு செய்ய நியமித்தல் வேண்டும்.

கூட்டம் மிகுந்த விழாக் காலங்களில் வசதியாகச் செய்ய முடியாத அர்ச்சனைகள் முதலியவற்றை நிறுத்திவைத்தல் நலம். ஒரு கோயிலில் எத்தனை பேர் வசதியாக நிற்றல் கூடுமோ அதற்கு அதிகமாக மக்களைப் புகவிடுதல் தவறு. ஒரு முறை சென்றவர்கள் நெடுநேரம் நிற்றல் கூடாதபடி அவர்களை வெளியே செலுத்துதல் வேண்டும். சாதாரண காலங்களில் மலர் தூவிப் போற்றுதலாகிய தொண்டினை வசதியான தூரத்தில் நின்று விரும்புவார்கள் தாமே செய்து கொள்வதற்கு இடங்கொடுத்தல் வேண்டும். திருவிழாக் காலங்களில் அன்பு விளைவதற்கு இடையூறு பயக்கும் ஆடம்பரச் செலவுகளை ஒழித்தல் வேண்டும்.

தமிழர் கோயில்களில் தமிழ்ப் பாடல்களுக்கு முதல் இடம் கொடுத்தல் வேண்டும். பிறமொழிப் பாடல்கள் பாடுதல் அத்துணை அவசியமில்லை. தேவாரம் திருவாசகம் திருவாய்மொழிகள் பாடுவோர்கள் தக்க இயல் இசைப் பயிற்சி உடையவர்களாய் இருத்தல் வேண்டும். மனம் உருகும்படி பாடுந் திறமையுடையவர்களுக்குப் பரிசளித்தல் வேண்டும். அவர்

கள் பாடுங் காலத்தில் வழிபடுவார் கூக்குரலை அடக்க வேண்டும். அவை பாடிய பின்னரே திருநீறு முதலிய பிரசாதங்கள் அளித்தல் வேண்டும். வருவாய் மிகுந்த ஒவ்வொரு பெரிய கோயில்களிலும் தமிழ் வேதம், சமய சித்தாந்தம், சமயச் சடங்கு முறை என்பவற்றைப் போதிக்குங் கலாசாலைகளும் நூல் நிலையமும் சொற்பொழிவு மேடையும், கவின்கலை, இசை, கூத்து முதலியவற்றிற்குப் பெரிய பயிற்சிக் கூடங்களும் இருத்தல் வேண்டும் என்று ஆகமங்கள் விதிக்கின்றன. சிறிய கோயில்கள் இன்றியமையாத வழிபாட்டுச் செலவுகளை மாத்திரம் வரும்படியிலிருந்து செய்து கொண்டு எஞ்சிய வருவாயை அர்ச்சகர்களுக்கும் வழிபாட்டினர்க்கும் சமயக் கல்வி பயிற்றப் பயன் படுத்தல் வேண்டும்.

கோயில்களிலே சோம்பேறிகள் படுத்து உறங்குவதற்கு இடங்கொடுத்தல் கூடாது. பிச்சைக்காரர்களும் நோயாளிகளும் தங்கிப் பொழுது கழிக்கவும் இடங் கொடுத்தல் கூடாது. பிச்சைக்காரர்களுக்குத் தருமம் செய்ய விரும்பும் மக்கள் நன்கொடைகளை ஒருங்கு சேர்த்து ஏழைகளுக்குத் தொழிலும் உணவும் உதவும் நிலையங்களைக் கோயில் அதிகாரிகள் நிறுவி நடாத்த வேண்டும்.

இத்தகைய சீர்திருத்தங்கள் பலவும் நிறைவேறுமாயின் தமிழர் கோயில்கள் சிறந்த அன்பும் நிறைந்த கல்வியும் ஓங்கி வளரும் ஒளி மாடங்களாக நிலை பெற்று விளங்கும்.

## கோயில் புகுதல்

மரங்களின் அடியில் தமிழர்கள் இறைவனை வழிபட்ட காலத்தில் இறைவன் திருமுன் நிற்கத் தகாதவர்கள் இன்னாரென்று விதிக்க வாய்ப்பில்லா திருந்தது. பிற் காலத்தில் கோயில்கள் அமைந்தபின் தூய்மையின் பொருட்டு மிக அசுத்தமான இனத்தார் கோயிலுட் புகுதல் கூடாதென்ற விதி ஏற்பட்டது. கோயில் புகுகின்றவர்களுள்ளும் இன்ன குலத்தார் இன்ன இடத்தில் நிற்கவேண்டும் என்ற விதி ஆரிய வருண வேறுபாடுகள் ஆகமத்துட் புகுந்தபின் ஏற்பட்டதாகும். அவ்விதிகள் இருந்த காலத்திலுங் கூட, பறையரோடொத்த பாணர் மரபில் உதித்த திருநீலகண்ட யாழ்ப்பாணர்க்கு அந்தணராகிய திருஞான சம்பந்தர் அருகில் நின்று கோயிலில் அவர் பாடும் பாடல்களை யாழில் இட்டு வாசிக்கும் பேறு கிடைத்தது. அந்தணர் வீட்டில் வேள்வி மேடையில் தன் மனைவியோடு தங்கும் உரிமையும் கிடைத்தது. வைணவத்தில் காவிரிக்கரையிற் பாடி நின்ற திருப் பாண் ஆழ்வாரைத் திருவரங்கத்து அர்ச்சகர் தோளில் தூக்கிச் சென்று பெருமாளுடன் ஐக்கியம் செய்வித்த வரலாறு கேட்கப்படுகிறது. ஆதலின் தகுதி கண்ட விடத்தே பிறப்புக்கட்டுப்பாடு ஒதுக்கப் பட்டது என அறிக. நந்தனார் சரிதத்தில் நந்தனாரே தான் உட்செல்லத் தகுதியற்றவரென்று விலகி இறைவன் தன்னைத் தூய்மை செய்யுமாறு வேண்டி னர் என்க. முழுநீறு பூசுதலாகிய பஸ்ம ஸ்நானத்தை அக்கினிஸ்நானம் என்பாரும் உளர். அஃது எவ்வாறாயி னும் இக்காலத்தில் தூய்மையும் அன்பும் உடைய தாழ்த்தப்பட்டவரை ஆலயத்துட்புக விடுதலாற்

போந்த இழுக்கு யாதும் இல்லை. மக்கள் மனப்பான்மையே திருந்தற்பாலது.

நமது சமயத்தில் இருந்து புறச்சமயம் புகுந்தவரை மீட்டும் தமிழர் சமயத்தில் ஏற்றுக் கொள்ளுதல் பொருத்தமுள்ளதே யாகும். சமண சமயம் புகுந்த திருநாவுக்கரசர் மீண்டு சைவ சமயத்துக்கு வந்தகாலை அவர் தமக்கையராகிய திலகவதியார் அவருக்குத் திருநீறு அளித்து அவரைத் தடையின்றித் திருவதிகைக் கோயிலுள் அழைத்துச் சென்றமை பெரிய புராணத்திற் கூறப்பட்டது.

ஆதீனத் தலைவர்கள் தமிழ் மொழியையும் தமிழர் சமயத்தையும் இரண்டு கண்களாகப் பாதுகாக்கக் கடமைப்பட் டிருக்கின்றார்கள். ஆதீனங்கள் சிறந்த கலை நிலையங்களாய் இருத்தல் வேண்டும். தமிழ்ப் பல்கலைக் கழகங்கள் ஆதீனத் தலைவர்களால் நிலைநாட்டப் படுதற்குரியன. கிளை மடங்களிலும் தலைமையிடத்திலும் ஏழைத் தமிழர்க்குப் பயன்படும் அறச்சாலைகளும் தொழில் நிலையங்களும் அமைத்தல் வேண்டும். ஆகிரா(Agra)வில் உள்ள இராதா சுவாமியின் தொழில் நிலையம்போன்ற அமைப்புக்கள் தமிழர் வறுமையை ஒழிக்கத் துணை புரியும். தமிழருடைய ஆதீனச் செல்வம் தமிழர்க்கே பயன்படுதல் நலம். தமிழர் சமயம் இன்னதென்று அறியாது தமிழ்ப் பற்றும் இல்லாது தன்னயங் கருதும் புற மதத்தினர்க்கு அது பயன்படுதல் கடியத்தக்கது. தமிழர் சமய நோக்கங்களுக்கு ஏற்ற முறையில் ஆதீனங்களையும் மடங்களையும் ஒழுங்கு படுத்துவதற்கு அவசியமாயின் சட்டம் நிறைவேற்றுதல் நலம்.

## பெண்ணுரிமை

தமிழராது ஆதி நூல்களில் ஆண்மக்களுக்குப் பெண்கள் அடிமை என்ற கருத்தில்லை. "ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப" என்ற தொல்காப்பியச் சூத்திர அடியினுல் பலவகை ஒற்றுமையுடைய தலைவனும் தலைவியும் ஒன்றுகூடி வாழுதல் குறிக்கப்பட்டது. குடும்பமானது ஓர் சிற்றரசுபோல் இருத்தலின் அதில் அரசன் போலத் தந்தையும் குடிகள் போலத் தாயும் பிள்ளைகளும் கருதப்பட்டனர். குடும்பத் தலைவனுகிய தந்தையின் சொல்வழி பிறர் நிற்பதனுல் குடும்ப ஒற்றுமை நிலைபெறும். தாய், தந்தைக்கு அமைச்சர் போல்பவள். "கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை" என்றதனுல் தலைவன் சொல்வழி நிற்றல் கற்பாயிற்று. கற்பு இருந்தால் பெண் தன்மையினும் பெரிய தன்மை வேறில்லை என்று ஆசிரியர் திருவள்ளுவர் கூறினர். புறத்தே சென்று பல மக்களோடு பழகி உலகியல் நன்கறிந்த ஆண் மகனைக் குடும்பத் தலைவன் என்றல் பொருந்துவதே. தலைவன் ஈட்டிய பொருளை வருவாய்க்குத் தக்க அளவில் செலவழித்து வீட்டிலுள்ளார்க்கும் விருந்தினர்க்கும் உணவளித்தல் முதலிய நலங்கள் ஆற்றுவதில் தலை சிறந்த பெண்ணை இல்லாளெனவும் வாழ்க்கைத்துணை எனவும் கூறுதல் பொருத்தமானதே. தலைவிக்கும் தலைவனுக்கும் உள்ள தொடர்பு அன்பால் அமைந்ததாகும். வீட்டளவில் தலைவி சொற்படி தலைவனும், புறத்து உலகளவில் தலைவன் சொற்படி தலைவியும் நடந்து வருதல் மரபாயிற்று. தலைவிக்கும் தலைவனுக்கும் பிறர் மனை நோக்காத கற்பு சங்கநூல்களிற் பேசப்படுகின்றது. தலைவன்பால் உள்ள அன்பு நிலை பெறுவதற்காக அவ

னிடத்தில் கடவுட் குணங்களைக் கண்டு பாராட்டும் வழக்கம் மிகுதிப்பட்ட காலத்தில் கணவனைத் தெய்வமாகப் பாவிக்குங் கொள்கை ஏற்பட்டது. தெய்வமாகக் கருதப்பட்ட கணவன் தெய்வம்போலக் கைம்மாறு கருதாது கருணை காட்டாது தன்னைத் தெய்வம் போலக் கருதி அதிகாரம் செலுத்தும் தன்னலம் மிகுந்தவனானபோது பெண்களிடம் கொடுமை காட்டும் வழக்கம் ஆண் மக்களுக்கு ஏற்பட்டது. பெண்களுக்குத் தன்னுரிமை கொடுப்பதே அறிவுக்குப் பொருத்தமானது என்னுங் கருத்துடைய திருவள்ளுவர் பெண்களைச் சிறையில் வைத்துக் காத்தல் பயனற்றது, அவர்கள் மன உறுதியினாலேயே தாங்கள் கற்பைக் காத்துக் கொள்ளுவது சிறந்த தென்பார், "சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர் நிறை காக்கும் காப்பே தலை" என்றார். பண்டைப் பெண்கள் சுயாதீன முடையவர்களாய்த் தற்காப்புடன் மகிழ்வாக உண்டுடுத்து காற்பந்து, அம்மானை, உந்தி, ஊசல் முதலிய விளையாடல்கள் பயின்று வந்தனர். யாதொரு குறைவும் இன்றி அன்புடைய தலைவனும் தலைவியும் இனிது வாழ்ந்தனர். அன்பாற் பிணிக்கப்பட்ட பெண்டிர் கற்பினை ஒரு பழுவாக எண்ணவில்லை. கம்பநாடர் கூறியபடி பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தவர்களாய் மனமொத்த காதலுடைய இருவர் களவும் கற்பும் ஒன்றன்பின் ஒன்றாக நன்கு நடாத்தினர். ஆண் மக்களுக்குக் கற்புத் தவறும் பெண் மக்களுக்கு அது தவறாமையும் இருத்தற்பாலது என்ற கொள்கை பொருத்த முடையதன்றாயினும் சமுதாயத்தில் அது பரவுதற்குக் காரணம்

பண்டை மக்கள் தாய்மையைப் பெருமைப் படுத்தி யதேயாகும். மக்கட் பேறு பெண்களுக்கே இயற்கையில் அமைந்தமையால் அம் மக்கட்பேறு சிறக்கும் வண்ணம் பெண்களுக்குக் கட்டுப்பாடு நம்முடைய நாட்டில் அதிகப் படுவதாயிற்று. பெண்களுக்குரிய தொழில்கள் நிழலில் இருந்து செய்யற்பாலனவாய் மக்கள் வளர்ப்புக்கு இடைஞ்சலில்லாத முறையில் ஏற்படுவதாயிற்று.

தற்காலத்தில் குடும்ப வாழ்க்கையில் ஆடவர் பெண்டிர் நிலைமைகள் மாறி வருவதால் அதற்கேற்ற முறையில் சீர்திருத்தங்கள் பேசப் படுவனவாயின. இக் காலத்தில் மனம் ஒவ்வாத இருவர் விலகிக் கொள்வதற்குச் சட்டம் இடம் கொடுப்பதாயிற்று. மக்களைப் பெற்ற மாது கணவனிடம் இருந்து விலகின் மக்களைப் பாதுகாக்குங் கடமை செவ்விதில் நடைபெறுதல் கடினம். ஆயினும் விலக வேண்டியதற்கு நோய், தீராக்கோபம் முதலிய தக்க காரணம் இருப்பின் விலகுவதைக் குற்றங் கூற இடமில்லை. ஆண் மக்களுக்கும் பெண் மக்களுக்கும் சம உரிமைகள் கொடுப்பதற்குத் தமிழர் சமயம் தடை கூறவில்லை. ஆயின், சமுதாய நன்மைக்கெனக் கருதப்பட்ட சில காரணங்களால் இன்னார்க்கு இன்ன கடமைகள் இருத்தல் வேண்டும் என்று முன்னோர் வரையறுத்தனர்.

உலக நன்மைக்குரிய பெரிய செயல்கள் செய்வதில் பெண்களுக்குச் சுயாதீனம் முற்காலத்தில் இருந்திருக்கிறது. கூன்பாண்டியன் மாதேவியாராகிய மங்கையர்க் கரசியார், தமிழ்ச் சமயமாகிய சைவம் நிலைத்தற் பொருட்டு மந்திரியாரை யேவித் திரு

ஞானசம்பந்தரை வரவழைத்து வழக்கு முறையாகக் கணவனுக்கு உண்மை புலப்படும்படி செய்து சைவத்தை நிலைநாட்டின பேருதவியை அறிஞர் யார் குறை கூறினர்? பண்டைக் காலத்தில் பெண்கள் அரசிகளாய்த் தமிழ் நாட்டில் விளங்கினமை கிரேக்கர் சரித்திரங்களிலும் கூறப்பட்டுள்ளது. நல்லிசைப் புலவராய் இருந்த வெண்ணிற் குயத்தியார் கரிகால் வளவனுக்கு அறிவுரை பகர்ந்தனர். பல பெண் புலவர்கள் மூவேந்தரிடம் பரிசுபெற்றனர். அறுபத்து மூன்று நாயன்மார்களுட் பலர் மனைவியர் தத்தங் கணவரோடு ஒத்த உரிமை பெற்று வாழ்க்கை நடத்தினர். வைணவ ஆழ்வார்களுள் ஆண்டாள் தன் விருப்பப்படியே அரங்கநாதரை மணப்பாளாயினள். தவம் செய்யும் பெண்டிர்க்குப் பெற்றோர்கள் திருமணத்தை வல்வந்தமாகச் செய்விக்கவில்லை. திலகவதியார் வரலாறு, உமையம்மை வரலாறு முதலிய வற்றால் அது நன்கு விளங்கும். மணிமேகலையும் கூடா ஒழுக்கத்திற் புகுத்தப்படாமை காண்க.

தங்கள் மனத்திற்கு ஒத்த கணவரை மணந்த பின் பெண்கள் பால் ஒழுக்கக் குறைவு ஏற்படின், மக்கள் வளர்ச்சிக்கு அது இடையூறு பயக்கும் என்பது கருதியே கற்பு வற்புறுத்தப் பட்டது. சாத்தேய தந்திர நூல்களுள் ஒத்து வாழ்தல் தக்க காரணங்கள்பற்றி இயலாமை நேருங் காலத்திற் பிரிந்து போதல் அனுமதிக்கப் பட்டுள்ளது. பெற்றோர்கள் பூப்படைந்து சில காலங்களுக்குள் மணம் செய்வியாவிடில் பெண்கள் தாமே தம்முடைய கணவரைத் தெரிந்து மணந்து கொள்ளலாமென்று சாத்தேய நூல்

கள் பகர்கின்றன. முதலில் பெண்களுக்கு இரக்கம் காட்டவேண்டுமென்ற கொள்கை தமிழருள் ஏற்பட்டதேயாகும்.

பெண்களின் மெல்லியல்புக்குத் தக்கவாறு மக்களைப் பெற்று வளர்த்தற்கு இடையூறு பயவாத துறைகளில் பெண்கள் ஊதியம் ஈட்டு தலைக் குறை கூற இடம் இல்லை. பெண்கள் போதகாசிரியராய் வேலை பார்ப்பதில் பெண் கல்லூரிகளில் அவர்கள் அமர்தல் மிகவும் பொருத்தமாகும். அவர்கள் வழக்கறிஞர்களாய் இருப்பதற்குத் தகுதி உடையவர்களே. கண்ணகி தன் கணவன் வழக்கைப் பாண்டியன் அவையில் அழகுபெற எடுத்துக் கூறியதைப் பாராட்டாதார் யார்? அங்ஙனம் அவர்கள் இயல்புக் கேற்ற தொழில்களைப் பார்ப்பதற்குத் தடை விளைத்தல் கூடாது. பெண்களிற் சிலர் வீரத்தன்மை உடையவர்களாயும் ஆண்களிற் சிலர் பெண்தன்மை உடையவராயும் இருத்தல் உலகியலிற் காணப்படுவதால் அவரவர்கள் தன்மைக்கு ஏற்ற தொழில்களைத் தெரிந்து பயிலுதல் நலம். சம உரிமை என்பது எல்லார்க்கும் ஒரு தன்மையான உத்தியோகங்களையும் அதிகாரங்களையும் கொடுத்து விடுவதில்லை. அவரவர் ஆற்றலுக்கும் தன்மைக்கும் ஏற்ற தொழில்கள் செய்வதற்கும் வேலை நியமனம் பெறுவதற்கும் பெண் பாலார் என்ற காரணம் தடையாக இருத்தல் கூடாது என்பதே அறிஞர் கருத்து. ஆண் மக்கள் தமது மனைவியரை நெல், பொன் முதலியன போலத் தம்முடைய சொத்தென்று கருதுதல் கூடாது. தம்மைப் போல அவர்களையும் சுயாதீனம் உடைய மக்கட் பிறப்பினராய்க் கருதுதல் வேண்டும். தவறு கண்ட விடத்தே திருத்தங்கூறுதல்.

பொருத்தமாயினும் அடித்தல், வைதல் முதலியன செய்தல் குற்றமாகும். நண்பர்களைத் திருத்து முறையில், பெண்டிர்களைத் திருத்துதல் நலம். கணவனும் மனைவியும் ஒருவர்க் கொருவர் காதலாற் பிணிக்கப் படுதலே நலமா மன்றி அச்சத்தால் தொடர்புறுதல் தக்கதன்று. ஒத்த அன்பே சமத்துவ நிலை அளிக்க வல்லது.

கைம் பெண்மணம் உயரிய கொள்கைகளை மாத்திரம் எடுத்தோதுந் தொல்காப்பியம் முதலிய நூல்களுட் கூறப்படாவிடினும் சில தமிழர் குலங்களில் அது வழக்கமாய் இருந்து வருகிறது. திருமணஞ் செய்து கொள்ளக் கூடிய வயதுள்ளவர்களாயும் விருப்பம் உள்ளவர்களாயும் இருக்கும் கைம்பெண்கள் மணம் செய்து கொள்வதால் இடையூறு ஒன்றுமில்லை. குழந்தைகள் இல்லாத கைம்பெண்கள் மணம் செய்து கொள்வதற்குத் தெளிவான தடையாதுமில்லை. கன்னிகளாய் உள்ள விதவைகளுக்கு முதன் மணம்போல மறுமணமும் கட்டாயமாய் இருக்கலாம். விதவை மறுமணத்தைக் கட்டாயமாக யாரும் வற்புறுத்த வில்லை. தவநெறியையே சிறந்த கொள்கையாகக் கொண்ட தமிழ்ப் பெண்டிர் அந்நெறி நிற்பதற்குத் தடைகூறுவார் யாருமில்லை. விதவை மணச்சட்டம் 84 ஆண்டுகளுக்கு முன்னேயே அதாவது கி. பி. 1856-ல் நிறைவேற்றப் பட்டபோதிலும் பல சமுதாயத்தினர் வழக்கத்தில் அதை நன்றாகத் தழுவிக் கொள்ளவில்லை. பல்வேறு குலத்தினர் குலத்தடையின்றிக் கலப்பு மணஞ் செய்வதற்குரிய சட்டம் இன்னும் நிறைவேற வில்லை.

அது விரைவில் நிறைவேற வேண்டும். கலப்பு மணச் சட்டம் கைம்பெண் மணத்திற்குத் துணைபுரியும். கலப்புமணம் தமிழர்களுக்குள் இருந்தது என்பது சங்க நூற் செய்யுள்களால் தெரியவருகிறது.

" யாயும் யாயும் யாராகியரோ
வெந்தையு நுந்தையு மெம் முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதுஞ்
செம்புலப் பெய்ந்நீர் போல
அன்புடை நெஞ்சந்தாங் கலந்தனவே "

சுந்தர மூர்த்தி சுவாமிகள் சரிதம் அதற்குத் தக்க சான்றாகும். ஆதிசைவராகிய அவர் உருத்திர கணி கையர்மரபில் உதித்த பரவையாரையும் வேளாளர் மரபில் உதித்த சங்கிலியாரையும் மணந்தமை காண்க. நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந் தாதியில் ' நூல்போன சங்கிலி ' என்னும் வாக்கியத் தின் வைத்து விதவைமணத்திற்குப் பிரமாணம் உண்டென்பாரும் உளர். அது அத்துணை பொருத்த முடையதன்று. சங்கிலியார் சுந்தரமூர்த்தியை மணப்பதற்கு முன் ஒரு கணவனையும் மணப்பதில்லை, என்ற விரதங் கொண்டனராதலின் அவளைக் கைம் பெண்ணாகக் கருத இடமில்லை. மணம்பேச ஆள்விடுத்த ஆண்மகன் பெண் வீட்டார் இணங்குவதற்கு முன்னமேயே இறந்து விட்டமையும் அறிக!

கன்னிமணம் மிகுந்த விடத்திலேதான் விதவை மணம் இன்றியமையாததாகும். அக்காரணமாகவே ராஜாராம் மோஹன்ராய் முதலிய சீர்திருத்தக்காரர் கள் வடநாட்டில் அதை வற்புறுத்துவாராயினர்.

எளிய வாழ்க்கை வாழும் மக்களுக்குக் குழந்தைகள் மிகுதிப்பட்டால் பொருளாதாரம் குறைவுபட்டு இடர் விளையுமென்று எண்ணித் தற்காலத்தில் பெண்டிர் கருத்தரியாமல் இருப்பதற்குரிய தடைகளைப் பற்றிப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. கருவைச் சிதைப்பது குற்றமாகுமேயன்றி கருத்தரியா திருக்க வழிதேடுவது பிழையாகாதெனினும் அதற்குரிய உபாயங்கள் உடம்புக்கு உடனேயாதல் நாட்கழித்தாதல் ஊறு செய்யாதிருக்க வேண்டும். சிலவகைத் தடைகளால் உடம்புக்கு நோயும் துன்பமும் விளைகின்றன. மன அடக்கமே சிறந்த கருவியாகும். கருத்தரித்தற்குரிய காலத்திற் சேர்க்கை யில்லாதிருத்தல் நலமென்று சிலர் கருது கின்றனர்.

குழந்தைகளை நல்வாழ்க்கைக்கு உரியராக்குதல் பெற்றோர் கடமை. பெற்றோர் இல்லாத விடத்துச் சமுதாயத் தலைவர்கள் அக்கடமையைச் செய்யற்பாலர். அவசியமாக மக்கள் அறிய வேண்டியவற்றைப் போதிக்குந் தொடக்கக் கல்வி கட்டாயமாய் இருத்தல் வேண்டும். தொடக்கக் கல்வி முறையில் உடம்பிற்கும் மனத்துக்கும் உயிர்க்கும் உறுதிபயக்கத்தக்க பயிற்சி முறைகள் அமைந்திருத்தல்வேண்டும். இளமையிற் கற்பது நன்றாக மனதிற் பதியுமாதலால் நினைவு கூரத்தக்க பாடங்களை இளமையிலே அழுத்தமாகக் கற்கும்படி ஏற்பாடு செய்தல் வேண்டும். ஏழு வயதில் சமயம் புகுதலுக்குறிய நெறிச் செயல்களைச் சுருக்கச் செலவில் நடத்தல் வேண்டும். நல்லொழுக்கமும் அவசியக் கல்வியும் பயில்விக்கப்பட்ட

மாணவர்களுக்குப் பன்னிரண்டு ஆண்டுக்குமேல் அவர் அவர் மனப்பான்மைக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வாறு தொழிற் கல்வி பயிற்றுதல் வேண்டும். அல்லது தக்க நூற்கல்வி பயிற்றுதல் வேண்டும். இதன் பொருட்டு ஒவ்வொரு குலத்திலும் உள்ள செல்வத் தலைவர்கள் நிதிசேர்த்துக் கல்விமான்களின் உதவி கொண்டு திட்டம் வகுத்துத் தொழிற் கல்விகளுக்கு வேண்டிய வசதிகள் செய்ய வேண்டும். தொழிற் கல்வி கற்றவர்களை ஆதரிக்க வேண்டும். கடவுளுடைய படைப்பில் ஒவ்வொருவரும் யாதாவது ஒரு வேலைக்குத் தக்க ஆற்றல் உடையவர்கள் என்பது ஆராய்ந்து பார்த்தாற் புலனாகும். பாவமில்லாத எத் தொழிலும் குறைவு பட்டதன்று. செல்வக் குடும்பத் திற் பிறந்த ஒருவன் தச்சுத் தொழிலுக்கோ கொல்லத் தொழிலுக்கோ தட்டார் தொழிலுக்கோ இயற்கை யான விருப்பமும் ஆற்றலும் உடையவனாயிருப்பின் அவன் அத்தகைய தொழில்களைப் பயின்று தேர்ச்சி பெற்றுச் சமுதாயத்திற்கு நன்மை செய்யற்பாலன். சமையல் வேலைகூட இழிவானது என்று கருதுதல் தவறு, அது இடருற்ற இடத்திற் பெரும் பயன் விளைக்கும். நளன் என்னும் அரசனுக்கு இடர் நேர்ந்த போது அது நல்ல துணையாய் உதவியது அறிக. வழக் கறிஞர் மகன் வழக்கறிஞனாய் இருக்க வேண்டி யதில்லை. இசை, ஓவியம், சிற்பம், கூத்து முதலியவற் றுள் ஏதாவது ஒரு கலையை அவன் பயிலுவது நலமே. ஒவ்வொருவனும் ஏதாவது ஒரு தொழிலைச் செய்யப் பழகுதல் வேண்டும். "முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்" என்னுங் கருத்து ஒவ்வொரு இளைஞர் மன

திலும் பதிக்கப்படுதல் வேண்டும். தொழில் இல்லார்க்கு வேலை கொடுப்பதற்குச் சமுதாயத்தலைவர்கள் துணைபுரியவேண்டும். முயற்சிக்குத்தக்க பயன் எந்தச் சமுதாயத்தில் எளிதாய் அமையுமோ அச் சமுதாயம் முன்னேற்றத்தில் முதல் நிற்பதாகும். தொழில் பற்றிய உயர்வு தாழ்வு பாராட்டப்படுதல் கூடாது. ஒரு சமுதாயத்தில் உள்ள உயர்ந்த அதிகாரிகளும் செல்வர்களும் ஒழுக்கத்திற் குற்ற மற்ற தாழ்ந்த பொருள்நிலை யுடையவரோடு சமமாய்ப் பழகி அவர்களுக்குச் சமஉரிமை கொடுத்தல் வேண்டும். அங்ஙனமாயின் சமுதாய ஒற்றுமை நிலைபெற்று மக்கள் விரைவில் முன்னேற்றம் அடைவர். சமுதாயச் செல்வர்கள் தங்கள் கடமையை ஒழுங்காக இயற்றுவார்களானால் சமுதாயத்தில் பிழைப்புக்குவழி இல்லாத மக்களே இருக்கமாட்டார்கள்.

"ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர்", என்றபடி கிளைஞர் அல்லாதார் தனது செல்வத்தால் உண்டு உடுத்து நன்கு வாழத் தன்இனத்தாரும் உறவினரும் பசித்திருக்கும்படி செலவு செய்கின்ற செல்வத்தை உடையவன் சமுதாயக் கடமை ஆற்றினவன் ஆகமாட்டான். சத்திரங்கள் வைத்த பலர் எளியராய் அச்சத்திர உணவும் தமக்குக் கிட்டாதவராய்ப் பரிதபிக்கத் தக்க நிலையில் இருக்கின்றார்கள். அறஞ் செய்கின்றவர்கள் முதலில் தங்கள் குடும்பத்தினர் நன்கு வாழ்வதற்குத்தக்க வசதிகள் செய்துவிட்டு எஞ்சிய பொருளை முதலில் தமது சமுதாயத்தார்க்கும் பின்னர்ப் பிறர்க்கும் பயன்படும்படி செய்தல் வேண்டும். தமிழரினத்தில் உள்ள பல

குலங்களும் ஒன்றோடொன்று போரிடாமல் பகைமையையும் பொறாமையையும் ஒழித்து ஓர் உடம்பின் பலஉறுப்புகள் போல ஒற்றுமைப்பட்டு வாழ வேண்டும். கல்வி நிலையும் செல்வ நிலையும் தழைத்தோங்கும் பொருட்டு, குலத்தலைவர்கள் குலத்திற்காகப் பாடுபடுவதில் ஒருவர்க் கொருவர் உதவியும் இணக்கமும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும். கலப்பு மணத்தால் குலங்களெல்லாம் ஒற்றுமைபட்டு ஒரு பெருஞ் சமுதாயம் ஆதல் வேண்டும்.

கடவுள் வழிபாட்டு முறையில் தமிழ் மக்கள் ஒற்றுமைப் படுதல் விரும்பத்தக்கதே. வாரத்தில் திங்கட் கிழமை போன்ற குறித்த ஒரு நாளில் கோயிலுக்குப் போய் இறைவனை வழிபடுதல் தெய்வ நம்பிக்கையுடைய தமிழர் யாவர்க்கும் கட்டாயமான கடமையாயிருத்தற்பாலது. சைவர்களுக்குத் திங்கள் வெள்ளிக் கிழமைகளும் வைணவர்களுக்குச் சனிக்கிழமையும், வாரத்தில் முக்கியமான வழிபாட்டு நாட்களாய் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு ஊரிலும் தமிழர் சமயசங்கம் ஒன்று அமைத்து வாரத்திற் குறித்த ஒரு நாளில் அங்குள்ள தமிழர்களெல்லாம் கூடித் தலைவர் ஒருவர் கற்பிக்கின்ற திருப்பாட்டையும் வேண்டுகோளையும் பிறர் எல்லாரும் சொல்லி இறைவனை வழிபடுகின்ற முறை ஏற்படுதல் நலமே.

## சமய ஒற்றுமை

தமிழர்களுள் சைவர்களும் வைணவர்களும் தங்கள் கொள்கைகளின் ஒற்றுமையான அடிப்படையை உணர்ந்து வேற்றுமைகளைப் பாராட்டாது ஒத்த

உணர்ச்சி உடையவர்களாய் அறிவாராய்ச்சியால் வரும் வழக்கீடுகளிற் கலகம் விளையாதிருப்பின் சமய உண்மைகள் யாவர்க்கும் தெளிவாக விளங்குதல் நேரும். வைணவர்களுக்குள் தமிழ்க்கலை ஒன்றே சிறப்பாகப் பேணப்படுமாயின் வடகலை தென்கலைச் சண்டைகள் ஒழிந்துபோம். திருவள்ளுவர் நூலிற் குறித்தபடி முழுமுதற் கடவுள் இலக்கணத்தையும் உயிரிலக்கணத்தையும் இருள், வினை, மருள் என்ற மூன்று தடைகளின் இயல்புகளையும் மறுபிறப்புண்மை, வடிவ வழிபாடு, அன்பினால் சமத்துவம் அருள் ஒழுக்கம் என்ற கொள்கைகளையும் தெய்வ நம்பிக்கையுடைய தமிழர் யாவரும் தமது சமயக் கொள்கைகளாக ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். அங்ஙனமாயின் பிற வேற்றுமைகளை அறிவாராய்ச்சியால் எளிதில் ஒழித்து விடலாம்.

சரித்திர ஆராய்ச்சியும் தத்துவச் சார்பாக நூல்களுக்குப் பொருள் கொள்ளும் முறையும் ஒன்றோடொன்று முரண்படுவனவாகத் தோன்றும். கடவுளுக்குப் பிறப்பிறப்பில்லை யென்னில், பிறந்ததாகவும் இறந்ததாகவும் கூறப்படுகின்ற வீரர்களைக் கடவுளாகத் தொழுவது எப்படி என்ற கேள்வி வரும். அவ் வீரர்கள் கடவுளின் தன்மைகளிற் சிற்சில தோன்றுதற்கு வாயில்களாய் இருந்தமைபற்றி, அவர்கள் வழிபடப் படுகின்றார்கள். மனைவி கணவனைத் தெய்வமாகத் தொழுகின்ற விடத்தும் இறைவன் அருள் தோன்றுதற்கு அவன் வாயிலாதல் காண்க. எவ்வடிவில் இறைவனை வழிபட்டாலும் அவ்வடிவில் அவர் நின்று வழிபாட்டினர் அன்பிற்

கேற்ப அருள் செய்கின்றார் என்பது சமயக் கருத்து. கடவுளுடைய செயல்கள் உலகில் மனிதர் வழியாக உருவெடுப்பதால், அற்புதமான ஆற்றல்களோடு உலகத்திற்குத் துன்பந் தீர்த்து நன்மை புரிந்த வீரர்களைக் கடவுட் செயல்களும் தன்மைகளும் தோன்றுதற் குரியவாயில்களாகக் கருதி வழிபடுமிடத்து, கடவுளே அவர்கள் வாயிலாக வழிபடப் படுகின்றார். அதுவே வடிவ வழிபாட்டின் நோக்கமாகும். வீரர்கள் கடவுள் அல்லர், கடவுளின் ஆற்றலுக்கு விக்கிரகங்கள் என அறிக. விக்கிரக வழிபாட்டில் இறைவனை நினைப் பதேயன்றி விக்கிரகத்தின் இயற்கைச் சடத் தன்மையை ஒருவரும் நினைப்பதில்லை. மரத்திற் செய்த யானை வடிவத்தைப் பார்க்குங் குழந்தை யானையை நினைப்பதன்றி மரத்தை நினைப்பதில்லை. அது போல வீரர்கள் வாயிலாக இறைவனை வழிபடுங்கால் வழி படுவோர் இறைவன் தன்மையையே நினைப்பதே யன்றி வீரர்களின் மனிதத் தன்மையை நினைப்பதில்லை. ஆதலால் அது இறை வணக்கமாகவே முடிகின்றது. இறைவனை வழிபடுவதற்கும் மனிதத் தன்மையுடைய வீரர்களிலும் தெய்வத்தன்மை உடைய வீரர் சிறந்த வாயில்களாவர் என்பதே சிலர் கொள்கையாகும். அதைப்பற்றிய உண்மையை மாசற்ற மனத்தினால் ஆராய்ந்து கொள்ளுதல் அறிஞர் கடமையாகும்.

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்" என்று சைவரும் " நும்மின் கவிகொண்டு நும் நுமிட்டா தெய்வமேத்தினால், செம்மின்சுடர் முடியென் திருமாலுக்குச் சேருமே" என்று வைணவத் தலைவராகிய

நம்மாழ்வாரும் கூறி யருளினமையால் எல்லார் வணக்கமும் போய்ச் சேருகின்ற முழுமுதற் கடவுளையே சிவம் என்றும் திருமால் என்றும் அன்னோர் கூறினர் என அறிக. இவ்வாறு கருத்தொற்றுமைகளைத் தெரிந்து அடிப்படையான பொதுக் கொள்கைகளைச் சைவரும் வைணவரும் சிறப்பாகப்பற்றி நிற்பாராயின் அவர்கள் தமிழர் சமயமாகிய திருநெறி யென்னும் ஒரு நெறிக் குரியராவர். முழுமுதற் கடவுளைத் தாம் என்று கூறுகின்ற ஏகான்ம வாதக் கொள்கை ஆரிய வைதிகத்திற்குச் சிறந்ததாய்த் தமிழர் நெறிகளுக்கு மாறுபட்ட புறக் கொள்கையாகும். முக்கிய கொள்கைகளே தமிழரை ஒற்றுமைப் படுத்தற்குரியன. வழிபாட்டு முறைகள் அவர் அவர் வசதிக் கேற்பக் குற்றமிலவாய், அடிப்படைக் கொள்கைக்கு மாறுகாதிருத்தற் பாலன. தமிழர் சமயமானது விரிந்த நோக்கமுடைமையால் தெய்வ நம்பிக்கை இல்லாதவரையும் அது இகழ்வதில்லை. சமய உயர் நிலை அடைவதற்கு ஏதுவாகிய நல்லொழுக்கமும் மொழிப் பற்றும் தமிழ் நாகரிகப் பயிற்சியும் தமிழ் மக்கள் எல்லாரையும் ஒற்றுமைப் படுத்துந் தன்மையன. இவ்வுண்மையினை யாவரும் கடைப்பிடித்து ஒன்று சேரவேண்டும்.

## தமிழர் சட்டம்

தமிழர்க்குரிய சட்ட விதிகள் வழக்கத்திலிருந்தனவே யன்றித் தெளிவாக இந்நாட்டு நூலில் எழுதப் படவில்லை. சின்னாட்களுக்கு முன் திருநெல்வேலியைச் சார்ந்த பேட்டை ஆறுமுகநயினார் பிள்ளை என்பவர் தமிழர் சட்டச் சார்பாகத் தமிழக ஒழுகு என்னும் ஒரு நூல் வெளியிட்டனர். அத்தகைய பிற நூல்கள்

தேடுதற்குரியனவே. வடமொழியிலுள்ள யாக்கிய வல்கிய மிருதி மனுமிருதி முதலிய மிருதிகளில் எழுதப்பட்ட சட்டமுறைகள் தமிழர்க்குப் பொருந்துவனவல்ல. ஆரிய வருணத்தாருள்ளும் ஒரு வருணத்தாருக்கே சிறப்புரிமை கொடுப்பதாக அவற்றுள் விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. (18-வது நூற்றாண்டின் இறுதியில் இந்நாட்டில் ஆட்சி புரியத் தொடங்கிய ஆங்கில அதிகாரிகள் இந்நாட்டு மக்கள் வழக்கங்களை விசாரித்துத் தொகுக்காமல் வடமொழிப் பண்டிதரிடம் சட்டம் யாதென்று வினவ அவர்கள் ஸ்மிருதிகளை எடுத்துக் கூற அவற்றையே எல்லார்க்கும் உரிய சட்டமாகக் கொண்டனர். இலங்கையில் ஆட்சி புரிந்த டச்சு அரசாங்கத்தார் கி. பி. 1707-ல் முதலியார்கள் கூடிய ஒரு கமிட்டி ஏற்படுத்தி அங்குள்ள தமிழரது சிவில் சட்ட முறைகளைத் தொகுத்தனர். அவை யடங்கிய நூல் தேசவளமை எனப்படும். தென்னிந்தியாவில் உள்ள தமிழ்ச் சமுதாயங்கள் பலவற்றின் சட்ட வழக்கங்களை தர்ஸ்டன் (Thurston on South Indian Tribes & Custom) எழுதிய பெரு நூலிற் காணலாம். தேச வளமையையும் இந்நூலையும் ஆய்ந்து நாட்டு வழக்கங்களையும விசாரித்தறிந்து சிவில்ச் சட்டத் தொகுதி யொன்று தனிச் சட்டமாகச் சட்டசபையில் நிறைவேற்றுதல் வேண்டும்.

இப்பொழுதுள்ள இந்து சட்டத்தில் சில உரிமைகள் வருணத்தைப் பொறுத்ததாக இருக்கின்றன. ஸ்மிருதிகளுக்குரிய நாலு வர்ணம் இந்நாட்டில் இப்போது வழக்கத்திலில்லை. அது வட நாட்டிற் கூட

இப்போது இல்லை என்பது பம்பாய்த் தீர்ப்பு ஒன் றிற் சொல்லப் பட்டிருக்கிறது. (521Bom. 497) மேலும் ஆங்கிலர், பிரெஞ்சுக்காரர், சீனர் முதலிய வர்கள் போலத் தமிழரும் சூத்திரராகார். ஸ்மிருதி விதிப்படி பூணூல் அணிந்து அக்கினி காரியஞ் செய் யாத தமிழர் எல்லோரையும் இந்து சட்டம் சூத்திரர் என்கின்றது. அந்தப் பாகுபாடு தொழிலைப் பொறுத்த தன்று. அதுசுமார்த்த மதக் கொள்கையாகும். இந்தி யாவிலுள்ள மதங்கள் பல ; முக்கியமானவை சுமார்த் தம், சைவம், வைணவம், மத்துவமதம் முதலியன. சுமார்த்த மதக்கொள்கையைச் சாராத சைவர்களையும், வைணவர்களையும் சட்டத்தினால் சுமார்த்த மதக் கொள்கைக்கு உட்படுத்துதல் நியாயமற்ற செயலா கும். தென்னாட்டுத் தமிழர் வரலாற்றையும் வழக்கத் தையும் ஆராயுமிடத்து நான்கு வர்ணம் தமிழருக்குள் கிடையாது. தொல்காப்பிய உண்மைப்பகுதி, திரு வள்ளுவர், தேவாரம் என்பவற்றில் நாற்குலத்தைப் பற் றிய பேச்சில்லை. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் என்ற திருக்குறளின்படி உழுதுண்பார் முதன்மையும், பிற பல்வேறு தொழில் செய்யும் மக்கள் துணை நிலையும் உடையவராய் இருந்தனர். கோயிற் பூசனை செய்யும் பார்ப்பனர், அரசர்கள் முதலியோர் உழுதுண்ணும் பெருங் குலத்தினின்று பிரிந்தவரேயாவர். உழு துண்பாரைத் தொழுதுண்ணும் சூத்திரர் எனவும் தத் தம் தொழிலுக்கு ஏற்ற பெயர் பெற்று விளங்கும் பதினெட்டுக் குலத்தாரையும் பிறரையும் சூத்திரர் எனவும் கூறும் இந்து சட்டம் உண்மையை அடிப் படையாகக் கொண்டதல்ல. தமிழ்ச் சைவ வைண

வக் கொள்கைப்படி இறைவனைத் தொழும் யாவரும் ஒரு குலத்தினரே. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்றார் திருமூலர். அவர்கள் கொண்டுங் கொடுத்தும் வாழலாம். சாதி வேற்றுமை, சமய வெற்றுமையின் முன் அடங்கி ஒழியற்பாலது. சின்னாட்கு முன் ஏற்பட்ட கல்கத்தாத் தீர்ப்பு ஒன்றில் பிராமணர் என்னப்படுவார்க்குப், சூத்திரர் என்னப் படுவார்க்கும் நடந்த திருமணம் மண மக்கள் தக்க வைணவ ஒழுக்கத்தினர் என்ற காரணம் பற்றிச் சட்டப்படி செல்லத்தக்கது என்று தீர்மானம் ஆயிற்று. (58 Cal. 1392). பம்பாய் மாகாணத்தில் மேற்குல ஆடவர் கீழ்க்குலப் பெண்ணை மணத்த லாகிய அனுலோமத் திருமணம் சட்டத்தில் ஒப்புக் கொள்ளப் படுகிறது.

அறிவு ஆராய்ச்சிக்கும் காலத்தேவைக்கும் ஏற்ற படி பிராமணர், சூத்திரர் என்ற வேறுபாடு கிரிமினல் சட்த்தில் இல்லாதது போல, சிவில் சட்டத்திலும் ஒழிக்கப்பட வேண்டும்.

தமிழ் நாட்டுப் பண்டைவழக்கப்படி (joint family) கூட்டுக் குடும்பம் என்பது கிடையாது. மணம்புரிந்து கொண்டால் தலைவனும் தலைவியும் ஒருங்குகூடித் தனியே இல்லறம் நடாத்தினர். பெற்றோர்பால் உள்ள பொருளைக் கொண்டு ஆடவன் பொருளீட்டிச்செல்வத்தை விருத்திசெய்வது வழக்கம். பெற்றோர்களுக்கு ஆதரவாயிருத்தலன்றிப் பெற்றோர் பொருளைச் செலவுசெய்து வாழ்தல் தக்கதன்றென்று கருதப்பட்டது. அது கண்ணகி, காரைக்கலம்மையார் வரலாறுகளாலும் பொருள் வயிற்பிரிவு என்ற அகத்

துறை வழக்கத்தாலும் ஊகித்தறியப்படும். தந்தை வாழும் நாளில் தந்தை சொத்தில் மகனுக்கு உரிமை இல்லாதிருந்தது. தந்தை காலத்திற்குப் பின் தான் மகனுக்கு உரிமை உண்டு. திருமணத்துக்கு முன்னுள்ள தந்தையின் சொத்து சமமாக ஆண் பிள்ளைகளுக்கும் தாயின் சொத்து சமமாகப் பெண் பிள்ளைகளுக்கும் பகுத்துக்கொடுக்கப்பட்டது. இருவரும் மணந்து வாழுங்காலத்தில் ஈட்டப்பெற்ற செல்வம் தேட்டம் எனப்படும். அது ஆண் பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் சமமாகப் பகுத்துக் கொடுக்கப்பட்டது. இவ்விதிப்படி ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏறக்குறைய சமமான சொத்துரிமை ஏற்படுதல் காண்க. இதனைப்பற்றிய விவரம் தேசவளமைச் சட்டத்தில் தெளிவாகக் காணப்படும்.

இந்து சட்டத்தில் பிராமணருடைய காமக்கிழத்தி புதல்வருக்குத் தகப்பனார் சொத்தில் பங்குரிமை கிடையாது. சூத்திருடைய புதல்வருக்கும் அவர் புதல்வருக்கும் சொத்துரிமை உண்டு. இவ்வேற்றுமையை ஒழித்து ஒரே மாதிரியாக யாவருடைய காமக்கிழத்தி புதல்வருக்கும் ஒத்த உரிமை கொடுக்கப்படுதல் வேண்டும்.

கலப்பு மணத்துக்கு இடையூறாக உள்ள விதிகளைச் சட்டவாயிலாக ஒழித்தல் வேண்டும். தமிழர் திருமணத்துக்குப் பலர் அறியத் தாலிகட்டுதல் ஒன்றே போதுமானதென்ற விதி தெளிவாகப் பிரசுரம் செய்யப்பட வேண்டும். நெருப்பு வழிபாடு முதலிய சடங்குகள் இன்றியமையாததல்ல என்ற கொள்கை நிலைபெறுதல் வேண்டும். கணவனும் மனை

வியும் தக்க காரணங்களால் ஒத்துவாழக் கூடாத விடத்தும் பிரிதல் கூடாதென்ற இந்து சட்ட விதி ஒழிதல் வேண்டும். பிரிந்தார் மறுமணம் செய்துகொள்ளச் சட்டம் இடம் கொடுக்கவேண்டும்.

குழந்தைகளைச் சுவீகாரம் செய்துகொள்ளுவதற்கு அதாவது தெத்து எடுப்பதற்கு அக்கினி காரியம் செய்யப்பட வேண்டுமென்ற விதி தமிழருக்குக் கிடையாது. தத்த ஓமம் வேண்டுமென்ற கட்டாயம் அவர்களுக்கு இருத்தல் கூடாது. தேச வளமைப்படி மஞ்சள் நீர் குடிப்பது அதன் சார்பான சடங்காகும். தெத்து எடுக்கும் புதல்வனை ஈதலும் ஏற்றலும் காட்டக்கூடிய சான்றுகளே இந்த நாட்டில் இக்காலத்திற் போதுமானவை. விதவைகள் தெத்தெடுப்பதற்குக் காரணமாகாத தடைகள் இருத்தல் கூடாது.

விதவைச் சொத்துரிமை (widow's estate) என்ற குறைவுபட்ட சொத்துரிமை இந்து சட்டத்திலிருந்து எடுபடவேண்டும். வாழ்க்கை யுரிமை, முழு உரிமை, சேர்க்கை உரிமை என்ற சொத்துரிமைகளே சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப் படவேண்டும். விதவைச் சொத்துரிமை என்பதனாலே ஏற்பட்ட வழக்குச் செலவுகளுக்கு அளவில்லை. விதவைகளுக்குத் தங்கள் சொத்துரிமை இன்ன வரம்புடையதென்று தெளிவாக அறிந்துகொள்ள வழி வகுக்கவேண்டும்.

சூத்திரர்களுக்கு இந்து சட்டப்படி சந்நியாசம் இல்லை யென்றும் அவர்கள் குடும்பச் சொத்துகளுக்கு வாரிசாகலாமென்றும் விதித்திருப்பது பற்றித் தமிழர்களுக்கு அவ்விதியைப் பொருத்தித் தீர்ப்புகள் ஏற்பட்டிருப்பது ஒரு குறைவாகும். தமிழர்க்குரிய திருக்

குறள் முதலிய நூலில் துறவு பேசப்படுதலால் அவர்களுக்கு இந்து சட்டவிதி பொருந்துமாறில்லை. துறவு நிலையில் நிற்போர் குடும்பத்துக்கு வாரிசாக வருதல் கூடும் என்று விதித்தல் அறிவுக்குப் பொருந்துவதன்று, எவ்வகைத் துறவிகளும் தங்கள் குடும்பச் சொத்துக்கு உரியராகாரென்ற விதியே சிறந்தது.

இன்னின்ன சட்டச் சீர்திருத்தம் வேண்டற்பாலது என்று தீர்மானிப்பதற்குத் தமிழிருள் தக்க வழக்கறிஞர் சிலரைத் தெரிந்தெடுத்து ஒரு சிறு கழகம் அமைக்கவேண்டும். தமிழர்க்குத் தனியே சொத்துச் சட்டம் அமைப்பதைப் பார்க்கிலும் பகுத்தறிவுக்கும் தமிழர் சட்ட வழக்கத்திற்கும் ஏற்ற முறையில் இப்பொழுதுள்ள இந்து சட்டத்திற் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் ஏற்படுத்துவது நலம் என்று சிலர் கருதுகின்றார்கள். சீர்திருத்தங்களை யெல்லாம் ஒருங்கு சேர்த்து ஜாதிக் குறைவு நீக்கச் சட்டம் (Caste Disabilities Removal Act) ஒன்று இந்திய சட்டசபையில் நிறைவேற்றுவதற்குத் தக்க கிளர்ச்சி செய்து அதனை முற்றுப் பெறுவித்தல் வேண்டும்.

### செந்நெறி விரிவு

தமிழர் சமயமாகிய செந்நெறி அல்லது திருநெறி உலகுக்கெல்லாம் இடம் கொடுப்பது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது தமிழரது விரிந்த கொள்கையைக் காட்டும். "ஞாலம் நின்புகழே மிகவேண்டும்" என்றார் திருஞான சம்பந்தர். நம்மாழ்வார் மண்ணவரெல்லாம் "ஒக்கத் தொழுகிற்றிராகில் கலியுகமொன்றுமில்லையே" "கலியுக மொன்றுமின்றிக்கே தன்னடி

யார்க்கருள் செய்யும்" என்றார். தாயுமானர் சைவ சமயமே என்ற திருப்பாட்டில் "சேரவாரும் செகத்தீரே" என்பது காண்க. ஸ்ரீராமானுஜர் எக்குலத்தை வரையும் வைணவ அந்தணராக்கின சிறப்பு யாவரும் அறிந்ததே. இவற்றால் தமிழர் நெறி உலகிலுள்ள யாவரும் அறிந்து சேர்தற்குரிய பெருந்தன்மை யுடையது என்பது தெளிவாகும்.

வெவ்வேறு சமயத்தார் தம்முள் மணந்து கொள்வதற்குத் தமிழர் நெறி தடை ஏற்படுத்தவில்லை என்பது கூன்பாண்டியன் சமணராயும் அவன் மனைவியாகிய மங்கையர்க்கரசியார் சைவராயும் இருந்தமையால் அறிக. தமிழ் மக்களுள் சைவ நெறி நிற்பார் வைணவரோடு பெண் கொள்வதும் கொடுப்பதும் வழக்கமாயிருக்கிறது. சமயத் தடை இடைக் காலத்தில் ஏற்பட்டதாகும்.

தமிழர் நெறி விரிந்த நோக்கமுடைமையால் உலகிலுள்ள யாவராலும் தழுவப்படுதற்குரியதா யிருப்பதோடு நூற் பிரமாணமாகிய கட்டுப்பாடு இல்லாதது. இறைவன் அருள்பெற்று மக்களுக்கு உண்மை போதிப்பான் பெரியார் இயற்றிய நூல்களும் அநுபவத் திருப்பாடல்களும் பிரமாணமாகக் கொள்ளத் தக்கன எனினும், நாளடைவில் சில மனிதர்கள் தத்தம் கருத்துக் கேற்ப அவறுள் மாறுதல் செய்தலும் இல்லாதவற்றைப் புகுத்துதலும் செய்தல் கூடுமாதலின் ஆசிரியர் திருவள்ளுவனார் இன்ன நூலை நம்ப வேண்டுமென்று விதியாது,

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.
எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

என்று அருளிச் செய்தார். தேவார முதல்வர்கள், மாணிக்கவாசகர், நம்மாழ்வார் முதலிய சமயப்பெருந் தலைவர்கள் நூற் பிரமாணத்தை வற்புறுத்தாது தங் கள் உயர்ந்த அனுபவத்தையே எடுத்துரைத்தனர். ஆசிரியர் மெய்கண்டாரும் அளவை நூல் வல்லாரை யும் கடவுள்த் துய்ப்புடையாரையுமே மேற்கோளாள ராக எடுத்துக் கொண்டனர். இதனுல் சுருதிப் பிர மாணத்தைப் பார்க்கிலும் அனுபவப் பிரமாணத் தையே முதன்மையாகத் தமிழர் சமயத் தலைவர்கள் எல்லாரும் கைக்கொண்டனர் என்பது தெளிவு. உரை யினும் அருட்காட்சியே சிறந்த தென்பது அவர்கள் கருத்து. அருட்காட்சியின் உண்மைத் திறனைப் பகுத் தறிவினுல் ஆய்ந்து அறிந்து கொள்வதற்குப் பெருந் துணை புரிந்தவர் ஆசிரியர் மெய்கண்டாரே ஆவர்.

தமிழர் சமயத்தில் மெய்க் கொள்கையின் அறிவே வற்புறுத்தப்படுவதன்றி வழிபாட்டு முறை அவரவர் கருத்திற்கேற்பவும் வசதிக்கேற்பவும் வகுத் துக் கொள்ள இடம் உண்டு. "அப்பனை ஆராவமுதினை வள்ளலை எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்துமின், அப் பரிசு ஈசன் அருள் பெறலாமே," என்றூர் திருமூலர். அறுபத்துமூன்று நாயன்மார்களுள் பலர் வெவ்வேறு வழிபாட்டு முறைகளைக் கைக்கொண்டமை தெளிவு. சாக்கிய நாயனூர் கல்லை மலராகத் தூவி நற்கதியடைந் தனர். கண்ணப்பர் தானறிந்த முறையில் ஊனை நிவே

தித்தும் பேரன்பினல் பெறலரும் பேறுபெற்றனர். உள்ளத்திலேயே இறைவனுக்குக் கோயில் கட்டிப் பூசலாரும் வாயிலாரும் வழிபட்டனர். ஆனயர் குழலில் ஐந்தெழுத்தை ஓதி வீடுபெற்றனர். ஆண்டாள் பூமாலையைப் பெருமாளுக்குச் சூடிக் கொடுத்தாள். திருமங்கை மன்னர் மறவாழ்க்கையிலேயே திருமாலுக்கு அன்பு செலுத்தினர். ஒழுங்கான ஒருமுறையையே கைக்கொள்ளுதல் சமுதாய ஒற்றுமைக்கு ஏதுவாமாயினும் பலமுறைகளுக்கும் இடங்கொடுத்து நிற்கும் தமிழர் சமயத்தின் பெருந்தன்மை பாராட்டற்பாலது.

சமயத்தின் நோக்கம் பேரின்ப வீடடைதல்; அதற்கு இன்றியமையாத நல்வழி அதன் கொள்கையைத் தழுவி நடத்தல். கொள்கையை அறிவதற்குக் கருவியாயிருப்பது சமய நூல்; சமய நூலினைத் தெளிவாகவும் திட்பமாகவும் கற்றுக் கொள்ளுதற்குக் கருவி நூலாகிய இலக்கணமும் பிற இலக்கியங்களும் கற்றல் வேண்டும். தமிழர் சமய நூல் தமிழிலேதான் செவ்வையாக அமைந்திருத்தலின், தமிழ் மொழி பேணுதல் இன்றியமையாததாகும். மொழியைப் பேணுவதற்கு மொழிப்பற்று அவசியம் வேண்டப்படும். ஆதலால் தமிழ் மொழிப்பற்றும் தமிழரது செந்நெறிக் கொள்கையும் உடையார் எக்குலத்தாராயினும் எம்மதத்தாராயினும் தமிழர் சமயத்தைச் சேருவதற்குத் தகுதி உடையவரே. ஆதலின் தமிழர் திருநெறி உலகிற்கே பொது நெறியாகும் வாய்ப்புடையது. குலப் பிறப்பு, நூல் நம்பிக்கை, வணக்க முறைக் கட்டாயம் முதலிய கட்டுப்பாடுகள் இல்லாத ஒரு பெருந் தனி

நெறி தமிழர் சமயமாதலின், அது ஒரு காலத்தில் உலகெலாம் தழுவும் ஒப்புயர்வற்ற மாண்புடையதாய் விளங்கும்.

சுருங்கிய காலத்தில் இந்நூல் எழுதுவதால் இதன் கருத்துக்கள் செவ்வையாகக் கோவை செய்யப்படவில்லை. இந்நூலிற் கூறியவற்றை இங்கே தொகுத்துரைக்கின்றோம். தமிழரென்பார் குமரிமுனைக்குத் தெற்கிலிருந்த கடல் கொண்ட நாட்டில் நின்று சுமார் பதினாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே இந்திய நாடெங்கும் பரவிய மக்களினத்தவராவர். அவர்களுக்கு முன் அவரோடொத்த இனத்தவராய் ஐரோப்பாக் கண்டத்திற் சென்று தங்கியவர் ஆரியராவர். காக்கேசியர் என்பதற்குப் பதிலாகத் தமிழர் என்ற சொல்லையே நாம் வழங்கலாம் .திராவிடர் என்ற சொல்லையும் பயன்படுத்தலாம். மத்தியதரைக் கடற்கரையிற் குடியிருந்த ஆரிய இனத்தவர் திராவிடர்கள் என்று கூறுகின்றவர்களும் ஐரோப்பிய ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்குச் சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே திராவிடர் இந்தியாவிற் பரவி நாகரிகத்தை வளர்த்தனர் என்பர். பண்டைத் தமிழ் நூல் ஆராய்ச்சியாலும் பிறநாட்டு வரலாறுகளாலும் இற்றைக்குப் பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆரியக்கலப்பின்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருந்த தமிழர் தமது ஒளி நெறியையும் தொழிற்கலை கவின்கலைகளையும், உழவு, வணிகம் என்பவற்றையும் வளர்த்துக் கடல் வழியாகவும் தரை வழியாகவும் வட இந்தியா, எகிப்து, மெசப்பட்டோமியா, சீனநாடு முதலிய இடங்களுக்குச் சென்று நாகரிகத்துக்குவித்திட்டனர் எனவும்

அவர்களுள் அறிவர் என்ற பெரியார் முடிந்த உண்மைகளைக் கண்டு மொழியிலும் நூலிலும் அவற்றை அமைத்துவைத்தன ரெனவும் தெரியற்பாலது.

முதலில் தமிழர் இறந்த முன்னோரையும் ஞாயிறு, திங்கள், யானை, பாம்பு முதலியவைகளையும் வழிபட்டனர். பின்னர், முன்னோர் வழிபாடும் ஞாயிற்றின் வழிபாடும் கலந்து சிவ வழிபாடாக மாறிற்று. தெய்வத்தை ஆண் வடிவிலும் பெண் வடிவிலும் அவர்கள் வழிபட்டமையால் திங்கள் வழிபாடு சத்தி வழிபாட்டில் அடங்குவதாயிற்று. இளஞாயிற்றின் வழிபாடு முருகன் வழிபாடாயிற்று. யானை வழிபாடு பிள்ளையார் வழிபாடாயிற்று. யோக நெறிகள் கைவந்தபின் பாம்பு ஆதார சத்திக்கும் குண்டலி சத்திக்கும் அறிகுறியாயிற்று. கருநிறமுடைய மாயோள் வழிபாடு மாயோன் வழிபாடாயிற்று. அது திருமால் வணக்கமாக மாறிற்று. எனவே ஒரு காலத்தில் சிவன், அம்மை, திருமால், பிள்ளையார், முருகன், கதிரவன் என்ற ஆறுதெய்வங்களும் சிறந்த முறையில் வழிபடப்பட்டனர். அவர்களுக்குரிய நெறி அறுவகைச் சமயமெனப்பட்டது.

பின்னர் முழுமுதற் கடவுள் உண்மை பெரியோரால் நிலை நாட்டப் பெற்றது. முழுமுதற் கடவுளின் திருவருள் பெற்ற பெரியாராகிய அறிவர் ஒளி நெறி (ஞான நெறி)யைத் தக்கவர்களுக்குப் போதித்தனர் அப்போது அறம் பொருள் இன்பம் வீடு நாற் பயனும் என்ற கொள்கை பரவிற்று. மேற்கூறிய பெரியார் வகையிற் சிலர் முழுமுதற் கடவுளின் இலக்கணத்துக்கு ஏற்றவாறு அறுவகைச் சமயங்களையும்

ஒழுங்குபடுத்தினர். அதனால் பரம்பொருளைத் தந்தை யாக வழிபடுதல் சைவமாகவும் தாயாக வழிபடுதல் சத்தி சமயமாகவும் சத்தியை ஆண்வடிவில் வழிபடு தல் திருமால் சமயமாகவும் பரம்பொருளை ஆனந்தம் விளைக்குங் குழந்தை வடிவாக வழிபடுதல் முருகன் வழி பாடாகவும் உலகத்தைப் படைக்கும் மூல ஒலி யாகிய ஓங்கார வடிவில் வழிபடுதல் பிள்ளையார் வழிபாடாகவும் ஒளி மண்டிலமாக வழிபடுதல் ஞாயிற்றின் வழிபாடாகவும் கொள்ளப்பட்டன. உலகில் உள்ள எப்பொருளும் கடவுள், உயிர், மெய் அல்லது உலகம் என்ற முப்பொருளில் அடங்கும் என்பதும் எல்லா உலகங்களின் அடிப்படை முப்பத் தாறு முதல் (தத்துவம்)களில் அடங்கு மென்பதும் உணர்த்தப்பட்டன. அறிவர்க்குத் துணையாய் இருந்து உலக வாழ்க்கை நலங்களுக்கு உரிய கலையறிவை வளர்த்த சித்தர், மருந்து, மந்திரம் மணி, வாதம், தவ முறை, அறிவு நூல் என்பனவற்றைப் பற்றிய நுண் நூல்களை இயற்றினர். அறிவர் நூலின் கருத் துக்களும் சித்தர் நூற்கொள்கைகளும் வட மொழியில் ஆகமம், தந்திரம் என்ற நூல்களில் தழு வப்பட்டு விளங்கின. தொல்காப்பியர் காலத்துக்கு முற்பட்ட நூல்கள் மறைந் தொழிந்தபின் அவைகள் தமிழரால் கையாளப்பட்டன. தொல்காப்பியர் காலத்துக்குப் பின் திருவள்ளுவர் திருக்குறள் அறம் பொருள் இன்பங்களைக் கூறும் பொது நூலாகவும் திருமூலர் திருமந்திரம் போன்ற நூல்கள் சிறப்பு நூலாகவும் விளங்கின. ஆரிய வேதத் தொடர்பு ஏற் பட்ட பின், தமிழர் தங்கள் முழுமுதற் கடவுள் வழி பாட்டிற்கும் அருள் ஒழுக்கத்திற்கும் மாறுகாத

வேள்வி முறைகளை உலகப்பயன் கருதிக் கைக்கொண் டனர். பின்னர் வட நாட்டு மதங்களும் தென்னாட் டிற் பரவலாயின. மும்மூர்த்திகள் வழிபாடு உரம் பெற்று இராமாயணப் பாரதக் கதைகள் பரவிய பின் வைணவம் காத்தற் கடவுள் வழிபாடாய்ப் பிரிய லாயிற்று. ஆயிரத்தறுநூறு ஆண்டுகளுக்கு முன் தொடங்கி தமிழர் சமயப் பகுதிகளாகிய சைவத்திற் கும் வைணவத்திற்கும் சிறந்த சமயத் தலைவர்கள் தோன்றி திருவாசகம், தேவாரம் திருவாய்மொழி முதலிய நூல்களை இயற்றி அருளினர். வடமொழி ஏகான்ம வாதத் தத்துவ நூல்களால் ஏற்பட்ட குழப் பத்தில் நின்று தமிழர் மெய்ந்நெறியைப் பிரித்துத் தெளிவுபடுத்துவதற்கு ஆசிரியர் மெய்கண்டார் தமது மெய்ந்நூலை இயற்றிப் போதித்தனர்.

திருவள்ளுவ நூலிலும் திருமூலர் நூலிலும் மெய் கண்ட நூலிலும் நம்மாழ்வார், ஆண்டாள் திருவாக்கி லும் உள்ள தமிழர் செந்நெறியின் அடிப்படையான கொள்கைகளே தமிழரை ஒற்றுமைப்படுத்தும் சம யக் கொள்கைகளாகும்.

தமிழ்ச் சமயத்தின் பெயர் அதன் சிறந்த நோக் கத்தை வைத்து அமைந்திருக்கிறது. திருநெறி, செந் நெறி, மெய்ந்நெறி, என்பன அதன் பெயர்கள். இந்து மதம் என்ற ஒரு மதம் கிடையாது. இந்திய மதங்க ளுள் தமிழர் சமயமும் ஒன்று என்னலாம். தமிழர் மெய்க் கொள்கைப்படி உண்மைகள் போதித்தற்குக் கருவியாகும் குறிகளும் அடையாளங்களும் கதைக ளும் தழுவற்பாலன. அறிவுக்குப் பொருத்தமில்லாத புராணக் கதைகள் தள்ளற்பாலன. சடங்குகளில்

சமயம் புகுதற்குரிய தீக்கை, திருமணம், ஈமக்கடன், என்பவற்றிற்குரிய நெறிச் செயல்களே இன்றியமையாதன. அவற்றைத் தமிழ் மொழியில் தமிழ் முறையில் நடத்தவேண்டும் (சைவச் சடங்கு விளக்கம் பார்க்க.) பண்டிகைகளுள் எதுவும் தமிழர்க்குக் கட்டாயம் வேண்டுவதாயில்லை. சிறந்தவற்றை அவரவர் விருப்பப்படி மேற்கொள்ளலாம். நோன்புகளும் (விரதங்களும்) அத்தகையனவே.

தமிழர் கோயில்களில் தமிழ் முறையிலே தமிழ் மொழியிலே தக்க தமிழரைக் கொண்டே பிறப்புத் தடையின்றிப் பூசனையும் தொண்டுகளும் செய்வித்தல் வேண்டும். செல்வம் உள்ள கோயில்களிலும் ஆதீனங்களிலும் தமிழர் சமயக் கலாசாலைகள் நிறுவப் பெற்று ஒழுங்கான முறையில் நடைபெற வேண்டும்.

சிவில் சட்டத்தில் ஆண் பெண்களுக்குச் சமமான சொத்துரிமை கொடுக்கப்பட வேண்டும். வருண வேறுபாடுபற்றி ஏற்பட்டிருக்கும் குறைவுகள் சட்டத்தில் நின்று ஒழிக்கப்பட வேண்டும். தமிழர்க்குத் தனிக் குடும்பச் சட்டம், வசதிப்படுமாயின், ஏற்படுத்தல் நலம்.

காதல் மணம், கலப்பு மணம், கைம்பெண் மணம் என்பவை தமிழருக்கு ஒத்தனவே. உடன் உண்பதற்கும் பெண் கொள்ளுதல் கொடுத்தல் செய்வதற்கும் பிறப்பினால் ஏற்படும் தடை தமிழர்க்குக் கிடையாது. கலப்புமணச் சட்டம் தமிழர் ஒற்றுமைக்கும் இந்தியர் ஒற்றுமைக்கும் அவசியமாய் நிறைவேற்றப் படுதற்குரியது.

உலகில் உள்ள எல்லாச் சமயங்களிலும் தமிழர் நெறியானது விரிந்த நோக்கமும் அமைப்பும் உடையது. பிறப்புத் தடை, நூற் கட்டுப்பாடு, மணத்தடை, சடங்குமுறைக் கட்டுப்பாடு என்பனவற்றுள் ஒன்றும் அதற்கு இல்லை. மொழிப்பற்றும் கொள்கையுமே இன்றியமையாதன. ஆதலின் தமிழர் சமயம் உலகப் பொது நெறியாய் விளங்குந் தகுதியுடையது. இந் நூற் கருத்து இங்கு முற்றுப் பெறுகின்றது. இதன் விரிவும் திருத்தமும் எதிர்காலத்தில் நிகழற்பாலன.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 1 | மக்கள் | மக்களைத் |
| ,, | 7 | கால்டுவல் | கால்டுவெல் |
| 4 | 9 | மெசப்பட்டோமியா | மெசப்பட்டோமியா, |
| 5 | 22 | or of their race outside India | (omit) |
| 8 | 1 | மீண்டும் | மீண்டு |
| 9 | 15 | புதுதற்கால | புதுக்கற்கால |
| 10 | 19 | ஹாரப்பா | ஹாரப்பா, |
| 11 | 20 | கால்களை | கால்களைக் |
| 14 | 10 | காலத்தால | காலத்தால் |
| ,, | 27 | thes | they |
| 16 | 20 | வேற்றுமை | எண் |
| 21 | 16 | (Lost Lemuria) | " Lost Lemuria " |
| ,, | 17 | (Scot Eliott) | Scot Eliott |
| ,, | 28 | நாடுகளைப்பற்றி | கடல்கொண்ட நாடுகளைப்பற்றி |
| 22 | 1 | கடல்கொண்ட | (நீக்கிப் படிக்கவும்) |
| 29 | 7 | பாலஸ்தீன | பாலஸ்தீன் |
| 31 | 1 | அவர்ள் | அவள் |
| 35 | 10 | வண்டாற்றுங் | வண்டரற்றுங் |
| ,, | ,, | வனர்தூக்குத் | வளர்தூக்குத் |
| ,, | 15 | காளிங்கவொன்னும் | காளிங்கனென்னும் |
| 37 | 3 | இருவகையாகப் | ஐவகையாகப் |
| ,, | 28 | வழிபோக்கர்கள் | வழிப்போக்கர்கள் |
| 39 | 1 | நாயன்மார்களும் | நாயன்மார்களுக்கும் |
| ,, | 20 | தளர்சசியுற்றன | தளர்ச்சியுற்றன |
| 40 | 9 | நிகழ்ந்து | நிகழ்ந்தது |
| ,, | 12 | தாமிரபரணி | தாமிரபர்ணி |
| 41 | 3 | சித்திரைத | சித்திரைத் |
| 43 | 5 | வக்கனர் | வந்தனர் |

| | | | |
|---|---|---|---|
| 44 | 10 | திருவள்ளுவர் | திருவள்ளுவர் |
| 45 | 16 | காமஞ் | “ காமஞ் |
| ,, | 19 | பயனே. | பயனே.” |
| 46 | 7 | எனப்பட்டதால் | எனப்பட்டதால், |
| 50 | 8 | கூறுகின்றார்* | கூறுகின்றார். * |
| 53 | 1 | லால் | லாலும் |
| ,, | 9 | தண்ணளிடையதாய்த் | தண்ணளியுடைய தாய்த் |
| ,, | 15 | இறுதி | இறுதியி |
| 54 | 10 | டரக | டகர |
| 58 | 5 | தெய்வமாகிய | தலைவனாகிய |
| 62 | 13 | நீர | நீர் |
| ,, | 20 | சந்தனம | சந்தனம் |
| ,, | 25 | பச்சரிசிமா | பச்சரிசிமா, |
| 76 | 22 | திரியர | திரியா |
| 77 | 4 | ஆயுத | ஆய்த |
| 78 | 24 | (Transcendental) | Transcendental |
| ,, | 26 | (Immanent) | Immanent |
| 79 | 27 | செம்மைநன்மை மங்கலம், | செம்மை நன்மை மங்கலம், |
| 84 | 15 | பொருளில | பொருளில், |
| 85 | 3 | நல்வினை | நல்வினை, |
| ,, | 11 | மெய் | மெய்ப் |
| 88 | 17 | ‘ அளறு | ‘ அளறு ’ |
| 89 | 13 | அமைந்துள்ளன வாயினுற் | அமைந்துள்ளன வாயினும் |
| ,, | 22 | திருமூலர் | திருமூலர் |
| ,, | 24 | படைப்புகளுக்கு | படைப்புக்களுக்குக் |
| 90 | 6 | அவறறை | அவற்றை |
| 92 | 4 | கூறும் | கூறும். |
| ,, | 24 | அறிவநூல் | அறிவுநூல் |
| ,, | 25 | உருபுகள் | உருவுகள் |
| 93 | 16 | உணர்த்துவார் | உணர்த்துவார், |
| 95 | 9 | வற்றில் | தில் |
| ,, | 19 | ஒழுகின் ” உள்ளம் | ஒழுகின், ” “ உள்ளம் |
| ,, | 20 | உணரின் | உணரின் ” |
| 96 | 23 | அறிவர்களுள் (சித்தர் | (அறிவர்களுள் சித்தர் |
| 97 | 8 | ‘ நாலாயிரப் | நாலாயிரப் |
| ,, | ,, | திருவந்தாதி ’ | திருவந்தாதி |

| | | | |
|---|---|---|---|
| 99 | 4 | மகரம் | ழகரம் |
| 100 | 13 | பொருள்படும் | பொருள்படும். |
| 101 | 12 | என் று | என்பது |
| 108 | 10 | சுத்தம | சுத்தம் |
| ,, | 17 | அழுக்கினை | அழுக்கினைச் |
| ,, | 18 | மாக்காப்பு | மாக்காப்பு, |
| ,, | 28 | பூசனை | பூசை |
| 111 | 26 | தமிலே | தமிழிலே |
| 112 | 10 | ஆலயங்களுகளின் | ஆலயங்களிற் |
| 117 | 9 | ஆகமத்துக் | ஆகமத்துட் |
| 122 | 26 | பூப்படைந்து | தம்புதல்வியர் பூப்படைந்து |
| 125 | 19 | மண்பததற்கு | மணப்பதற்கு |
| 127 | 11 | உடையவர்கள் | உடையவர் |
| 133 | 19 | Custom | Castes |
| ,, | 21 | வழக்கங்களையும | வழக்கங்களையும் |
| ,, | 26 | பொறுத்ததாக | பொறுத்தனவாக |
| 134 | 2 | (521 Bom. 497) | (52 Bom. 497) |
| 145 | 13 | மெயகண்டார் | மெய்கண்டார் |
| 146 | 26 | பற்தடு | படுதற் |

# அகவல்

சென்னை மாநகர்த் தங்க சாலை
எண் இருநூற் றைந்தென் னும் அகத்தே
நெல்லை மூதூர் பிறந்த செம்மல்
நல்லறிவாளர் சண்முக சுந்தர
புவனை குருபர மருத்துவத் தலைவர்
தவநிறை பெரியார் தனி அருள் பெற்றுக்
கொடுக்கும் மருந்துகள் குவலயந் தன்னில்
அடுக்கும் யார்க்கும் அமுதம் போல்வன
குட்டம் காசம் குன்மம் கடியநோய்
கட்ட மேகம் கடுநீ ரழிவு
தேட்கடி பாம்புத் தீக்கடி விடங்கள்
முதலிய எந்நோய் தன்னையும் நொடியில்
அதரரி யாமல் அகற்றவல் லனவே
எவ்வகைச் சுரமும் ஐந்து பொழுதினில்
நையத் தொலைத்து நலங்கொடுப் பனவே
தங்கம் சூதம் முத்து மணிகள்
பங்கமின்றிப் பதிந்த செந்தூரம்
ஆயிரம் செலவுசெய் தாற்றிய மருந்து
மாயிரு வுலகில் மறுவில் லாதது
முன்னியது முடிக்கும் முருகன் அருள்போல்
துன்னிய நோயைத் தொலைத் தெல்லாரும்
மன்னிவாழப் நயந்து பயத்தலின்
முருகன் மும்மணிச் செந்தூர மென்னும்
அருமை பெயரொடு அலங்கல் காண்மின்
மாண்புடை மருத்துவம் நீடுழி வாழ்கவே.

**கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்.**